
பாழ்வெளி
உடுவில் அரவிந்தன்

பாழ்வெளி

உடுவில் அரவிந்தன்

பாழ்வெளி
உடுவில் அரவிந்தன்

முதற்பதிப்பு: கார்த்திகை 2017

வெளியீடு: நூலாசிரியர்

முகப்புப்படம்: இணையம்

அட்டை / பக்க வடிவமைப்பு: தானா. விஷ்ணு

பதிப்புரிமை: நூலாசிரியருக்கு

அச்சுப்பதிப்பு: ஆகாயம்பதிப்பகம், இமையாணன், உடுப்பிட்டி

பக்கங்கள்: viii+112

விலை: ரூபா. 350.00

PAAZHVELI
- Short Stories
Uduvil Aravinthan

First Edition: November 2017

Published by: Author

Cover image: Website

Cover and design: Thaana. Vishnu

Copy right: Author

Printed by: Aahayam Pathippakam, Imaiyaanan, Udupiddy.

Pages: viii+112

Price: Rs. 350.00

ISBN: 978-955-38336-0-0

சுட்டிக்குழந்தை நிலாவுக்கு...

நன்றி

தினக்குரல்

சுடரொளி

வெளிச்சம்

கலைமுகம்

ஆதவன்

உள்ளம்

மகுடம்

புதுவிதி

தீராநதி

தளவாசல்

தமிழ்நாதம்

சி.ரமேஷ்

தானா. விஷ்ணு

உள்ளடக்கம்

என்னுரை/vii

அடையாளம் /01
இருப்பு /07
இரை /13
ஈச்சம்பழம் /20
உயிர்ப்பு /28
ஊருணி /36
கல்லறைப்பூக்கள் /42
கூடு /53
சுடலைக்குருவி /59
நிலா /64
பயணம் /75
பாழ்வெளி /82
பேய்வளவு /88
மீளுதல் /96
முள் /104

என்னுரை

என்னுடைய முதலாவது சிறுகதைத் தொகுதியான 'உணர்வுகள்' 1999 இல் வெளியானது. போதுமான சிறுகதைகள் இருந்தும் இரண்டாவது தொகுதியை வெளியிடுவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கத் தவறி விட்டேன் என்றே கூறவேண்டும்.

படைப்புகளுக்கான நூலுருப் பிரசுரவசதிகள் மிகவும் குறைவான இலக்கியப் பரப்பிலேயே வாழ்கின்றோம் என்பது கவலைதரும் விடயமாகும். அத்துடன், நவீன இலத்திரனியற் சாதனங்களின் பெருக்கம் காரணமாகப் பெரும்பாலானோரிடம் வாசிப்புப்பழக்கம் அற்றுப் போய்விட்டதை ஆதங்கத்துடன் சொல்லிக்கொள்கி றோம். இப்படியான சூழ்நிலையில் சில சஞ்சிகைகள் அர்ப்பணிப்பான முயற்சிகளுடன் வெளியாவதைக் கொண்டாடவேண்டியது எமது கடமையாகும்.

நிறைந்த தேடல் படைப்புமொழியின் செழுமைக்கு உதவுவ துடன், தேர்ந்த வாசிப்பு புதிய வடிவங்களுக்கான திறவு கோலாகவும் அமையக்கூடும்.

சில வருடங்கள் தொடர்ச்சியாக எழுதமுடியாமைக்குக் கார ணங்கள் இருந்தாலும், என்னுடைய படைப்புமனம் அதே உணர்வுகளுடன் தவித்திருந்ததை அவ்வப்போது வெளி யான சிறுகதைகள் உறுதிசெய்தன. யாழ்ப்பாணத்தில் மிகவும் அச்சுறுத்தலான சூழலில் நாங்கள் வாழ்ந்தபோது, அந்த நெருக்கடிகளுக்கெதிராக எழுதப்பட்ட சில

சிறுகதைகளும் இந்தத் தொகுதியில் அடங்கியுள்ளன. அதன் காரணமாக அவை தனித்துவமான பதிவுகள் என்றே கருதுகின்றேன்.

என்னுடைய பெரும்பாலான சிறுகதைகள் மானுட அவலங்களையும், கைவிடப்பட்டவர்களின் கண்ணீரையும் பேசுபவை. இந்த மண்ணுக்காகத் தங்களை அர்ப்பணித்தவர்களை ஆராதிப்பவை. ஒப்பனைகளை அடிக்கடி மாற்றுகின்ற நடிகர்களை நிராகரித்துச் செல்பவை. இவ்வாறான பண்புகளைக்கொண்ட படைப்புகளை ஆக்குவது ஒரு நேர்மையான படைப்பாளிக்குரிய அறம் என்றே கொள்ளப்படும். அந்த நேர்கோட்டிலிருந்து விலகாத அகநிலையைத் தக்கவைத்தபடி, தொடர்ந்தும் இந்த மண்ணிலேயே வாழ்வதையிட்டுப் பெருமை யடைகிறேன்.

என்னுடைய சிறுகதைகள் பொதுவெளியில் அறிமுகமான போது, ஓரிரு கதைகளில் தற்செயலாக ஏற்பட்ட உருவ வழுக்களை இங்கு சீராக்கியிருக்கிறேன்.

இந்தச் சிறுகதைகளை உணர்வோடு வெளியிட்ட பத்திரிகைகளுக்கும், சஞ்சிகைகளுக்கும் என்றும் கடப்பாடுடையேன். தானா.விஷ்ணுவின் ஆகாயம் பதிப்பகம் இந்நூலை நேர்த்தியாக அச்சிட்டுள்ளமை மனதுக்கு நிறைவு.

ஆளாக்கிய பெற்றோர்க்கும், இணையான குமுதினிக்கும் அன்பும் நன்றியும்.

மயிலியதனை, தொண்டைமானாறு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077-2271247
மின்னஞ்சல்: uduvilaravinthan@gmail.com

உடுவில் அரவிந்தன்

அடையாளம்

மாலைவெயில் மலைவேம்புகளின் உச்சியிலே மஞ்சள்நிறச் சாயத்தைத் தடவிக்கொண்டிருந்த அமைதியான வேளையிலேதான் நான் அவனைக் கண்டேன். பரமேஸ்வரன் கோவிலுக்கு எதிராகவுள்ள வெளியின் ஓரத்தில் கால்களை ஊன்றிநின்ற சீமெந்துக்கட்டில் தளர்வாக அமர்ந்திருந்தான்.

அதற்குமுன்னர் அவனைச் சந்தித்திருப்பதற்கான எந்தவிதச் சலனமும் என்நெஞ்சில் எழவில்லை. இவ்வளவுபேர் படிக்கும் இடத்தில் அவனுடைய முகத்தை ஞாபகம் வைத்திருப்பதற்கான சாத்தியங்களும் மிகக்குறைவு.

மெல்லவந்து ஈரமாக்கிப் போகின்ற அலையைப்போல அவனைப் பற்றிய நினைவுகள் என்னை அடிக்கடி உரசுவதற்கு, அவன் ஏதோ ஒருவகையில் இங்கு பிரபலம் பெற்றிருக்கவேண்டும். இல்லையேல் என்னுடைய நெருங்கிய நண்பனாக இருக்கவேண்டும். இரண்டுமே இல்லை.

இருப்பினும், அவனிடமுள்ள எது என்னை ஈர்த்தது? அவலங்கள் நிரம்பிய இராப்பொழுது அணுகிக்கொண்டிருக்கும் வேளையில் தனிமையாகப் படித்துக்கொண்டிருக்கும் அவனைப்பற்றிய ஆச்சரிய உணர்வுதான் காரணமா? என்பதை அறியமுடியாதபடி வினாவொன்று என்னுள்ளத்தில் எழுந்து நின்றது.

நினைவுகளைப் புறந்தள்ளியபடி அவனை நெருங்கினேன். நிமிர்ந்தவன் தன்விழிகளைத் தயக்கமாக என்மீது படரவிட்டான். என்னுடைய சிநேக உணர்வைப் புன்முறுவலாக மாற்றீடு செய்தபடி பக்கத்தில் அமர்ந்தேன்.

சபேசனுடன் அன்று தொடங்கிய அறிமுகம் நட்புறவாக இறுகி, அவன் என்வீட்டுக்குப் படிக்க வருமளவுக்கு நீண்டது. இவ்வளவுக்கும் நான் இறுதிவருட மாணவன். சபேசன் அப்போதுதான் ஆரம்ப அடிவைத்த வன்.

அவனுடைய குடும்பநிலைமை என்னுடைய மனவயலை அடிக்கடி உழுதுபார்க்கும். எண்பத்தேழில் இந்திய இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் தந்தையையும், முன்னேறிப் பாய்ந்த எறிகணையால் தாயையும், செம்மணிப்பக்கமாகத் தம்பியையும் தொலைத்தவன்.

அந்தத் துயரங்களை மனக்குழியில் புதைத்துப் புதைத்து, அழுத்தங்க ளின் விளைவாக எல்லாவற்றிலுமிருந்தே ஒதுங்கியிருந்தான். அவனிடமிருந்த தனிமையின் ஒடுக்கமே என்னை வெகுவாக ஈர்த்தது எனலாம்.

சபேசனுடன் அளவளாவும்போதெல்லாம் கல்வி தொடர்பான தேடலில் மட்டுமே நாட்டமுள்ளவனாகத் தன்னை இனங்காட்டினான். எங்க ளால் முன்னெடுக்கப்பட்ட எந்தவொரு எழுச்சி நிகழ்விலும் அவன் பங்குபற்றுவதில்லை. எங்களைச் சூழ்ந்துள்ள நெருக்குதல்களின் போது நாம் பீறிட்டுக் கிளம்பிய சந்தர்ப்பங்களிலும், அவற்றுக் கெதிராக நாம் குரல் கொடுக்கும்போதும் அவன் வெளியிலேயே தன்னை நிலைநிறுத்திக் கொண்டான்.

நான் இதுதொடர்பாக அவனுடன் விவாதிக்கும்போது, எஞ்சிய தங்கைக்காக வாழவேண்டிய அவசியம்பற்றிய வலியுறுத்தல்கள் அவனிடமிருந்து மென்மையாக வெளிப்படும். சபேசனுடைய நோக்க மெல்லாம் விரைவாகப் படித்துமுடித்து, நல்லவேலையில் அமர்ந்து நிறைய உழைக்க வேண்டும் என்பதாகவே இருந்தது.

பரந்த பாலைவெளியில் கண்ணுக்கெட்டாத எல்லையில் சிறுபுள்ளி போலத் தெரியும் வேலைவாய்ப்புப்பற்றிய கனவுப்பூக்களெல்லாம் கருகியநிலையிலேயே நாம் இருக்கிறோம் என்பது அவனுக்குப் புரியாது. அவனுடைய எதிர்பார்ப்பைக் குலைக்கவிரும்பாமல் அவன் கூறுவதை மௌனமாகக் கேட்டுக்கொண்டிருப்பேன்.

அன்று மாலை விளங்காத சில வினாக்களுக்கான விடைகளைத்தேடி அவன் என்னிடம் வந்திருந்தான். வழக்கம்போலச் சைக்கிளை மாமரத்துடன் சரித்தவன், தயக்கமான பார்வையை நகர்த்தினான். முன்விறாந்தையில் நின்ற என்னுடைய சைக்கிளைப் பார்த்ததும் ஒளிரும் விழிகளுடன் கால்களைப் பெயர்த்தான்.

அவன் உள்ளே ஏறியதும் உற்சாகமூட்டும் நோக்கில் புன்னகையை விரித்தேன். முகத்திலுள்ள இறுக்கத்தைத் தளர்த்தாமல் வாயைமட்டும் இலேசாகக் கோணினான்.

'நீ என்ன பாடுபட்டாலும் என்னிலிருந்து சிரிப்பைத் தோற்றுவிக்க முடியாது' என்று சவால் விடுவதைப்போலக் கண்களைக் குறுக்கி என்னை உற்றுப்பார்த்தவன், கையிலிருந்த தாளை நீட்டினான்.

சபேசனைப் பார்க்கும்போதெல்லாம் என்னுடைய விழிகள் அவனுடைய இடதுகையின் மணிக்கட்டுப்பகுதியைத் துளைக்கும். எறிகணைச் சிதறலொன்று அங்கு அழுத்தமாகத் தடம் பதித்திருந்தது. இவ்வளவு பெரியகாயம் ஏற்பட்டும் அவனுடைய கை துண்டாடப்படாத அதிசயம் பற்றி நான் வியப்படைவதுண்டு.

கையிலிருந்த தாளை ஏறிட்டேன். சபேசன் என்னிடம் வரும்போது நிச்சயமாகத் தூயகணிதம் சார்ந்த வினாவுடன் வருவான் என்பது எனக்குத் தெரியும். திரும்பத் திரும்ப வரைந்தாலும் சரியாக வராத ஓவியம்போல, ஏனோ அவனுக்கு அதில் ஒரு திருப்தியின்மை. இவ்வளவுக்கும் நான் ஏதோ தூயகணிதத்தில் கரைகண்டவனில்லை. என்றாலும், சபேசனைவிட மூன்று வருடங்கள் மூத்தவன் என்றவகையிலும், விசேட பாடமாகத் தூயகணிதத்தைப் படிப்பவன் என்பதாலும் எனக்கு ஓரளவு தெரியும்.

விடையைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டேன். நின்று நிமிர்ந்தபோது, முன்னர் இல்லாத திருப்தி சபேசனுடைய முகத்திலே பரவியதைக் காணமுடிந்தது.

சேற்றில் ஆழப் புதைந்து கிடக்கும் கல்லைப்போலச் சலனமற்றிருக்கும் அவனை மேலே கொண்டுவர எண்ணிக் கதையின் போக்கை மாற்றினேன்.

"சபேசன் வாறமாதம் எனக்கு பைனல் எக்ஸாம். அதோட என்னுடைய கம்பஸ் வாழ்க்கை சரி. இனி இந்தச் சந்தோசங்கள் திரும்பிவராது"

பேனாமூடியால் காதைக் குடைந்துகொண்டிருந்தவன் விருட்டென்று நிமிர்ந்தான்.

"எனக்கென்னவோ இங்க படிக்கிறது சந்தோசம் மாதிரித் தெரியேல்லை"

கைலாசபதி அரங்கில் விடுபட்ட காகிதக்கணைபோல அவனுடைய

வார்த்தைகள் வெகுவேகமாக வெளிவந்தன. பேனாவை மூடியினுள் திணித்தவன், மீண்டும் அமைதியாகக் கூறினான்.

"நாங்கள் எங்களுடைய தனித்துவத்தைவிட்டு விலத்திப் போறமாதிரி இருக்கு....."

கடதாசிப்பூ முள்ளொன்று செருப்பையும் தாண்டிக் காலில் ஏறியது போலிருந்தது எனக்கு.

"தனித்துவம்..! சபேசன் இவ்வளவு இழப்புக்களைச் சந்திச்ச நீர் எங்களைவிட்டுத் தள்ளி நிக்கிறதிலை நியாயம் இருக்கலாம். ஆனா அதை நியாயப்படுத்திறதுக்கான காரணம் உம்மட்ட மாறுபட்டிருக்கு"

சபேசனின் முகம் சட்டென்று கூம்பிவிட்டது. என்னையுமறியாமல் குரலிலே ஒட்டிக்கொண்ட கடுமையை எண்ணி வருந்தினேன். அவன் தளர்ந்த குரலில் மெதுவாகச் சொன்னான்,

"அவங்களோடை கொழுவிறது நல்லதில்லை அண்ணை. அதாலை எங்களுக்குத்தான் நட்டம். நீங்கள் அவங்களோடை பிரச்சினைப் பட்டுப்போட்டு ஒளிச்சுத் திரிஞ்சது எனக்குத் தெரியும்"

அடுத்துவந்த நிமிடங்கள் மௌனமாகக் கடந்தன. அதேவேளை எதிரேயிருந்த என் தங்கையின் அறைக்கதவின் திரைச்சீலை இலேசாக அசைந்ததையும் நான் அவதானிக்கத் தவறவில்லை. சபேசன் வந்து அமரும்போதெல்லாம் அந்தச் சலனம் ஏற்படுவ துண்டு. சிலவேளைகளில் அது காற்றின் வேலையாகவும் இருக்க லாம்.

சிந்தனைநாடா அறுந்ததைத் தலையை நிமிர்த்துவதன்மூலம் உணர்த்தியவன், கையிலிருந்த தாள்களை மடித்தான்.

"அண்ணை. நீங்கள் என்னிலை இவ்வளவு அக்கறையாக இருக் கிறீங்கள். அதுக்கு நான் கடமைப்பட்டவன். ஆனாலும் உங்களோடை ஒத்துழைக்க ஏலாமல் கிடக்கு. என்னை நம்பியிருக்கிற தங்கச்சியை அநாதையாகவிட நான் தயாராக இல்லை"

"எல்லோரும் சேர்ந்துதானே...."

என்னுடைய வார்த்தைகளைச் செவிவழியாக உண்ணவிரும்பாத வனைப் போல எழுந்தான்.

"நான் போட்டுவாறன் அண்ணை"

வெளியேறி இருளில் அமிழ்ந்துபோனான்.

மாமரத்தின் தாழ்வான கிளைகளில் உறங்கத்தொடங்கியிருந்த பறவைகள் சலனப்பட்டு ஓய்ந்தன.

சபேசனுடைய வருகையால் என்னுள்ளே கிளறிவிடப்பட்ட எண்ணங்கள் மழைபட்ட சருகாக மெல்லமெல்ல அடங்கத்தொடங்கின. எதிர் நோக்கும் இறுதிப்பரீட்சைக்கான தயார்ப்படுத்தல்கள், தொடரப் போகும் இரவின் அகோரமான ஆட்சி என்பவற்றால் ஏற்பட்ட மன நெருக்குதல்களுடன் எழுந்தேன்.

நள்ளிரவுக்குச் சற்றுமுன்பாகப் பாயிலே சரிந்தேன். இரவின் தீவிர அமைதியோடு நேரம் நகர்ந்துகொண்டிருந்தது. வழக்கமாகக் கேட்கும் வேட்டுச்சத்தங்களைக் கேட்காவிட்டால் உறக்கம் வராது போலிருக்கவே, அந்த ஒலிக்கான எதிர்பார்ப்பில் நான் கிடந்தேன். பாயின் நரம்புகள் என்னுடைய முதுகைக் குடைந்தன.

இமைப்பறவையின் சிறகுகள் சோர்ந்து தளரும்போது, வெகுதொலைவில் வேட்டுக்கள் ஒலித்து என் உணர்வுகளை உலுப்பின.

ஆரவாரமிட்டவை அடங்கிப்போக, ஒரு சுடலைக்குருவிமட்டும் அவலமாக அழுதுகொண்டு போனது. தொடர்ந்த அமைதியில் இரவு மெல்லக் கரைந்தது.

விடியல் மன உளைச்சலையும், உடல் அலுப்பையும் ஆற்றுவது போலிருக்கவே உற்சாகமாக எழுந்தேன். தடைதாண்டும் ஓட்டத்தில் சின்னக் கம்பி எட்டைக் கடக்கும்போது வீதிக்கு வந்தேன்.

செம்மண் தடவிய காய்கறிமூட்டைகள் சந்தைப்பக்கம் நகர, இடையிடையே வெள்ளை உடைகள் வீதியில் கலகலத்தன. காலைப் பொழுதின் வழக்கமான இனிய தூண்டலால் நெகிழ்ந்த இதயத்துடன் பயணித்த என்னை, அரசடிப்பிள்ளையார் கோவிலடியில் பச்சைச் சீருடைகள் வரவேற்றன.

அவர்களுக்கு முன்னால் கொட்டப்பட்ட கத்தரிக்காய்களை ஒவ்வொன்றாகப் பொறுக்கிச் சாக்கினுள் அடைந்துகொண்டிருந்த பரமசிவம் அண்ணரைப் பார்க்கப் பரிதாபம் மேலிட்டது.

என்னைப்பற்றி அறிவதற்காகத் தொடரப்போகும் மிரட்டல்களை எதிர்பார்த்தபடி இறங்கினேன். என்னுடைய பல்கலைக்கழக அடையாள அட்டையை வாங்கியவனின் பார்வையிலே வறண்ட புழுதி கலந்திருந்தது.

"ஒக்கம.....!"

அழுத்தமான தடவல்களுடன் அவன் என்னைப் போகவிட்டான். நான் நகராமல் பரமசிவத்தாருடன் இணைந்து கத்தரிக்காய்களைப் பொறுக்கினேன்.

"நீ விடு தம்பி. நான் பொறுக்கிறன். கோதாரியிலை போவாங்கள் நான் குண்டைக் கொண்டு போறனெண்டு நினைச்சிட்டாங்கள். எனக்கு வாற கொதிக்கு..."

தொண்டைக்குள்ளே கரகரத்த சளியைத் தூவென்று துப்பினார்.

"இந்த இடத்திலை கனகாலத்துக்குப் பிறகு மறிக்கிறாங்கள். நேற்றும் சத்தம் கேட்டது. ஏதும் புதினமே ஐயா" சாக்கின் வாயைக் கோர்த்தபடி கேட்டேன்.

"நேற்று இவ்விடத்திலை கடும் அடிபாடு. உந்த முடக்குக்கு அங்காலை ஒரு இயக்கப்பெடியன்ரை பிரேதம் கிடக்கு"

என்மனம் வெகுவாகக் கனத்துப்போக, மெதுவாகச் சைக்கிளை எடுத்தேன்.

வளைவிலே திரும்பியபோது ஒன்றிரண்டுபேர் அதைப் பார்த்தபடி நிற்பது தெரிந்தது. இதயம் தாவிக் குதிக்க அதை நெருங்கினேன்.

அந்தச் சடலம் மேலாடை கிழிக்கப்பட்டநிலையில் மல்லாந்து கிடந்தது. முகம் கோரமாகச் சிதைக்கப்பட்டிருக்க, அதன் வாய்க்குள் வீதி யோரத்துப் புழுதிமண் நிரம்பியிருந்தது. தலையிலும், நெஞ்சிலும் இரண்டு துளைகள் திறந்திருந்தன. அவற்றிலிருந்து வடிந்து உறைந்த இரத்தத்தை இலையான்கள் சுரண்டிக்கொண்டிருந்தன. முறிந்து திரும்பிய இடதுகையினுள் கைக்குண்டொன்று கிடந்தது. அதைப் பார்த்ததும் என் விழிகள் பெரிதாக விரிந்தன.

இடதுகையின் மணிக்கட்டில் மிகத் தெளிவாகத் தெரிந்தது அந்தத் தழும்பு.

சுடரொளி (2001)

இருப்பு

மெதுவான வேகத்துடன் பரவிப் பாய்கின்ற உப்பாற்றினைப் பார்த்தபடி அமர்ந்திருக்கின்றேன். எனக்கு முன்னாகச் செல்லும் கடற்கரை வீதியையும், தென்மேற்குப் பக்கமுள்ள சிறுநகரையும் இணைக்கின்ற இரும்புப்பாலம் காற்றில் இலேசாக அசைகின்றது.

இந்த வீதியின் ஒருபக்கத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களில் எனக்குப் பழகிப்போன கரடுமுரடான மொழி இடையிடையே ஒலித்துக்கொண்டிருக்கின்றது. காற்றிலே சறுக்கும் கடற்குருவிகளின் ஆரவாரமும் இவற்றோடு தொடர்பில்லாது தனித்துக் கேட்கின்றது.

வீதியோரத்துப் பூவரசின்மேல் எப்போதோ எச்சமிட்டுப்போன பறவையொன்றின் நினைவுத் தொடர்ச்சியாக வளர்ந்த இந்தப் பெரிய மரத்தின் அடிப்புறமே என்னுடைய இருப்பிடமாகவுள்ளது. இந்த மரத்தின் முழுமையான ஆளுகையின்கீழ் முதிர்ந்த பூவரசு ஏறக் குறையக் காணாமலேயே போய்விட்டது.

இயற்கையின் அழகு முழுமையாகக் குலைந்துபோன மண்ணில் எனக்கான நிரந்தர இருப்பிடமாக இந்த மரத்தைக் கொள்வது எவ்வளவு பொருத்தப்பாடானது என்றெல்லாம் நான் சிந்திப்பதுண்டு. தற்போதைய சூழலில் இத்தகைய வினாக்களை மட்டுமே என்னால் பிறப்பிக்கமுடிகின்றது. இவற்றுக்கான விடைகளைத்தேடி என்னைப் போல் இன்னுமொருவர் வரவேண்டும் என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக மானுடத்தின் அவா நிலைத்திருக் கின்றது.

பொது அறம் பற்றிய சாயல்கள் எதுவுமற்ற வழிகளின்மூலமாக எய்து கின்ற உயர்வுகளெல்லாம் வெறுமையையே முடிவாகத் தருபவை. பெரும்பாலான வேளைகளில் ஆள்நடமாட்டமற்றுப் போகின்ற இந்த வீதியும் அதையேதான் வெளிப்படுத்துகின்றது.

இராப்பொழுதுகளில் யாருமற்ற தனிமையுணர்வு என்னைக் கொல் லும். அவ்வேளைகளில் இருட்டுப் போர்வையால் மூடிக்கொண்டு ஒன்றிரண்டு மின்மினிப்பூச்சிகளின் ஒளியோடு உரையாடிக் கொண்டி ருப்பேன். நிலவின் ஒளித்தடத்துக்காகவோ அல்லது பிரகாசமான சுடருக்காகவோ ஏங்குவதைத் தவிர, என்னால் எதுவும் செய்யமுடிவ தில்லை.

ஒவ்வொரு அமாவாசைத் தினங்களிலும் நள்ளிரவு தாண்டிய பின்னர் ஓர் ஆணும், இரண்டு பெண்களுமாக மூன்று உருவங்கள் எனக்கு முன்னால் அமர்ந்திருந்து ஓலமிட்டுப் புலம்பும். இருளின் பிடிப்புக்குள் தொலைதூர நட்சத்திரங்களின் தெறிப்பாக மின்னுகின்ற அந்த ஆறு விழிகளும் என்னை விறைத்துப் பார்த்தபடியிருக்கும். அவர்கள் தங்களுடைய கண்ணீரை மட்டுமே எனக்குமுன் காணிக்கையாக வைத்துக் கதறுவார்கள்.

அவர்களைப்பற்றி எனக்கு நன்குதெரியும். வானம் இருளைப் பூசு கின்ற பிந்திய நேரக்கழிவில் தனியாகப் பயணித்தபோது சிக்கிக் கொண்டவர்கள். சில வருடங்களுக்கு முன்னர் இதே வீதியில் கொடுமையாக நடந்தேறிய சம்பவங்களுக்கு மௌனசாட்சியாக நான் இருக்கக்கூடியதாகவே பக்கத்திலுள்ள சதுப்புநிலத்தினுள் அவர்கள் மூழ்கடிக்கப்பட்டார்கள்.

அந்த மூன்றுபேரிலும் வயதில் மிகவும் இளையவளாகத் தோன்று பவள், மூர்க்கத்தனமான நெருக்கடிக்குள்ளே சிக்கிய நகரத்தின் கடை யொன்றில் வேலைசெய்தவள். ஒவ்வொருநாளும் மாலைவேளை களில் குறைவான பயணிகளுடன் செல்கின்ற கடைசிப்பேருந்தில் வீடு திரும்புபவள். அகாலமாகக் கணவனை இழந்த துயரம் சில மாதங்களைக் கடக்கமுன்னர், சிறுகுழந்தைக்காக வேலைக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் அவளுக்கு.

வாகனநடமாட்டம் மிகவும் குறைந்துபோன அன்றையநாளில்

நண்பியிடம் இரவலாகப் பெற்றுக்கொண்ட துவிச்சக்கரவண்டியில் இந்த இடத்தை வேகமாகக் கடக்க எத்தனித்தபோது வழிமறிக்கப்பட்டாள்.

தன்னுடைய குழந்தையை நினைத்து அவள் எழுப்பிய அவலக்குரல் அந்தக் கடினப்பொழுதிலிருந்து இந்தப் பெருவெளியை நிரப்பிக் கொண்டிருக்கிறது. அருகில் அமைதியாக அசைந்துகொண்டிருக் கும் உப்பாற்றின் ஆழப்பகுதியில் அந்தத் துவிச்சக்கரவண்டி துருவேறிக் கிடப்பது எவருக்கும் தெரியாது.

மற்றைய இருவரும் பாலத்தின் அக்கரையிலுள்ள கோவிலுக்கு வேண்டுதலுக்காக வந்தவர்கள். தங்களுடைய காதலுக்குக் கிடைத்த மறுதலிப்புக்களையெல்லாம் கடவுளிடம் கொட்டிவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தபோது அகப்பட்டுக்கொண்டார்கள். அவனுடைய எதிர்ப்புக்களெல்லாம் ஒரு சில நிமிடங்களில் மௌனமாக்கப்பட்டன. உவர்நீரலைகள் கரையைத் தொடுகின்ற இடங்களில் பொச்சடித்துக் கொண்டிருந்த மீன்களெல்லாம் நடப்பவற்றைப் பார்த்து விறைத்துப் போயிருந்தன.

அவர்கள் இருவரும் புதையுண்டுபோன இடத்திலிருந்து நிறைவேறாக் காதலின் துயரிசை, நிலவொளி சிந்தும் இரவுகளில் மெல்லிதாகக் கிளம்புவதை என்னால் கேட்கமுடிந்திருக்கிறது.

இவற்றைப் போன்ற சம்பவங்கள் பல இடங்களில் நடந்தேறினாலும், இந்த மூன்றுபேருடைய அமைதியற்ற அலைதல் எப்போதும் என்னைக் காயப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

வைகாசி மாதத்தில் பூரணநிலவு நாளின் பகற்போதுகளில் இவர்கள் வீதியில் செல்லும் ஓரிருவரை வழிமறித்துக் காரமான சம்பலுடன், பாற்சோறும் கொடுப்பார்கள். அதைத்தவிர்ந்த ஏனைய நாள்களில் இவர்கள் என்னைக் கவனிப்பதேயில்லை. கண்ட கழிவுகளை யெல்லாம் உண்கின்ற காகங்கள் எனக்கு மேலே எச்சமிடும். மரத்தின் காய்ந்த இலைகள் என்னைச் சுற்றிலும் இறைந்து குவிந்திருக்கும்.

என்னை இங்கே வலிந்து அமரவைத்தவர்கள், தேவைகள் ஏதுமற்ற வெறுங்கல்லாகவே காண்கிறார்கள் என்பதை நான் அறிவேன். அப்போதெல்லாம் தூய்மையான உள்ளம் தருகின்ற வெண்ணிற

மான தேமா மலரொன்றுக்கான ஆவல் எனக்குள்ளே பொங்கி யெழும். ஆசைகளை முற்றிலும் துறந்த எனக்கு, அவ்வாறான எதிர்பார்ப்புக்கள் தோன்றுவதை ஏற்றுக்கொள்ளமுடியாதென்றாலும், பகிர்ந்துகொள்ள யாருமற்ற தனிமையானது ஊறிப்போன தத்துவங்களையெல்லாம் புறந்தள்ளிவிடுவதை நம்பத்தான் வேண்டும்.

கட்புலனாகாத அன்பும், அறமும் கலைக்கப்பட்ட நிலையில் ஓர் இனத்தின் சார்பில் உருக்களை மட்டும் கொண்டாடும் சூழல் இவர்க ளால் வலிந்து உருவாக்கப்படுகின்றது. அதற்கான அடையாள மாகவே எப்போதும் நான் முன்னிறுத்தப்படுகின்றேன்.

ஒருகாலத்தில் வரைபடங்களில்மட்டுமே காணக்கிடைத்த இந்த இடங்களைச் சுற்றிப்பார்க்க வருபவர்கள், வாகனங்களை நிறுத்தி விட்டு இங்குள்ளவர்களுடன் தங்களுடைய மொழியில் உரையாடு வார்கள். அவ்வேளைகளில் இவர்கள் வானத்தை நோக்கிக் கைகளை வீசித் தமது சாகசக்கதைகளை அள்ளித்தெளிப்பார்கள். வந்தவர்கள் வாயைப் பிளந்தபடி சொக்கிப்போய் நிற்பதைப் பார்த்து நான் எனக் குள்ளே நகைத்துக்கொள்வேன்.

கேட்டுக்கொண்டிருக்கின்ற சிறுகுழந்தைகளுக்கு இவையெல்லாம் சிந்துபாத்தின் நெடிய கடற் பயணம் போலவும், அலாவுதீன் கதையில் வருகின்ற மந்திரப்பூதத்தின் மாயங்கள் போலவும் தென்படக்கூடும்.

இந்தக் கதைகளில் ஒளிந்திருக்கின்ற ஓரிரு உண்மைகளுக்கான விலைகள் மிக அதிகம் என்பது இவர்களின் சிலாகிப்புகளுக்குள் மறைந்துபோய்விடும். தன்னிகரற்ற பேரரசுகளெல்லாம் சரிந்து விழுந்தபின்னர், வென்றவர்களால் புனையப்படுகின்ற வீரகாவியங் கள் அமானுடத்தன்மையான பிரமிப்பான பக்கங்களையும், மிகை யான கற்பிதங்களையும் கொண்ட வெற்று வரலாறுகளாகவே கட்ட மைக்கப்படுகின்றன.

இங்குள்ளவர்கள் இன்று காலையிலிருந்தே சுறுசுறுப்பாக ஓடித் திரிந்ததைக் காணமுடிந்தது. இந்த மரத்தைச் சூழ்ந்து வளர்ந்திருந்த பற்றைகள் அவர்களால் வெட்டப்பட்டு நிலம் பளபளக்கின்றது. சுத்த மான நீரில் என்னைக் குளிப்பாட்டி வண்ணங்களால் மெருகேற்று கின்றார்கள். மரத்திலிருந்து கொட்டுகின்ற இலைகள் பட்டால் எனக்கு

நோகுமென்று வலைகளைக் கொண்டுவந்து கூரையமைக்கிறார்கள். பலவிதமாக ஒளித்திவலைகளைச் சிந்தும் மின்விளக்குகள் என்னைச் சுற்றிலும் பொருத்தப்படுகின்றன. தேமா மலரொன்றின் வருடலுக்காக ஏக்கத்துடன் காத்திருந்த எனக்காக வெண்ணிறமான அலரிப்பூக்களையும், தாமரை மொட்டுக்களையும் அள்ளிவந்து குவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாளைக்குக் காலையில் வழமைபோலப் பாற்சோறும், பழரசங்களும் படைத்து, ஊதுபத்திப் புகைகளால் என்னைத் திணறவைப்பார்கள். இந்த வீதியில் செல்பவர்களை இழுத்துவைத்து ஊட்டிவிடாத குறையாக அன்பைச் சொரிவார்கள். இவை போதாதென்று என் னைப் புகழ்ந்து போற்றுகின்ற கரடுமுரடான சுலோகங்களை ஒலி பெருக்கி, இந்தப் பிரதேசத்தை அதிரவைப்பார்கள். இவையெல்லாம் எனக்குப் பழகிப்போய்விட்டது.

முன்னிரவுக்குள் வேலைகளை நிறைவுசெய்த திருப்தியில் இவர்கள் தமது கட்டடங்களுக்குள்ளே போய் முடங்கிக்கொள்கின்றார்கள். இவர்களுடன் ஒட்டியபடி அலைகின்ற நாலைந்து நாய்களும் எசமான விசுவாசத்துடன் பின்னாலேயே சென்றுவிட்டன. அலங்கரிக்கப்பட்ட சிம்மாசனத்தில் பதுமையாக நிறுத்தப்பட்ட ஒரு மன்னனைப்போல நான் மட்டுமே இப்போது எஞ்சியிருக்கிறேன்.

மேற்கே இறங்குகின்ற மங்கிய நிலவு நள்ளிரவு கடந்துவிட்டதை உணர்த்துகின்றது. உயிரைப் பிழிகின்ற தாலாட்டுப் பாடலொன்று தொலைதூரத்துச் சதுப்புநிலத்திலிருந்து மெல்லிதாகக் கேட்கத் தொடங்குகின்றது. ஒளிச்சுடரொன்று அந்தப் பாடலைச் சுமந்து செல்வதைப்போன்று நீர்ப்பரப்பின் மேலாக அசைகின்றது.

வடக்கிலிருந்து திரண்டுவருகின்ற கருமேகங்களும், குளிர்ந்த காற்றும் பெருமழையின் முன்னோடாகத் தெரிகின்றன. வானத் திரையில் இடையிடையே தோன்றி மறைகின்ற மின்னற் தூரிகைகள் பல்லா யிரம் சித்திரங்களை என்னுள்ளே கீறுகின்றன.

மிகநீண்ட காலப்பரப்பில் பல்வேறு பரிமாணங்களைப்பெற்று விரிவ டைந்த என்னுடைய அறம்சார்ந்த கொள்கைகள், கடைசியில் குறித்த வொரு இனக்குழுமத்திடம் சிக்கிச் சிதைந்துபோயுள்ளமை ஒரு முடிவினை நோக்கி என்னை நகர்த்துகின்றது.

தோற்றுப்போன அரசனொருவனின் மனநிலையிலிருந்து மெல்ல மெல்ல விடுபடுகின்றேன். எனக்குரிய சரியான இடத்தைத் தெரிந்து கொண்ட சிந்தனைத்தெளிவு கிளர்ந்து பெருகுவதை என்னால் உணர முடிகின்றது.

பெருமழை பொழியத் தொடங்குகின்றது.

இரண்டாவது தடவையாக நான் அடைந்துகொண்ட முழுமையை அங்கீகரிப்பதைப்போல இடியும், மின்னலும் மாறிமாறி உக்கிரமாகத் தெறிக்கின்றன. பெருகியோடும் உப்பாறு கரையைக் கடந்து இந்த மரத்தை நெருங்கிவருகின்றது.

மெல்ல எழுந்து நகரத்தொடங்குகின்றேன். நான் அமர்ந்திருந்த இடத்தில் வெண்மணல் சொரிகின்றது. அந்த மூன்றுபேரும் அமிழ்ந்து கிடக்கின்ற சதுப்புநிலத்தை நோக்கி அசைந்து செல்கின்றேன். நிம்மதியிழந்து, நீதிகேட்டு அலைந்து திரிகின்ற அவர்களுடைய ஆத்மாக்களுக்குத் தேவையான அமைதியை இப்போது என்னால் வழங்க இயலும்.

மின்னற் கீற்றொன்று மழைக்கோடுகளைக் கிழித்துக்கொண்டு நானிருந்த மரத்தை நோக்கிப் பாய்கின்றது. அதன் தொடர்ச்சியாக வானம் வெடித்தது போலப் பேரோசையொன்று எழுகின்றது.

எனது அடையாளமாக இவர்களால் முன்னிறுத்தப்பட்ட அந்தப் பெருமரம் தீப்பற்றி எரியத் தொடங்குகின்றது.

மகுடம் சிறுகதைச் சிறப்பிதழ் (2014)

இரை

அங்கொன்றும் இங்கொன்றுமாக முளைத்து உயரக் கிளம்பிய பனைமரங்களில் தன்னுடைய வெறுமையை நிறைவுசெய்திருந்தது அந்தப் பரந்தவெளி.

நகரிலிருந்து காலை புறப்பட்டால் உச்சிவெயிலின் உக்கிரம் மண்டையைக் குத்திக் கிளறக்கூடியதாகச் சுமார் பத்துமைல்கள் பயணிக்க வேண்டும். அவ்வாறு சென்றால் என்னுடைய கிராமத்தினுள் நுழையலாம். சுருக்கங்களுடன் கூனிக் குறுகிநிற்கும் வயோதிபர்களைப் போலச் சரிந்து நெளிந்துகிடக்கும் பூவரசமரங்களின் ஆரம்பங்கள் பனைமரங்களின் அணிவகுப்புக்கு முன்னால் வரும்.

காய்ந்து புழுதிபறக்கும் வெண்மணலும், இறுகிப்போன சவரும் சேர்ந்து கடல்சார்ந்த ஊர் அது என்பதைச் சொல்லாமல் சொல்லும். என்றாலும், அது எனக்குச் சொர்க்கம்.

நான் பிறந்தது, மண்ணளைந்து விளையாடியது எல்லாமே அங்கு தான். இன்று அறுபதை எட்டிய நிலையில் தொழில் நிமித்தமும், பாதுகாப்பின் பொருட்டும் நகர்ப்பகுதியில் வசிக்க நேர்ந்தாலும் என் நினைவைவிட்டு அகலாத அழகான ஊர் அது.

வறட்சியில் வாடி வருபவர்களுக்கு அடுத்து வருகின்ற ஆலமரம் ஆறுதல் தரும். அந்த நிறைவை எதிர்பார்த்து ஆலமரத்தடியை அண்மித்துக்கொண்டிருந்த என்னைக் கொக்கொன்று விரைவாகக் கடந்து போயிற்று. நீண்ட கால்களைப் பின்னோக்கித் தள்ளியபடி தாழப் பறக்கின்ற அதனுடைய இலாவகம் என்னை இரசிக்கவைத்தது.

மரத்தின் இதமான நிழலில் நனைந்தபடி சைக்கிளை நிறுத்தினேன். கோவிலின் சுவரோரம் நிமிர்ந்துநின்ற மண்பானையில் குப்புறக் கிடந்த சிரட்டை என்னுடைய கண்களுக்குப்பட்டது. வெயிலில் தோய்ந்து வியர்வையில் மிதப்பவர்களுக்கு அது அமுதசுரபி. அதைக் கண்டதும் நாகரிகமும், வறட்டுகௌரவமும் விட்டுவிலகிப் போகும்.

பானையைச் சரித்து நீரைப் பருகினேன்.

அவன் பக்கத்திலிருந்த காவலரணிலிருந்து என்னைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

நான் அந்தப் பாதையால் சென்றுவருவதை அவதானிப்பதன் மூலமும், கொண்டு செல்லும் பழவகைகளில் ஒன்றிரண்டைப் புன்னகைப்போர்வையில் அனுமதியின்றி எடுப்பதனாலும் என்னுடைய முகத்தை அவன் நினைவில் வைத்திருப்பான். பச்சைத் தொப்பியின் கீழே பளபளத்த அவனுடைய விழிகள் வழக்கம்போலக் கிண்டியபின் பயணத்தைத் தொடரவைத்தன.

இந்த ஆலமரத்தைத் தாண்டி அப்பாலே போனால் ஒன்றிரண்டு குடிமனைகள் தெரியத்தொடங்கும். சரிந்துகிடக்கும் வேலிகளின் நீக்கல்களினூடாக அவ்வப்போது தோன்றி மறையும் சில தலைகள் உயிர்ச்சுவடுகள் உள்ளதைச் சொல்லும்.

சரியாக ஐந்துநிமிட ஓட்டத்தில் என்னுடைய வீட்டுக்கு வந்துவிட்டேன். முற்றமெங்கும் நிறைந்திருந்த குப்பைகள் இரண்டு கிழமைகளின் பின்னோக்கிய நகர்வை மட்டுமல்லாது, இன்னொன்றையும் எனக்கு உணர்த்தின. அதை உறுதிப்படுத்தும் உத்தேசத்தில் பிரிந்திருந்த வேலிக்கூடாக என் விழிகளை எறிந்தேன்.
அந்த வீடு மூச்சற்றுக்கிடந்தது.

நான் வந்ததை அறிந்தவுடன் தேநீரையும், புன்னகையையும் கலந்து கொண்டு கலீரெனக் கொலுசு சப்திக்க வருகின்ற தாரணியையோ, எனக்குக் கூடமாட உதவிசெய்யும் சிவநேசனையோ காணோம். அவர்களுடைய ஐந்துவயது மகனுக்காக நான் வாங்கி வந்த தின்பண்டங்கள் பையினுள்ளே விழிபிதுங்கின.

"கொரக்! கொரக்!"

மாமரத்தின் தாழ்வான கிளையிலிருந்து பையை நோட்டமிட்டுக் கொண்டிருந்த காகமொன்றைக் கண்டதும் என்னுள்ளே எரிச்சல் பொங்கிப் பரவியது.

"எல்லாம் தாரணி குடுக்கிற இடம்" புறுபுறுத்தேன்.

தாரணியிடம் ஒரு பழக்கமுள்ளது. காகங்களைக் கண்டால் அரிசியி லிருந்து அன்றைய உணவுவரை அவற்றுக்குச் சிந்தி விருந்து வைப்பாள். அதனால் காகங்கள் அவளுக்கு அண்மையில் கூட வந்து போகும். அதைப் பார்த்ததும் எனக்கு வெறுப்புக் கிளம்பும். சும்மா இருக்கும் காகங்களைச் சோம்பேறியாக்குகின்றாளே என்பதல்ல என் கவலை. இவ்வளவு வளர்ந்த பெண் தன்னுடைய வயதுக்குரிய இயல்புடன் இல்லாமல் அதற்குப் புறநடையாக நடந்துகொள்கிறாளே என்ற எண்ணம் எனக்கு. ஆயினும், சிவநேசன் அதைப் பார்த்து இரசிப்பான். போதாக்குறைக்குத் தானும் ஓரிரு துணுக்குகள் எடுத்து வீசுவான்.

"காகங்களை உப்பிடிப் பழக்கக்கூடாது சிவநேசன். அதுகள் பொல் லாத பறவைகள். நாளைக்குக் கையிலை இருக்கிறதையும் தட்டிக் கொண்டு போய்விடும்"

எச்சரிக்கும் என்னை அவனுடைய புன்னகை எதிர்கொள்ளும். 'இதெல்லாம் சிறுபிள்ளைத்தனமல்ல. ஒருவகை இரசனை இயல்பு. நேச உணர்வு. இரக்கவெளிப்பாடு' என்கின்ற தொனி அந்தப் புன்னகையில் அமிழ்ந்திருப்பதாக எனக்குப்படும்.

இன்று இருவரையும் காணாதபடியால் வேறு காகங்கள் வரவில் லையோ? கல்லொன்றை எடுத்து வீசியெறிந்தேன். தாச்சி விளை யாட்டில் உச்சுவதைப்போல விலத்திக்கொண்டு பறந்தது அந்தக் காகம்.

என்னுடைய வீட்டின் கதவைத் திறந்தேன்.

வெம்மையான நெடி என் முகத்தில் மோதியது. இதேபோன்ற வெம்மையான உணர்வை நான் அடிக்கடி உணர்ந்திருக்கிறேன். 'அவர்கள்' என்னை நெருங்கும்போதெல்லாம் அதன் தாக்கத்தை அனுபவித்திருக்கிறேன்.

சிவநேசனிடமோ, தாரணியிடமோ இது தொடர்பாக ஒருநாளும் விவாதித்தது கிடையாது. அவர்களுக்கு அவ்வாறான உணர்வுகள் ஏற்படாது என்ற திடமான முடிவு எனக்குள் இருந்ததே காரணமாகும்.

சிவநேசன் கற்பிக்கும் பாடசாலைக்கு அருகிலேயே அவர்கள் தங்கியிருந்தார்கள். அவ்வீதியால் செல்லும்போது என்னைக் கண்டதும் நலம் விசாரிப்பார்கள். 'கதிர் அங்கிள்' என்பது அவர்கள் எனக்கிட்ட செல்லப்பெயர். அவர்களின் வீட்டுக்கதைகளில் நான் என்னுடைய புலன்களைச் செலுத்துவதில்லை. வார்த்தைகளில் சோகங்களைத் தடவிச் சொன்னாலும் அவர்களால் என்னை இளகச்செய்ய முடிவதில்லை. நடந்தேறிய கொடூரங்களைச் செய்து முடித்தவர்கள் எங்கு, யாரிடம் உருக்கமாகக் கதையளந்திருப் பார்களோ என்ற நெருடல் இருந்தமையால் முழுக்கவனம் கொடுத்து அவற்றைச் செவிமடுக்க நான் நினைத்ததேயில்லை. அவ்வேளை களில் வேதனை கலந்த பெருமூச்சை மட்டுமே என்னால் வெளிப் படுத்த முடியும்.

மண்டைதீவிலிருந்து தாவிய எறிகணை என் மனைவியைக் கொத்திக்கொண்டு போனதால் எனக்குள் அத்தகைய எதிர்ப்புணர்வு வந்திருக்குமோ என்பதை ஆராயும் நிலையிலும் நான் இல்லை. சுருக்கமாகச் சொன்னால் எனக்கு அவர்களைப் பிடிப்பதேயில்லை.

ஆனால், சிவநேசனும் தாரணியும் நின்று கதை கேட்டுக்கொண்டிருப் பார்கள். மென்மையான உள்ளங்களில் இரக்கத்தை உருவாக்கக் கூடிய எதுவும் ஆழப்பதியும். அவர்களுடைய மகனும் மாமா என்ற வாறு பின்னால் திரிவான். சிலவேளைகளில் அவர்களுடன் சிறிது தூரம் போய்விட்டு வருவான். சிவநேசனோ தாரணியோ பதட்டம் எதுவு மின்றிப் பார்த்து நிற்பார்கள்.

அவர்களுடனான பழக்கம் பலவகையான அனுகூலங்களைத் தருவதாகச் சிவநேசன் என்னிடம் கூறுவான். ஊரடங்குநேர உலாவு தல்கள், பாடசாலை விவகாரங்கள், ஏனைய பதிவுகள் சம்பந்தமான அத்தனை விடயங்களிலும் அவர்களுடைய ஒத்துழைப்புப் பூரணமாக இருப்பதாகச் சொல்வான். அவ்வேளைகளில் நான் எனக்குள் நகைத்துக்கொள்வேன்.

பொத்தென்று ஓட்டின்மேல் ஏதோ விழ என் சிந்தனை உடைந்தது. மாங்காயாக இருக்கும். போகும்போது பிடுங்கிச் செல்லவேண்டும் என நினைத்துக் கொண்டேன்.

வீட்டினுள்ளே குடியிருந்த வெம்மை காற்றின் நுழைவினால் காணாமல்போயிருந்தது. இவ்வளவுதூரம் சைக்கிளில் வந்த களை யைப் போக்க என் நாக்கு தேநீரைத் தேடியது. மீண்டும் சிவநேசனின் வீட்டுப்பக்கம் எட்டிப் பார்க்கும் உத்தேசத்துடன் வெளியே வந்தேன்.

அவர்களின் வீட்டுமுற்றத்தில் நின்ற சைக்கிள் எனக்குள் நம்பிக் கையை வளர்க்கவே அங்கு விரைந்து சென்றேன்.

சிவநேசன் மகனுடன் எங்கோ புறப்படத் தயாராகக் கதவைப் பூட்டிக் கொண்டு நின்றான். தலை கலைந்து , கண்கள் சிவந்து அவனுடைய நிலை பார்க்கப் பரிதாபமாக இருந்தது. வழக்கமான புன்னகை இல்லை.

"சேர்...!" என்னைக் கண்டதும் சிவநேசனின் குரல் இடறியது.

'இவன் கலங்குமளவுக்கு என்ன நடந்திருக்கும்?'

என்னுடைய நினைவுத்திரையில் ஊகக்கதிர் ஓடியலைந்தது.

"தாரணி கோவிச்சுக்கொண்டு நம்மட வீட்டைவிட்டுப் போய்ட்டா சேர்"

என் விழிகளைச் சந்திக்கும் வலிமையிழந்தவனாக வானவெளியில் எதையோ தேடினான்.

"ஏன் ? என்ன நடந்தது?"

தனிப்பட்ட குடும்ப விவகாரங்களில் தலையிடும் அநாகரிக எண்ணம் எனக்கில்லையாயினும், சிவநேசன் படுகின்ற வேதனையைத் தணிக்கும் நோக்கில் கேட்டேன்.

"முந்தநாள் காலமை ஸ்கூலுக்கு வெளிக்கிடும்போது ஒருநாளு மில்லாமல் சின்னச் சண்டை. சனிக்கிழமை ரவுணுக்குப் போய்ப் படம் பார்ப்பம், தாய் வீட்டை போவம் எண்டு கேட்டவ. ஸ்கூல் விளையாட்டுப் போட்டி வாறபடியால் நேரமில்லை எண்டிட்டன். உடனை மூஞ்சையை நீட்டிக் கொண்டு..."

அவனுடைய மௌனம் என்னை விழுங்கியது.

"வார்த்தைகள் வளர்ந்து, வீட்டை விட்டுப்போறன் எண்டு சொல்லிற அளவுக்கு வந்திட்டுது..."

சட்டென்று நிறுத்தினான். என்னை ஒருகணம் பார்த்தவன், இடறிய குரலில் மெதுவாகச் சொன்னான்,

"ஏதோ ஒரு எண்ணத்திலை அடிச்சுப்போட்டன்..! பிறகு ஸ்கூலுக்குப் போய் யோசிச்சுப் பார்த்தன். சரியான கவலையாப் போச்சுது. தாரணி ஒருநாளும் ஒண்டும் கேட்கிறதில்லை. மத்தியானம் மகனையும் கூட்டிக்கொண்டு வந்து பார்த்தா.... வீடு சும்மா சாத்திக் கிடக்கு. ஆளில்லை...!"

"விசாரிச்சுப் பார்த்தனீரோ?"

"இங்க எல்லா இடமும் தேடியாச்சு. இனிச் சங்கானைப் பக்கம் தாரணியின்ரை இனசனம் வீட்டை பாக்கவேணும். அங்க போகத்தான் வெளிக்கிடுகிறன்"

அதற்குமேலும் அவனுடைய அவசரத்தையும், ஏக்கத்தையும் பறித் தெடுக்க விரும்பாமல் வழியனுப்பி வைத்தேன்.

தளர்ந்த நடையுடன் வீதிவரை சென்று சைக்கிளில் ஏறும் சிவநேசனை யும், எதுவும் புரியாமல் அமர்ந்திருக்கும் மகனையும் பார்க்க வேதனை மிகுந்தது.

'எவ்வளவு அமைதியாக இருக்கும் தாரணி புயலாகப் புறப்படுமளவுக்கு அவளுடைய மனம் பாதிக்கப்பட்டுள்ளதா? குடும்பம் என்றால் சின்னச் சின்னச் சண்டைகள் வரத்தான் செய்யும். அப்படி வராவிட்டால் வாழ்க்கை இயந்திரகதியிலேதான் நகரும். பிறகு இருவரையும் சந்தித்து ஆறுதலாகக் கதைக்கவேண்டும்'

மனவோட்டத்தைத் தடுத்து நிறுத்தி, மறுபடியும் வீட்டுக்குத் திரும்பி னேன். இதயம் கனத்துப் போயிருந்தது.

கொண்டுவந்த உணவை உண்டுவிட்டு வீட்டைத் துப்புரவாக்க முனைந்தேன். வீட்டுக்கூரையில் வேர்விட்டிருந்த ஒட்டடைகள் தும்புத்தடிக்கு எட்ட மறுத்தன. பனையோலைகளால் ஓர் ஒட்டடைக்

கம்பை உருவாக்குவது என்னுடைய வேலையை இலகுவாக்கும் என்ற எண்ணம் மனதில் மிதக்க, அதைச் செயலாக்கும் நோக்கில் கத்தியை எடுத்துக்கொண்டு வீட்டின் பின்பக்கம் வந்தேன்.

வேலிக்கருகில் காவலாளியைப்போல ஒரு வடலி நின்றதாக ஞாபகம் எனக்கு. அருகில் சென்றபோது கட்டாக்காலி மாடுகள் வடலியைச் சிரைத்திருப்பதைக் கண்டேன்.

என் பார்வை வேலியேறிக் குதித்து அப்பால் விரிந்துகிடந்த வெளியில் நீண்டது. சற்றுத் தூரத்தில் சிறுவடலிகள் குழுமிநின்று இரகசியம் பேசிக்கொண்டிருந்தன. இரத்தினம் கனகச்சிதமாகக் கள்ளமாடு வெட்டுவதற்கு அவை பெரிதும் துணைசெய்யும்.

முறிந்துகிடந்த வேலியைத் தாண்டி அவற்றைநோக்கி நடக்க ஆரம்பித்தேன். நெருங்க நெருங்க அந்த வடலிகளுக்குள்ளே காகங் கள் இறங்கி ஏறுவது தெரிந்தது. இன்னும் சில அடிகள் வைத்ததும், உப்புக்காற்று ஒருவித அழுகல்மணத்தை என்னுடைய நாசியி னுள்ளே திணித்துவிட்டுப் போனது.

'இரத்தினத்தைக் கண்டால் நல்ல ஏச்சுக் கொடுக்கவேண்டும்' என எண்ணிக்கொண்டேன். வழக்கம்போல மாட்டுக்கழிவுகளை வீசி விட்டுப் போயிருக்கிறான். இனி நாலைந்து நாள்களுக்கு நாற்றம் எல்லா இடமும் எட்டிப்பார்க்கும்.

கிட்ட நெருங்கியதும் காகக்கூட்டம் கத்திக்கொண்டு சர்ரென்று மேலெழுந்தது. அவற்றுக்கு நல்ல வேட்டைபோலும்.

வடலியைப் பற்றி மெதுவாக வளைத்தேன். குறுக்கே நின்ற ஓலை விலகியதும் கொலுசு நெளிந்தபடி ஒரு கால் தெரிந்தது.

தாரணியை அந்தநிலையில் கண்ட திகைப்பில் என் வாயிலிருந்து காற்றுக்கூடக் கிளம்பவில்லை. வேதனையுடன் மேலே நிமிர்ந்து பார்த்தேன்.

காகங்கள் இன்னமும் வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

தினக்குரல் (2001)

ஈச்சம்பழம்

பஸ்ஸின் நெருக்குதலினூடு வெளியே பிதுக்கித் தள்ளப்பட்டேன். வைத்தியசாலைவரை நடந்து பிரதானவாயில் வழியாக உள்ளே நுழைய, மருந்தின்நெடி வழக்கம்போலக் குப்பென்று என் முகத்தில் மோதியது. கையிலிருந்த கடிகாரத்தில் நேரத்தை உறுதிசெய்தபடி வெளிநோயாளர் பிரிவைநோக்கி விரைவாக நடக்கத்தொடங்கினேன்.

காலை வணக்கங்கள் புன்னகைகளுடன் என்னைக் கடந்துபோயின. தமிழில் வணக்கம் சொல்ல விரும்பும் டொக்டர் ரஞ்சித் பெர்ணாண்டோவும் தன்னுடைய முயற்சியைக் கைவிடவில்லை.

குழந்தைகளின் வீறிடல்களால் தன்னை இனங்காட்டும் மகப்பேற்று விடுதியைத் தாண்டினேன். ஸ்ரெச்சரின் விரைவான தள்ளல் ஒலி என் முதுகைத் துளைத்து அதிரவைக்கவே ஒதுங்கித் திரும்பினேன்.

பலத்த ஆரவாரத்துடன் வந்த ஸ்ரெச்சரில் சுயநினைவற்ற நிலையில் படுத்திருந்த பெண்ணின் முகம் சுழன்றடிக்கும் என் நினைவோட்டத்தைக் கொக்கிபோட்டு இழுத்தது.

'இவள்..! ஒருவேளை சுமதியாக இருக்குமோ? இருக்காது. அவள் எவ்வளவு பூரிப்புடன் இருப்பவள். இந்தளவுக்கு வாடிவதங்கிப் போய்...! இருக்கவே இருக்காது'

ஒன்பது மணியைத் தாண்டிக் கொண்டிருந்த கடிகாரமுள் என் கடமையை உணர்த்தியது. அவசரநோயாளர் பிரிவை நோக்கி நகர எத்தனித்த என்னுடைய கால்களுக்குத் தடைபோட்டேன். சலனப்பட்ட

மனத்துடன் நடக்கத் தொடங்கினேன்.

வரிசையாக அடுக்கப்பட்டிருந்த நீண்டவாங்குகளில் ஒழுங்காக அமர்ந்திருந்த நோயாளர்களின் பலரகப் பார்வைகள் என்னை மௌனமாக வரவேற்றன. சீறிப் பாய்ந்தபடி வாசலில் நின்ற அட் டென்ரன்ற் நடராசா என்னைக் கண்டதும் கப்பென்று அடங்கினா ன்.

'நோயாளர்களுடன் எப்படி நடந்துகொள்ளவேண்டும்' என நான் அடிக்கடி இதமாக வலியுறுத்துவதாலோ என்னவோ, என்னைக் கண்ட தும் அடங்கிப்போகின்ற மரியாதையினைக் கடைப்பிடிக்க அவன் தவறுவதில்லை.

மெல்ல என்னுடைய இருக்கையிலே போய் அமர்ந்துகொண்டேன். வருகின்ற நோயாளர்களைப் பரிசோதிப்பதிலும், மருந்துகளை எழுது வதிலும் என் கைகள் ஈடுபட்டிருக்க, மனமோ தன் இயல்பை வெளிப்ப டுத்தத்தொடங்கியது.

*****

யாழ் நகரமங்கையின் கரிய கூந்தல் பிரிந்து சிதறியிருக்க, அதில் ஒரு இழைபோல நீண்டிருந்த வீதியில் எங்களையும், மருத்துவ மாணவர் களையும் சுமந்தபடி அந்தவாகனம் விரைந்துகொண்டிருந்தது. வாகனத்தின் பிற்பகுதி மாணவர்களின் பாட்டுக்களாலும், கூத்துக்க ளாலும் அமர்க்களப்பட்டு அதிர்ந்தது. ஒருபுறம் விரிந்திருந்த பரந்த வெளியிலே பட்டும் படாமலும் மேய்ந்து வந்த உப்புக்காற்று அவர்களு டைய ஆரவாரத்தை அப்படியே அள்ளிச்சென்றது.

மாணவப்பருவம்தான் எவ்வளவு இனிமையானது! தீயின் தீண்டுதல் பெரியளவில் அணுகாது, நிலவின் தண்மையை அனுபவிக்கமுடி கின்ற காலப்பகுதி அது.

வாகனத்துக்கு எதிராக ஓடிக்கொண்டிருந்த வீதியோரப் பற்றைகளை வெறித்தபடி அமர்ந்திருந்த நான், இதையே எண்ணினேன்.

பத்துவருடங்களுக்கு முன்னர் பல்கலைக்கழகத்தில் பயிலும்போது இருந்த பரபரப்பான இறுக்கத்துக்கும், தற்போதைய அமைதியின்

நெருக்குதலுக்கும் எவ்வளவு வித்தியாசம்! இலங்கை இராணுவத்தின் சுற்றிவளைப்புக்களுக்கிடையே படிக்கத்தொடங்கி, இந்திய அமைதிப் படையின் அட்டூழியங்களுக்கு மத்தியில் பட்டம்பெற்று வெளியேறி யது எங்கள் அணி. மருத்துவக்கல்வி தொடர்பாக நிறைந்த அனுபவ அறிவை இக்காலப்பகுதியிலேதான் எம்மால் முழுமையாகப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

வாகனம் நிறுத்தப்பட்ட அதிர்வில் நிமிர்ந்தேன்.

வெம்மையான வீதியைவிட்டு விலகிக் குளிர்ந்தமரங்களின் நடுவே ஊடுருவியிருந்தோம். மாணவர்கள் தேவையான பொருள்களை எடுத்துக்கொண்டு இறங்கத்தொடங்கினார்கள். இறுதியாக இறங்கிய என்னைச் சில்லென்ற காற்று தழுவிக்கொண்டது. அந்தப் பிரதேசம் முழுவதையும் பார்வையால் மெல்லமெல்ல வருடினேன்.

எம்மைப் புதினமாகப் பார்ப்பவர்கள் வந்து குவியத்தொடங்க, அவர்களைக் கடந்த என் விழிகளின் தெறிப்பில் அவள் மின்னினாள். அந்த இல்லத்தின் சூழ்நிலைக்குச் சற்றும் பொருந்தாதவளாக இருந்த அந்தப்பெண், முட்கம்பிவேலியினூடாகக் கைகளை நீட்டி எதையோ பறித்துக் கொண்டிருந்தாள்.

எல்லோரும் உள்ளேநுழைய, நானும் அவளை அலட்சியம் செய்தபடி பின் தொடர்ந்தேன்.

புரபசர் சிவபாதம் தலைமையில் எங்களுடைய குழு அங்கிருந்த அத்தனைப்பேரையும் பரிசோதித்தது. குருதியமுக்கம், சலப்பரி சோதனை, குருதிப் பரிசோதனை என எல்லாவகையான சோதனை களையும் செய்துமுடிக்க மதியம் ஒருமணியைத் தாண்டியது.

மதிய உணவு உண்ணவேண்டும் என்ற அவர்களின் அன்புக் கோரிக்கையைப் புறக்கணித்துவிட்டு வெளியே வந்து, எங்கள் வாகனத்திலிருந்த உணவுப்பொதிகளைப் பிரித்தோம். நான் எப்போ தும் போலவே யன்னலோரம் அமர்ந்தேன். என் விழிகள் தன்னிச்சை யாக முட்கம்பிவேலியோரம் தாவின.

அவள் அருகிலிருந்த சிறுமண்டபத்தின் படியில் அமர்ந்து எங்க ளையே பார்த்துக்கொண்டிருந்தாள். அதைக் கண்டதும் என் மனம்

கசிந்தது. சாப்பிட மனமின்றி உணவுப்பொதியை எடுத்தவாறு அவளை நெருங்கிச் சென்றேன்.

அந்தப் பெண்ணுக்குச் சுமார் இருபது வயதிருக்கலாம். அவள் அணிந்திருந்த சீத்தைச்சட்டையில் அங்குமிங்கும் இலேசாக அழுக்குப் படிந்திருந்தது. அவளுடைய தலைமயிர் கண்டபடி பின்னப்பட்டிருந்தது. வாயின் ஓரத்தில் ஈச்சம்பழக் கயர் வெண்மை யாகப் படிந்து காய்ந்து கிடந்தது. அவள் சப்பித்துப்பிய எச்சங்கள் காலடியிலே குவிந்துகிடந்தன. அவளுடைய அழகான விழிகளி லிருந்த கவர்ச்சியான குழந்தைத்தனம் என்னைக் கவர்ந்தது.

மெதுவாக அருகில் அமர்ந்தேன். அவளிடம் என்னைக் கண்ட மிரட்சியெதுவும் தோன்றவில்லை.

"தங்கச்சிக்கு என்னபேர்?"

அவளுடைய பார்வையிலும், செயல்களிலுமிருந்தே மனவளர்ச்சி யின் மட்டத்தைப் புரிந்துகொண்டு அதற்கேற்றாற்போல வினாவைத் தொடுத்தேன்.

"ம்...?"

வாய்க்குள்ளே நிறைந்திருந்த ஈச்சங்கொட்டைகளைத் துப்பிவிட்டு என்னைப் பார்த்தாள்.

"பிள்ளைக்கு என்னபேர் எண்டு கேட்டனான்" பொறுமையை நிறைத் துக் கொண்டு மீண்டும் கேட்டேன்.

கண்களைப் படபடவென்று அடித்தவள், வாயைப் புறங்கையினால் அழுந்தத் துடைத்துக் கொண்டு சிரித்தாள்.

"எனக்கோ..? என்ரைபேர் சு...ம...தி. எப்பிடி அச்சாப் பேரே...?"

"நல்ல அச்சாப் பேர். அப்ப சுமதியின்ரை அம்மா அப்பா எங்க?"

"அம்மா...?" என்றவள் தொடர்ந்துகாட்டிய மௌனத்தின் தீவிரம் என்னைத் தாக்க, கதையின் போக்கை வேறு திசைக்கு மாற்றினேன்.

"சுமதிக்கு இந்தச் சாப்பாடு பிடிக்குமே...?"

உணவுப்பொதியைப் பிரித்துக் காட்டினேன். இலேசாகத் தயங்கிய வள், பின்னர் லபக்கென்று எட்டிப் பறித்து விரைவாகச் சாப்பிடத் தொடங்கினாள்.

என்னுடைய விழிகள் வேலிக்கப்பால் வீதியோர வெட்டவெளியிலே சடைத்திருந்த ஈச்சம்பற்றைகளை வெறித்தன. மரத்தின் உச்சியில் நடுத்தண்டின் இருபக்கமும் பிரிந்த சிற்றிலைகள் கூரான முட்களில் முடிந்திருந்தன. உயரத்தில் மிகக் குறைவாகக் காணப்பட்ட அந்த மரங்களில் கறுப்பும், சிவப்பும் கலந்து கொத்தாகப் பழுத்துச் சிலிர்த்திருந்த ஈச்சம்பழங்கள் எவராலும் இலகுவாகப் பறிக்கக்கூடிய விதத்திலேயே தெரிந்தன.

அசையக் கூடியவை இயன்றவரை தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் அறிவைப் பெற்றிருக்கும். அசையும் ஆற்றலற்றவை அதற்கேற்ற இசைவாக்கங்களைக் கொண்டிருக்கும். அசையக்கூடியவற்றுக்கு அந்த அறிவு இல்லாதபட்சத்தில்....!

வேதனைமேலிடச் சுமதியைத் திரும்பிப் பார்த்தேன். அவள் சாப்பிட்டு முடித்துவிட்டுப் பாவாடையை உயர்த்தி வாயைத் துடைத்துக் கொண்டி ருந்தாள்.

'பெரும்பாலும் எல்லாப் பெண்களுக்கும் அழகையும் நளினத்தையும் அள்ளிக் கொடுக்கும் இயற்கை, கட்டாயம் தேவையான மனவளர்ச் சியை மட்டும் சிலரிடம் விட்டுவைப்பதில்லையே! ஏன்...?'

"தேவகி! என்னப்பா நீர்? உம்மட சாப்பாட்டை அவளுக்குக் குடுத் திட்டீர்!"

வாகைச் சருகுகளுடன் சேர்ந்து உதிர்ந்த வார்த்தைகள் என்னைத் திரும்பச் சொல்லின.

டொக்டர் மாலதி புன்சிரிப்புடன் நின்றிருந்தாள்.

"பாவம் மாலதி. இவள் இன்னும் சின்னப்பிள்ளை மாதிரி. எப்பிடி இதுக்குள்ளாலை தப்பி...!"

"ஏன் தேவகி! இங்க அப்பிடி ஏதாவது நடக்கும் எண்டு சொல்லு றீரே?"

"அப்பிடிச் சொல்லேல்லை. நல்லதுகெட்டதைப் பகுத்தறிய முடியாத நிலை இவளுடையது. சுய பாதுகாப்புப்பற்றிச் சிந்திக்கமுடியாமல்.... இவள்...!"

"அப்பிடியெண்டால் இவங்களுக்கெண்டு தனியான அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி அதைச் சேவை மனப்பான்மையுள்ள பெண்களே நிர்வகிக்கிற நிலை வரவேணும் எண்டு எதிர்பார்க்கிறீர்போல? எனக் கெண்டால் இங்க இந்தப்பிள்ளை பாதுகாப்பா இருக்கிறமாதிரித் தெரியுது"

மாலதி சொன்னதைக் கேட்டு மௌனத்தில் மூழ்கினேன்.

'உடல் ஊனமுற்றவர்களுக்கென்று எத்தனையோ அமைப்புக்கள் இயங்குகின்றன. இவ்வாறான மனவளர்ச்சி குன்றிய பெண்களுக் கென்று முழுமையாகச் சேவை நோக்கோடு அமைப்பொன்றை நடாத்த முயற்சிப்பது எந்தளவுக்குச் சாத்தியம்? யார் இதைத் தொடக்கி வைப்பது?'

"தேவகி! வாரும் போவம். வான் வெளிக்கிடப்போகுது" என்றவாறு மாலதி எழுந்தாள். அவளைத் தொடர்ந்து மெல்ல நடந்தேன்.

சுமதி மென்மையாகக் கையை அசைத்து விடைகொடுத்தது வீடுவந்து சேரும்வரை என் நெஞ்சைவிட்டு அகலவில்லை.

அதற்குப் பிறகு வந்த இரண்டு வருட உந்துதலில் சுமதியைக் கிட்டத் தட்ட மறந்தேவிட்டேன்.

*****

"டொக்டர்! நான் போகட்டே?" என்ற குரல்கேட்டுத் திடுக்குற்று இவ்வுலகுக்கு வந்தேன்.

'சே...! என்ன மடத்தனம்...? பேசன்ரை இருத்திப் போட்டு என்னுடைய யோசினையிலை இருந்திருக்கிறன்!'

என்னை நானே திட்டிக்கொண்டு நோயாளியைப் பரிசோதித்து மருந்தை எழுதிக் கொடுத்தேன்.

அதற்குமேல் நோயாளர்களைப் பார்க்க மனம் இடந்தரவில்லை. அந்தப் பெண்ணை உடனடியாகப் பார்க்கவே ஆவல் மிகுந்தது.

உள்ளகப் பயிற்சிவைத்தியர் இராகவனை அழைத்து இருத்திவிட்டு அவசரநோயாளர் பிரிவை நோக்கி விரைந்தேன். முந்திச்செல்கின்ற மனதைத் துரத்தும் உத்தேசத்தில் எட்டிவைக்கப்படுகின்ற என்னுடைய காலடிகள் பதட்டத்துடன் பதிந்தன.

''ஏன் இப்படிப் பதட்டப்படுகின்றேன்? அந்தப் பெண் என்னை அவ்வளவுக்குப் பாதித்துவிட்டாளா?'

அவசரநோயாளர் பிரிவை அண்மித்தபோது மகப்பேற்றுச் சிகிச்சை நிபுணர் டொக்டர் இராஜேஸ்வரி வெளியேறி வந்தார். எப்போதும் மலர்வுடன் காணப்படுகின்ற அவருடைய முகத்திலிருந்த வாட்டம் என்னைத் துணுக்குறச் செய்தது. மௌனமாக நின்று தயங்கினேன்.

"டொக்டர் தேவகி! என்னவிஷயம்?"

என்னுடைய மனத்தாக்கத்தைப் புரிந்துகொண்டவர் போலக் கேட்டார்.

"மெடம்..... அந்தப் பேஷன்ற்.....நயினுக்கு வந்த சீரியஸ் கேஸ்...."

"அந்தப் பிள்ளையை உங்களுக்குத் தெரியுமா?" அவருடைய குரலில் ஆச்சரியம் ஒட்டிக் கொண்டது.

"அது மெடம்... முந்தி காம்ப் போகும்போது பார்த்தனான். அந்தப் பிள்ளை மாதிரித்தான் இருந்தது. அதுதான்...."

"ஓ...!"

"என்ன பிரச்சினை மெடம்?"

"இந்தப் பிள்ளை எதையோ வாங்கிக் குடிச்சிருக்கு. அபோட் பண்ணி கடுமையான பிளீடிங்.... கொஞ்சம் கஷ்டம்தான்....ஐ வில் ட்ரை" என்றவாறு தன்னுடைய அறைக்குச் சென்றார்.

'கடவுளே! முன்பு நான் நினைத்தது சரிதான். என்றாலும் சுயமாகச் சிந்தித்துக் கருக்கலைப்புச் செய்யுமளவுக்கு இவளுடைய அறிவு முதிரவில்லையே. அப்படியானால் என்ன நடந்திருக்கும்? ஒரு வேளை அவள் சுமதியில்லையோ? எதற்கும் அதை முதலில் உறுதி செய்வோம்' என எண்ணியபடி அந்த அறையினுள் நுழைந்தேன்.

பட்டென்று என் இதயம் பிளந்தது போல உணர்ந்தேன்.

உள்ளே கட்டிலில் சுமதி படுத்திருந்தாள். இடுப்பிலிருந்து கால்வரை வெள்ளைத்துணி போர்த்தப்பட்டிருந்தது. குழந்தைத்தனமாகச் சிரிக்கும் அவளுடைய விழிகள் மென்மையாக மூடியிருந்தன. கன்னங்கள் இரண்டும் இலேசாக ஒட்டியிருந்தன. அருகிலிருந்த நேர்ஸ் குருதிய முக்கத்தை அவதானித்துக் கொண்டிருந்தாள்.

"சிஸ்டர்! இந்தப் பிள்ளையைக் கொண்டு வந்த ஆட்கள் ஏதாவது சொன்னவங்களா?" நேர்ஸிடம் விசாரித்தேன்.

"ஓம் டொக்டர். இது ஒருமாதிரி ஆளாம் எண்டு...." நேர்ஸ் தயங்கியபடி இழுத்தாள்.

'அடி அப்பாவிப் பெண்ணே! இதுபோல இன்னும் எத்தனை இடிகளைத் தாங்கப்போகிறாய்? உருப்படியாக உள்ளவர்களாலேயே வாழ்வின் அர்த்தங்களை முழுமையாகப் புரிந்துகொள்ள முடிவ தில்லை. உன்னால் எப்படிப் பிரித்தறியமுடியும்? நினைவிழந்து கிடக்கும் நீ இப்படியே நிரந்தரமாக உறங்கிவிடுவது ஒன்றுதான் உனக்கு ஏற்றவழியா? அப்போதுதான் உனக்கு எவருடைய தொந்தர வும் இல்லாமலிருக்குமா?' என் உள்ளம் ஓலமிட்டது.

எதையுமே உணராதவளாக அந்தப் பேதை அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தாள்.

வெளியே எல்லாம் வழமையான அவசரத்துடன் இயங்கிய படியிருந்தன.

கலைமுகம் சிறுகதைச் சிறப்பிதழ் (2000)

உயிர்ப்பு

அவள் அமர்ந்திருக்கிறாள்.

என்னுடைய அறையிலிருந்து பார்க்க அது மிகநன்றாகத் தெரிகிறது. அறைக்கதவை மறைத்துப்போடப்பட்ட திரைச்சீலை இடையிடையே விலகும்போது அவள் தோன்றி மறைகின்றாள்.

கலங்கியவிழிகளில் எதிர்பார்ப்பின் சாயல் அப்பியிருக்க, நானிருக்கும் அறையின் கதவையே பார்த்துக்கொண்டிருக்கிறாள். பக்கத்தில் பசைபோல ஒட்டியிருந்த சிறுமி அவளுடைய மகளாக இருக்க வேண்டும், விபரம்புரியாத வயதின் இயல்பை வெளிப்படுத்துப வளைப்போல, போய்வருவோரை வேடிக்கை பார்க்கிறாள்.

நேற்று முன்தினம்வரை அந்தப் பெண்ணை எனக்குத் தெரியாது. ஆனாலும், அவளுக்கென்று என்னால் தயார்ப்படுத்திவைக்கப்பட்ட வார்த்தைகளை எவ்வாறு வெளியேற்றுவது என்பதில் எனக்குள்ளே பெரும் மனப்போராட்டம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

திறந்துவைக்கப்பட்ட புத்தகமொன்றின் பக்கங்கள் காற்றின் கனமுத்தங்களால் படபடப்பதுபோல என் நினைவுகள் மீளத்திரும்பு கின்றன.

*****

காலைப்பொழுது தனக்குரிய அத்தனை அம்சங்களும் அடங்கியதாக வழமைபோல அழகாகவும், ஆரவாரமாகவும் இருப்பதாக எனக்குத்

தோன்றிற்று. மாலைநேரம் மனதுக்கு இதந்தரும். அதுவே அமைதியின் இணையற்ற அற்புதமான இருக்கை. இருந்தாலும், உற்சாகபானத்தை ஊட்டக்கூடியது காலைதான். யன்னலோடு நின்ற என்மனதில் இந்த ஆரவாரம் அதையே உற்பவித்தது.

நேரே வெளிவாயிலுக்கப்பால் பரபரப்பான வீதி தெரிந்தது. கனத்த புகையைக் கக்கும் சாதாரண வாகனங்களும், போய்வருவோரை இலட்சியம் செய்யாத இராணுவ வாகனங்களும் வீதியை அசுத்த மாக்கின.

இவை எவற்றிலும் புலன்களைச் செலுத்தாது தம்முடைய அன்றாடப் பிரச்சினைகளுக்குள் மூழ்கிப்போன மக்களால் அவ்விடம் உயிர்ப்புப் பெற்றது போலிருந்தது.

உட்புறம் வாய்க்காலோடு அண்டிச் சடைத்திருந்த மல்லிகைக்கொடி நீராடியபெண்ணைப்போல நின்றது. இரவுக் கலவியின் அடையாள மாகத் தான் சூடிய மலர்களை ஆங்காங்கே சிந்தியிருந்தது.

இந்த அழகுக்கோலம் 'சுத்தமாக்கப்படுதல்' என்ற போர்வையில் அழிக்கப்படப்போகின்றது. நாள்தோறும் நான் காண்கின்ற 'அழகு அழிதல்' நிகழ்வை எதிர்பார்த்திருந்த என் மனவோட்டத்தின் இடையீடாக அந்தக் குரல் மிகமென்மையாக ஒலித்தது.

"எக்ஸ்கியூஸ் மீ டொக்டர்!"

திரும்பினேன்.

அதீத ஒப்பனை எனக்கு ஏன் ? என்பதுபோன்ற அழகு. சுமார் முப்பது வயதிருக்கும். அவசரமாக அழுத்தப்பட்ட குங்குமம் அவளுடைய மனஉளைச்சலை வெளிக்காட்ட முயல்வது போலிருந்தது.

மூக்கின் நுனிக்குத் தாவமுயலும் கண்ணாடியை ஒற்றைவிரலால் நிமிர்த்தியபடி சொன்னேன்.

"சொல்லுங்கோ..."

"டொக்டர் ஸ்ரீதரன்..... அனுப்பினவர்..."

அவளுடைய குரலில் பிசிறுதட்டியது.

அவளை உட்காரும்படி சைகைசெய்துவிட்டு அமர்ந்தேன். என்னுடைய நெற்றியிலிருந்த வினாக்குறியை உணர்ந்தவள்போலத் தன்னிடமிருந்த கொப்பியை நீட்டினாள். வாங்கிப் பிரித்து என்னுடைய கண்களை நிதானமாக நகரவிட்டேன்.

"ரவிக்குமார் 31, இருபாலை" என அடையாளமிடப்பட்டிருந்த அந்தக் கொப்பியிலுள்ள கிறுக்கல்கள் டொக்டர் ஸ்ரீதரனுடையவை என்பது எனக்குத் தெரியும். அவர் தன்னுடைய முயற்சிகளைக் குறிப்பிட்டு, மேலதிக பரிசோதனைகளுக்கு என்று எனக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

நிமிர்ந்தேன்.

என் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்த அந்தப் பெண்ணின் விழிகளில் நீரின் பளபளப்புத் தெரிந்தது. அந்தப் பெண்ணுடன் உரையாடுவது மேலதிக பரிசோதனைகளுக்கு உதவக்கூடும் என்ற நம்பிக்கைமேலிட, அவளிடம் வினாக்களைத் தொடுக்க ஆரம்பித்தேன்.

"மிஸிஸ் ரவிக்குமார்! உங்களைப்பற்றி, உங்கட குடும்பத்தைப்பற்றிச் சொல்லுங்கோ"

ஒருகணம் என்னை உற்றுப் பார்த்தவள், பின்னர் யன்னலினூடாக வேறெங்கோ வெறித்தாள். அகன்று விரிந்த வானவெளியில், அதற்கப்பால் எதையோ தேடுவதைப் போன்ற ஏக்கம் அந்த விழிகளில் தெரிந்தது.

"என்ரை வாழ்க்கை...! உறவுகள் ஒண்டுமில்லாமல், நானே எனக்குள்ள எல்லாத்தையும் தேடி...! எல்லாம் அவருக்காகத்தான். என்ரை பெயர் வைதேகி. அவரும் நானும் சின்னவயதிலையிருந்து ஒரேவகுப்பிலைதான் படிச்சம். அப்பதொடக்கம் எங்களுக்குள்ள ஒரு நெருக்கம். அந்தவயதிலை ஏற்படுகிற கவர்ச்சியாக இல்லாமல்..." அவளுக்குள்ளே கனவுவிரிந்ததுபோல விழிகளை மலர்த்தினாள்.

"பிறகு....?"

"வழக்கம்போல எதிர்ப்பு. வீட்டிலை அப்பா நெருப்பெடுத்தார். அடிச்சு

நொறுக்கினார். பொறுக்கமாட்டாமல் ஒருநாள்....." என்றவள் நீண்ட பெருமூச்சு விட்டுக் கொண்டே சொன்னாள்,

"ஓடிப்போனம்...."

"ஓ...!"

"கையிலை காசில்லை. அங்க இங்க கடன்பட்டு லண்டனுக்குப் போனார். பிறகு மகள்தான் எனக்குத் துணை"

கைக்குட்டை கண்ணீரை ஒற்றியெடுக்க, மூக்கை உறிஞ்சிக் கொண்டாள்.

"அப்ப போனவர் அஞ்சுவருசம் கழிச்சு போன டிசம்பர்தான் வந்தவர்... கைநிறையக் காசோட! அண்டைக்கு முழுகிப்போட்டு வெய்யிலுக் குள்ளாலை போட்டுவந்தவர். பிடிச்ச காய்ச்சல் விடுகுதில்லை. எல்லாரும் டெங்கு எண்டு பயப்படுத்துகினம்" விம்மினாள்.

வாழ்க்கை என்பது எவ்வளவு விசித்திரமானது! எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்து, ஒன்றாகி ஒன்றுக்கொன்றாகி...! இந்த உள்ளு ணர்வுகளின் உற்பத்திமையம் நிச்சயமாக ஆச்சரியமூட்டக்கூடியது தான்.

நான் கண்ணாடியைக் கழற்றி மேசையில் வைத்தபடி சொன்னேன்,

"எதுக்கும் சோதிச்சுப் பார்ப்பம். நீங்கள் நாளைக்குக் கொண்டுவந்து அட்மிட் பண்ணுங்கோ. அதோட உங்களையும், மகளையும் சோதிக்க வேண்டிவரலாம்....! பயப்படாதையுங்கோ. தொற்றுநோய் எண்டபடி யாலை அப்பிடிச் செய்யிறது சிலவேளைகளிலை நன்மையைத் தருகுது"

கொப்பியை வைதேகியிடம் திருப்பிக் கொடுத்தேன். நன்றி கூறிவிட்டுத் தளர்ந்தநடையுடன் திரும்பிநடந்தாள். அவள் சென்றபின்பும் திரைச்சீலை ஆடி அசைந்து அவளால் ஏற்படுத்தப்பட்ட சலனத்தைத் தொடர்ந்தவண்ணமிருந்தது.

என் மனமும் அதுபோலவே...!

*****

எண்ணவோட்டத்தின் நடுவில் திரைவிழவே நிமிர்ந்துபார்த்தேன். வைதேகி இப்போதும் அதே வாங்கில் அமர்ந்திருந்தாள். அவளுடைய மகள் மடியிலே தலைவைத்து உறங்கிப்போயிருந்தாள். ஆஸ்பத்திரியின் ஆரவாரங்களையும், அழுத்தத்துக்குள்ளாக்கும் பிரத்தியேக நெடியையும் மீறிய உறக்கம் அந்தச் சின்னப்பெண்ணை ஆட்கொண்டிருந்தது.

என்னுடைய இருபதுவருட வைத்திய அனுபவத்தில் எத்தனையோ அவலங்களைச் சந்தித்துவிட்டேன். இராணுவத்தின் கோரப்பிடியில் அகப்பட்டு, நசிந்து சிதைந்து ஆஸ்பத்திரியில் குவிக்கப்பட்ட சடலங்களைக் கண்டு மரத்துப்போன என்னுடைய நெஞ்சில் மென்மையான உணர்வு மெல்ல மெல்ல முகிழ்ப்பதாக உணர்ந்தேன்.

இடிமேல் இடியாகச் சொல்லி வைதேகியை வேதனைப்படுத்த வேண்டியுள்ளதே என்றகாய்விலே என்மனம் துவண்டது. அட்டென்ரன்ற் நாகராசாமூலம் அவளை உள்ளே அழைப்பித்தேன்.

விரைவாக நுழைந்தவள் உதடுகள் துடிக்க என்னை ஏறிட்டாள். அமர்ந்தவளின் நடுங்கும் விரல்கள் கொண்டுவந்த உணவுப் பொதியில் இறுகப் பதியமுற்பட்டன.

"ரவிக்குமாருக்குச் சாப்பாடு குடுக்கேல்லைப்போல...?" நேரடியாக விடயத்தில் இறங்குவதைத் தவிர்த்தேன்.

"இல்லை டொக்டர். இனிமேல்தான் போகப்போறன்..... அவருக்கு ஒண்டுமில்லைத்தானே?"

"என்ன சாப்பாடு மிஸிஸ். ரவிக்குமார்?"

"இடியப்பம். அதோட அவருக்குப்பிடிச்ச உருளைக்கிழங்குச் சொதி..... கப்பிப்பால்விட்டு..."

"வெரிகுட்"

"அவருக்கு ஒண்டுமில்லைத்தானே?"

அழுகை உடைவதற்குத் தயாராவது தெரிந்தது. நான் தெரிவு செய்து வைத்திருந்த வார்த்தைகளை மெல்லமெல்ல வெளிவிடத் தொடங்கினேன்.

"மிஸிஸ் ரவிக்குமார்... நீங்கள் படிச்சவர்...."

வைதேகியின் முகத்தில் இருட்திரை விழுந்தது.

"டொக்டர்...!"

"உங்கட மிஸ்ரருக்கும், உங்களுக்கும் எலிசாரெஸ்ற் பொஸிற்றிவ். அதாவது எய்ட்ஸ் தொற்றியிருக்கு. அதோட நீங்கள் கர்ப்பமா இருக்கிற படியால் வயிற்றிலை வளருகிற குழந்தைக்கும்...."

திறந்தவாய் மூடாமல் திகைப்புடன் என்னைப் பார்த்தவள், இடறிய குரலில் மறுத்தாள்.

"டொக்டர். நிச்சயமா நான் நம்பமாட்டன்...."

"எய்ட்ஸ் ஏற்பட வெவ்வேற காரணங்கள் இருக்கு. இருந்தாலும், நீங்கள் நம்பிறமாதிரி..."

"இல்லை...!"

அழுகையையும், மௌனத்தையும் ஒன்றாகக் கலந்தவள்,சட்டென்று மேசையிலே கவிழ்ந்தாள். உடல் குலுங்கியது. அவளுடைய மகள் ஏதும் புரியாதவளாகப் பயத்துடன் என்னைப் பார்த்து மிடறுவிழுங்கினாள். அந்தச் சிறுபெண்ணின் நோக்கில் நான் அவளுடைய அம்மாவை அழவைத்த அரக்கனாக இருக்கக்கூடும்.

நான் சிறிதுநேரம் மௌனமாக இருந்தேன்.

வைதேகியின் அழுகை குறைந்து கேவலாகி, இறுதியில் விசிப்புக்களுடன் நின்றுபோனது.

"மிஸிஸ் ரவிக்குமார்!"

அவள் இன்னமும் கவிழ்ந்த நிலையிலேயே இருந்தாள்.

"நீங்கள் கண்டபடி யோசிக்காதையுங்கோ. கொஞ்சம் முயற்சி செய்தால் உங்கள் இரண்டுபேருடைய வாழ்நாளையும் நீடிக்கச் செய்யலாம். உங்கட மகளை நினைச்சாவது....."

மெல்லநிமிர்ந்தவள் பக்கத்தில் நின்றமகளை இழுத்து அணைத்துக் கொண்டாள். அவளுடைய முகத்தில் ஒருவித தெளிவு ஏற்பட்டிருந்த தைக் காணமுடிந்தது. தன் மகளுடைய முகத்தைப் பார்த்துக்கொண்டு சொன்னாள்,

"அவர் லண்டனிலை இருக்கேக்க வெள்ளைக்காறியளோட கூத்த டிக்கிறார் எண்டு கதைவந்தது. அப்பாவின்ர கட்டுக்கதை எண்டு நினைச்சன். உப்பிடிச் செய்வார் எண்டு எதிர்பார்க்கேல்லை."

பொங்கும் மன உணர்வுகளை வார்த்தைகளாக வெளிப்படுத்துவது அவளுக்கு ஆறுதலாக இருக்கும் என்பதால் நான் எதுவும் பேச வில்லை.

மெல்ல எழுந்தாள்.

"நீங்கள் செய்த உதவிகளுக்கு நன்றி டொக்டர். நான் முதல் வேலையா என்ரை வயிற்றைக் கழுவப்போறன். அது பிறந்து துன்பப்படக் கூடாது..... போட்டுவாறன்"

திரும்பி நடந்தாள். நான் அவளைத் தடுக்கவில்லை.

அந்தப் பிஞ்சு அவளுடைய விரலை இறுகப் பற்றியவாறு இலேசான துள்ளலுடன் அடிகளை எடுத்துவைத்தது. அப்பாவைக் காணப் போகும் சந்தோசம் அதன் உள்ளத்தில் முகிழ்ந்திருக்கலாம்.

என் மனம் பாரமற்றுப்போனதை உணர்ந்தேன். அவர்களுக் கிடையிலான அன்புப் பரிமாறல்கள் நோயினால் ஏற்படும் உளப் பாதிப்பை நிச்சயமாகக் குறைக்கும் என்பதோடு, நோயின் ஆணிவேர் சமூகத்தினுள் ஊடுருவுவதும் தடுக்கப்படும் என்ற நம்பிக்கை என் நெஞ்சை நிறைத்தது. எழுந்து யன்னலோரம் வந்து வீதியைப் பார்த்தேன்.

தங்களுடைய உறவுகளைப் பார்க்க வருகிறவர்களும், போகிறவர்

களுமாக வெளிவாசல் அமளிப்பட்டது. அந்த நெரிசலினூடாக நகர்ந்த இரண்டு உருவங்கள் என்னுடைய கண்களைக் கொழுவி இழுத்தன.

தன் மகளைஅணைத்தபடி வைதேகி!

அதற்குள் ரவிக்குமாருக்கு உணவைக் கொடுத்துவிட்டு....!

அது எவ்வாறு சாத்தியம்? வெறுங்கையுடன் போகிறாளே...! அப்படி யானால்....!

திகைப்பு மேலிடத் திரும்பிப் பார்த்தேன்.

அவள் ஆசையாகக் கொண்டுவந்த உணவுப்பொதி என்னுடைய மேசையில் அநாதையாகக் கிடந்தது.

உள்ளம் (2001)

உளருணி

கேணியடிச் சந்தி அதிகாலையிலிருந்தே பரபரப்பாக இருக்கிறது. வீதியோரத்தில் நாலைந்து தனியார் பேருந்துகள் வரிசையாக நிற்கின்றன. வெண்மையான ஆடைகளை அணிந்த சுற்றுலாப் பயணிகள் அங்குமிங்கும் நடமாடித் திரிகிறார்கள். சிலர் கேணியினுள்ளே எட்டிப் பார்க்கிறார்கள். இன்னும் சிலர் களுமல்லியின் பெட்டிக்கடையில் மொய்த்திருக்கிறார்கள். கேணிக்குப் பின்னாலுள்ள வெற்றுக்காணியில் பாற்சோறு தயாராகிக் கொண்டிருக்கிறது.

நான் கடையிலே பொருள்களை அடுக்கிவைத்தபடி காத்திருக்கிறேன். காலையிலிருந்து வியாபாரம் ஒன்றும் நடக்கவில்லை. மிகுந்த மனச் சோர்வுடன் என்னுடைய கடையை நோட்டமிடுகிறேன்.

வட்டமான பனையோலைத்தட்டில் ஈரலிப்பான வெற்றிலைக் கூறுகள். அதற்குப் பக்கத்தில் ஒரு பை நிறையப் பாக்குச்சீவல்கள். இன்னொரு தட்டிலே பனங்கட்டிக் குட்டான்கள். சாக்கினால் சுற்றப்பட்ட புகையிலைப் பாடங்கள். நாலைந்து கண்ணாடிப் போத்தல்களில் இனிப்பு வகைகள். தாழ்வாரத்திலே தூங்குகின்ற வாழைக்குலைகள். இன்னும் சில அத்தியாவசியப் பொருள்கள். ஒரு சிறிய கடையின் முதலாளி யென்று சொல்வதற்கு இவை போதுமானவை.

என்னுடைய தந்தை இங்கே நீண்டகாலமாக வியாபாரம் செய்திருக்கிறார். கேணியடி ஐயா கடையென்றால் மிகப்பிரபலம். அவருடைய காலத்தில் வாழைக்குலைகளும், வெங்காய மூட்டைகளும்,

புகையிலைச்சிப்பங்களும் தென்பகுதிக்குப் பயணிக்கும். அவற்றை ஏற்றிச் செல்லும் பாரவூர்திகள் எங்கள் கடையடியில் ஒன்றன்பின் ஒன்றாகக் காத்திருக்கும்.

இனக்கலவரங்களின் காரணமாகப் போக்குவரத்துக்கள் தடைப் பட்டதுடன், எங்களுடைய வாகனங்களும் மதவாச்சியில் வைத்து எரிக்கப்பட்டன. அந்த ஏக்கத்தில் அவரும் நோயாளியாகிப் படுக்கை யிலே இழுபட்டு இறந்துவிட்டார். அன்றைக்குச் சரிந்த வாழ்க்கையை இன்றுவரை நிமிர்த்தமுடியாமல் நான் தத்தளித்துக் கொண்டிருக்கி றேன். ஆனால், ஐயாகடையென்ற பெயர்மட்டும் பகட்டாக நிலைத் திருக்கிறது.

ஆற்றாமையின் பெருமூச்சுடன் வீதியைப் பார்க்கிறேன்.

"லாபாய்! லாபாய்! கித்துள்! மீகிரி! ..... ரம்புட்டான்!"

களுமல்லி வியாபாரத்தின் விறுவிறுப்பில் உற்சாகமாகக் குரல் கொடுக்கிறான்.

பௌர்ணமியை அண்டிய தினங்களில் இந்தச் சந்தி திருவிழாப் போலக் களைகட்டும். பெட்டிக்கடைகளில் உருண்டையான கித்துள் பனங்கட்டிகளும், எருமைத்தயிர்ச் சட்டிகளும், ரம்புட்டான் பழங்களும் அழகாகக் காட்சிப்படுத்தப்படும். களுமல்லியைப்போல அரைக்காற் சட்டையணிந்த வியாபாரிகள் கொச்சையான மொழியிலே வழிப் போக்கர்களைக் கூவியழைப்பார்கள்.

கேணியைப் பார்ப்பதற்காகக் காடுகளையும், மலைகளையும் கடந்து வருபவர்கள், கித்துள் பனங்கட்டிகளை ஆவலுடன் வாங்குவார்கள். அவற்றைத் திரும்பவும் தங்களுடைய கிராமங்களுக்குக் கொண்டு செல்வார்கள். அவர்கள் என் கடைப்பக்கம் திரும்புவதேயில்லை. அவர்களை வேடிக்கை பார்ப்பதிலேயே என்னுடைய பகற்பொழுதுகள் கழிந்துவிடும்.

அதேபோன்று, இந்த வீதிவழியாகப் பெருநகரை நோக்கிச் செல்பவர்க ளும் பெட்டிக்கடைகளையே நாடுகிறார்கள். என்னுடைய கடையிலே விலைப்படாமல் தேங்கிக்கிடக்கும் பனங்கட்டிகள் கசிகின்றன. வாழைப்பழங்கள் கறுத்து ஒவ்வொன்றாகக் கீழே விழுகின்றன.

ஆச்சி இருந்தாலாவது பழங்களைக் கொடுக்கலாம் என்ற நினைப்பு

எனக்குள் எழுகின்றது. அவளையும் கொஞ்சநாள்களாகக் காணோம். ஏமாற்றத்தின் பெருவலியுடன் கேணியைப் பார்க்கி றேன்.

இந்தக் கேணியைப் பற்றிப் பல கதைகள் செவிவழியாக அறியப் பட்டுள்ளன. இது ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னர் தானாகத் தோன்றியதாக நம்பப்படுகின்றது. இங்குள்ள விவசாய நிலங்களுக்கு மட்டுமல்லாது, அயலிலுள்ள ஊர்களுக்கும் ஆதாரமாக விளங்கியதாகச் சொல்வார்கள். இது ஆழமறியாத, புதிர்கள் நிறைந்த நீருலகாக எல்லோரையும் பிரமிக்கவைக்கின்றது.

கேணியிலுள்ள பெரிய துவாரத்தில் ஐந்து தலைகளுள்ள வெள்ளை நாகமொன்று நெடுங்காலமாகக் குடியிருப்பதாகவும், நன்றாக இருட்டியபிறகே அது வெளிப்படுவதாகவும், அதன் தலையிலுள்ள செந்நிறமான இரத்தினக்கல்லைக் கவர்வதற்குப் பலர் முயற்சித்ததா கவும் இங்குள்ள முதியவர்கள் பேசிக்கொள்வார்கள். கேணியில் நிகழ்ந்த துர்மரணங்கள், அது குறித்த அச்சுறுத்தலான பிம்பங்களை உருவாக்கியுள்ளன.

புராதனகாலந்தொட்டு இந்தக் கேணிக்கும், பக்கத்திலுள்ள அம்மன் கோவிலுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாகப் பலர் நம்புகிறார்கள். கோவிலின் கருவறையிலே பதிக்கப்பட்டுள்ள மிகப் பழைமையான கல்லில் கேணியைப்பற்றியும், அம்மனை வழிபட்ட நாகதேவதை யைப் பற்றியும் குறிப்பொன்று காணப்படுவதாக அர்ச்சகர் என்னிடம் கூறியிருக்கிறார்.

இந்தக் கேணியைப் பார்க்கும்போதெல்லாம் என்னுள்ளே ஆச்சி யைப்பற்றிய நினைவுகள் குமிழியிடும். அவளுக்கு எண்பது வயதுக்கு மேல் இருக்கக்கூடும். உடல் தளர்ந்து, தோல் பொருக்கேறிக் காய்ந்து கிடக்கும். இந்தவயதிலும் அவளுடைய கண்களில் ஒருவித வசீகர மிருக்கும்.

அவள் பகல்வேளைகளில் அம்மன்கோவிலின் வாசற்படியில் அமர்ந்திருப்பாள். கோவிலின் வெளிவீதியையும், கேணியின் அயற் பிரதேசங்களையும் அடிக்கடி கூட்டித் துப்புரவாக்கிக்கொண்டிருப் பாள். யாராவது இரக்கப்பட்டுக் காசுகொடுத்தாலும் அவள் பெற்றுக் கொள்வதில்லை. அர்ச்சகரின் பிரசாதத்தைமட்டும் மறுக்காமல்

வாங்கிக்கொள்வாள்.

சிலவேளைகளில் என்னுடைய கடைக்கு முன்னால் மௌனமாக நின்றுகொண்டிருப்பாள். அப்போதெல்லாம் அகோரமான பசியின் தீவிரம் அவளுடைய கண்களிலிருந்து வழியும். நான் கொடுப்பதை வாங்கிப் பரபரவெனச் சாப்பிடுவாள். அவளைப்பற்றி ஏதாவது விசாரித்தால் அதற்குப் பதில் இருக்காது.

ஏழெட்டு வருடங்களுக்கு முன்னர் இந்தச் சந்தியிலே தடைமுகா மொன்று அமைக்கப்பட்டபோது வீதி வெறிச்சோடிப்போனது. நடுப் பகலில்மட்டும் மணியடித்துவிட்டு ஓடிப்போகும் அர்ச்சகரையும், கோவில் வாசலிலே குந்தியிருக்கும் ஆச்சியையும் தவிர எவருமே தென்படுவதில்லை. அக்காலத்தில் நான் கொஞ்சநேரமே கடையைத் திறந்து வைத்திருப்பேன்.

ஊர்களெல்லாம் அடங்கிப்போன குரூரமான இரவுகளில் இந்த நெடுவீதி பிணங்களால் நிறைந்திருக்கும். மறுநாள் காலையில் அவற்றைத் தழுவியவாறு உறவுகள் ஓலமிட்டழுவார்கள். அவர்களின் கண்ணீரால் செம்மண்தரைகள் சேறாகும். அவ்வேளைகளில் ஆச்சியின் முகத்தில் உக்கிரம் பெருகும். நடுச்சந்தியில் நின்று உருவேறி ஆடுவாள். வீதித் தடையை நோக்கி மண்ணை வாரித் தூற்றுவாள். கடைசியில் யாருடனும் பேசாமல் கேணிப்படியிலே சுருண்டு படுத்துவிடுவாள்.

அதேபோன்று நிலவு வெண்ணெயாகத் திரள்கின்ற முன்னிரவு களில், தன்னிலை மறந்தவளாக அலைந்து திரிவாள். பின்னர் தியானம் செய்பவளைப்போலக் கேணிக்குள் அமர்ந்திருப்பாள். அந்தநேரத்தில் அவளை யாராலுமே எழுப்ப முடியாது.

ஒரு முழுநிலாநாளின் நள்ளிரவில் வாழைக்குலைகளைத் திருடு வதற்காக வந்தவன், ஆளரவம் கேட்டுக் கேணியினுள்ளே எட்டிப்பார்த் திருக்கிறான். நிலவின் கதிர்கள் நீர்ப்பரப்பிலே சிவப்பாகப் பிரதிபலிப் பதையும், அதன் ஒளிப்பிரவாகத்தில் ஆச்சி தண்ணீரையள்ளித் தலையில் ஊற்றுவதையும் கண்டு ஊரெல்லாம் கதைபரப்பி விட்டான். அவனுடைய சொற்களை எவருமே பெரிதாக எடுக்க வில்லை. அடுத்தநாள் அவனுடைய உடல் நீலம்பாரித்தபடி கேணி

யில் மிதந்துகிடந்தது. இரத்தினக்கல்லைக் களவாடப்போனவன் பாம்புகடித்துச் செத்துவிட்டதாக ஊர்மக்கள் சொல்லிக்கொண்டார் கள்.

அண்மைக்காலமாக இந்தக் கேணியைப்பற்றி மேலும் பல நூதன மான கதைகள் புனையப்பட்டுள்ளன. இதைப் பார்ப்பதற்காகச் சுற்று லாப்பயணிகள் படையெடுத்துவருகிறார்கள். அவர்களைக் காணும் போது ஆச்சிக்கு அழல்பற்றும். தன்னுடைய ஏகாந்த உலகில் அவர்கள் அத்துமீறிப் பிரவேசித்துவிட்டதாகப் புலம்பிக்கொண்டு திரிவாள்.

பலநூறு வருடங்களுக்கு முன்னர் தெற்குநோக்கிப் போன பெண் துறவியொருவர், கேணியிலே தண்ணீர் குடித்ததாக அவர்கள் சொன் னால் கெக்கட்டமிட்டுப் பெரிதாகச் சிரிப்பாள். அவளுடைய சிரிப்பின் அதிர்வில் மரங்களிலுள்ள பறவைகள் வெருட்சியுற்றுத் திசைமாறிச் செல்லும். இதற்கு முன்னர் கேட்டறியாத வசவுகளைக் கொட்டத் தொடங்குவாள். கேணியைக் காவல்செய்பவளைப்போல அங்கு மிங்கும் உலாவித்திரிவாள்.

நெற்றியில் அப்பிய திருநீற்றுடன், நரைத்த கூந்தலை விரித்தபடி நிற்கும் அவளுடைய தோற்றம் பார்ப்பவர்களை மிரளவைக்கும். நெருப்பாகப் பளபளக்கின்ற விழிகளின் கடுமையைத் தாங்கமுடியா மல் அவர்கள் விலகிச்செல்வார்கள்.

இவ்வாறு ஆச்சியின் அசைவுகள் மற்றவர்களைப் பொறுத்தவரை விசித்திரமாகவே தோன்றும்.

கடந்தமாதத்தின் பனிவிலகாத அதிகாலைப்பொழுதொன்றில், நாகபாம்பொன்று பேருந்தின் சில்லில் அகப்பட்டு இறந்துகிடந்தது. பெரியபடமும், மினுக்கமான உடலும்கொண்ட அந்தப் பாம்பிலிருந்து பொன்னிறமான செதில்கள் சிந்தியிருந்தன. திறந்திருந்த அதன் கண்களிலே தீராத ஏக்கமொன்று உறைந்திருப்பதைப்போல எனக்குத் தோன்றியது. அதைப் பார்த்த அர்ச்சகர் கேடுகள் விளையப் போவதாக எச்சரித்துவிட்டுப் போனார்.

அன்றிலிருந்து ஆச்சியைக் காணமுடிவதில்லை. நானறிந்தவரை

கேணியையும், கோவிலையும்விட்டு அவள் எங்குமே சென்றதில்லை. அவள் இல்லாததால் இந்தப் பிரதேசத்தின் உயிர்த்தன்மையே அற்றுப் போய்விட்டது.

இந்தச் சந்தியும், கடந்து செல்கின்ற வீதியும் வழமைபோலப் பரபரப்பாக இயங்குகின்றன. அம்மன்கோவிலில் ஆறுகாலப் பூசைகளும் ஒழுங்காக நடைபெறுகின்றன. பூசை முடிந்ததும் அர்ச்சகர் பிரசாதத்துடன் வெளியேவந்து ஆச்சியைத் தேடுவார். அவளைக் காணாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வார்.

ஆச்சி இல்லாததால் கேணியின் சுற்றுப்புறம் அசுத்தமாகிக் கொண்டிருக்கிறது. பெட்டிக்கடைகளின் பெருக்கமும், சுற்றுலாப் பயணிகளின் அதிகரித்த வருகையும் இந்தச் சூழலின் அமைதியைக் குலைத்துவிட்டன. ஏதோவொன்றை இழந்ததைப்போன்ற துயருடன் கேணித்தண்ணீர் அசைவின்றிக் கிடக்கிறது.

ஆனாலும், சில நம்பிக்கைகள் இப்போதும் நிலைத்திருக்கின்றன.

கேணியின் புழையிலிருக்கும் ஐந்துதலைநாகம் பௌர்ணமித் தினங்களில் வெளியேறி வருவதாகவும், நிலவு உச்சியைக் கடக்கும்போது நீரை உறிஞ்சி அம்மனுக்குமேலே சொரிவதாகவும், அது துப்பிய இரத்தினக்கல்லின் பிரகாசமான ஒளியைப் பார்க்க முயல்பவர்கள் குருடாகிக் கேணியில் விழுந்து மரணமாவதாகவும்...!

தளவாசல் (2016)

கல்லறைப்பூக்கள்

மேற்கு வானத்திலே இலேசாக நெருப்புப் பரவத்தொடங்கியிருந்தது. கடல்நாரைகள் உச்சிவானிலிருந்து ஒடிந்து தூரத்துப் பனைவட்டுக் களைநோக்கிச் சறுக்கிக்கொண்டிருந்தன. சற்றுத் தொலைவிலே கடலின் இடைவிடாத அலையடிப்பு விட்டுவிட்டுக் கேட்டது. இவற்றுக்கு மத்தியில் ஆபத்துக்கள் நிறைந்த இராப்பொழுதை எதிர்பார்த்து எங்கள் நிலம் அமைதியாகக் கிடந்தது.

நான் உறவினர் ஒருவரின் வீட்டுக்கு என்னுடைய மகனுடன் வந்திருந் தேன். வீடுதிரும்பும் அவசரம் மோட்டார்சைக்கிளில் வேகமாக வெளிப் பட்டது. பனைவடலிகளினூடாக வெள்ளைப் பாம்புபோல நெளிகின்ற ஒற்றையடிப் பாதையில் சுழித்து விரைந்து தார்வீதியில் வந்து தாவினேன்.

வீதியின் மறுபக்கச் சரிவில் விரிந்துகிடந்த வெளியில் சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அவர்களின் ஆரவாரம் எதிரே வந்து மோதவே, பின்னால் என்னைப் பற்றியிருந்த மகனின் பிடி இறுகியது.

"அப்பா! நில்லுங்கோ அப்பா. பார்த்திட்டுப் போவம்" என்று என்னைச் சுரண்டினான்.

ஆறு வயதுக்குரிய இயல்பு அது.

மோட்டார்சைக்கிளுடன் பிணைத்திருந்த கையைத் தளர்த்தி வேகத்தை மட்டுப்படுத்தி ஓரமாக நிறுத்தினேன்.

முருகன்கோவிலுக்கு வடக்குப் பக்கமாக மைதானம் பரந்திருந்தது. கோவிலின் முன்னே நிழல் பரப்பிச் சடைத்திருந்த ஆலமரத்தின் வேரில் வயதானவர்கள் ஒன்றிரண்டுபேர் குந்தியிருந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

வீதியோரம் உடைந்திருந்த அத்திபாரத்தில் என் மகன் ஏறிநின்று மைதானத்துள் விழிகளை வீசினான். அவனுடைய ஒவ்வொரு அசைவையும் அவதானித்தபடி மோட்டார்சைக்கிளில் அமர்ந் திருந்தேன்.

குழந்தைப் பருவம்தான் எவ்வளவு இனிமையானது! வாழ்க்கையின் வேதனைச்சுவடுகள் அணுகாத காலப்பகுதி அது. சுற்றிவரக் குவிந்துகிடக்கும் அவலங்களின் பாதிப்பு அணுவளவேனுமின்றி எவ்வளவு ஆனந்தமாக விளையாட்டை இரசித்துக் கொண்டிருக்கி றான்!

இரண்டு மாதங்களுக்கு முன்னால் நிகழ்ந்த அந்தச் சம்பவம் இவனால் எப்படி மறக்கப்பட்டது?

*****

அன்று புதன்கிழமை.

எல்லோருக்கும்போல இல்லாது எமக்கு மட்டும் ஏன் அவலமாக விடிந்தது?

வேலைக்குச் செல்லும் அவசரத்துடன் கண்விழித்த எமக்கு, வானொலிமூலம் விடுக்கப்பட்ட ஊரடங்குச்சட்டம் காலைவணக்கம் சொன்னது. சாவகச்சேரிக்கு மேற்குப்புறம் நிலம் அதிரத்தொடங்க, சுப்பர்சொனிக் விமானங்கள் வானத்து மேகங்களை விரட்ட முற் பட்டன. இலேசாக வெளுத்த வானத்தின் ஒளிப்பரவலில் வீதியை எட்டிப் பார்த்தேன். வெறிச்சென்றிருந்தது.

'அவர்கள் அறிவித்தபோதே புறப்பட்டுப் பாதுகாப்பான இடங்களை நாடியிருந்தால்....?' என்ற எண்ணம் மிகத் தாமதமாக என் மூளைப் பிரதேசத்தில் உதித்து என்னை உறுத்தியது. எனினும், ஊரடங்குச் சட்டம் இல்லாவிட்டால் எம்மால் பாதுகாப்பாக நகர்ந்து விடமுடியும் என்றே நம்பினேன். காரணம், நாவற்குழியை அண்டிய யுத்தமையம்

அப்போது எம்மை நெருங்கியிருக்கவில்லை. ஊரடங்குவேளையில் நடமாடினால் என்ன நடக்கும் என்பதைக் கடந்தகால அனுபவங்கள் நினைவூட்டியதால் எம்மால் எதுவும் செய்யமுடியவில்லை.

அத்துடன், இவ்வாறான ஊரடங்கு உத்தரவு யுத்தமுனையில் மக்களைக் கேடயமாக்கும் முயற்சி என்பதையும் எவரும் உணர வில்லை.

பப்பி வேறு வாள்வாளென்று குரைத்து அந்தச் சூழ்நிலையின் பயங்கரத்தை அதிகப்படுத்தியது. பக்கத்துவேலியில் சரசரக்கத் திரும்பிப் பார்த்தேன். வேலியின் வரிச்சுமட்டையைப் பிடித்து இழுத்துப் பதித்தவாறு பயத்துடன் சிரிக்கமுற்பட்டார் சுப்பிரமணியம் மாஸ்டர். என்னுடைய தந்தையின் காலத்திலிருந்து இதே வேலிப்பிரச் சினையால் எம்முடன் பகைமை பாராட்டி வருபவர் அவர்.

சாவைப்பற்றிய பயஉணர்வுகள் மனத்துவேசங்களை எவ்வளவுதூரம் மாற்றியமைத்துவிடுகின்றன!

"கேட்டீரே சிவநாதன்! கைதடி பிடிபட்டிட்டுதாம்"

சுப்பிரமணியம் மாஸ்டர் சொன்னதைக் கேட்டதும் உள்ளம் பூரிப்பதை உணர்ந்தேன். என்னையுமறியாமல் அந்த உணர்வு ஏன் என் னுள்ளே வியாபிக்கின்றது? நள்ளிரவிற்கூட எவருடைய அச்சுறுத்த லுமின்றி உலாவி வரக்கூடிய அந்தக் காலத்தை என்மனம் எதிர்பார்க் கின்றதா?

வாகனங்கள் சாவகச்சேரியை நோக்கி நகர்வதையும், நுணாவில் சந்தியில் கிளைவிட்டுப் பிரிந்து வடக்காகச் செல்வதையும் அவதானித் தேன்.

'இதில் நிற்பது ஆபத்தை விளைவிக்கக்கூடும்' என்று உள்ளே ஏதோ எச்சரிக்கவே, சுப்பிரமணியம் மாஸ்டரிடம் விடைபெற்று வீட்டிற்குள் விரைந்தேன்.

ஓரிரு மணித்துளிகளில் என்னுடைய நினைப்புச் சரியானதைக் கண்டுகொண்டேன். அடிபட்ட நாகம் சீறுவதைப்போல எறிகணைகள் அடுத்தடுத்து இரைந்துவந்து பரவலாக விழுந்து வெடித்தன.

விருட்டென்று மனைவியையும், மகனையும் இழுத்துக்கொண்டு பதுங்குகுழியை நோக்கி ஓடினேன். தனங்கிளப்பில் மோதல்கள் ஆரம்பித்தகாலத்தில் வெட்டியபடியால் அது எமக்குக் கைகொடுத்தது. மகன் வீறிட்டுக் கத்த, மனைவி சமாதானப்படுத்தினாள். பதுங்கு குழியின் உள்ளே தென்னம்வேரின் வாசம் குப்பென்று வெம்மை யாகப் பரவியது. நுளம்புகள் ரீங்காரமிட்டபடி எம்மைத் துளையிட்டன.

வெளியே நிலம் அதிர அதிர, என்னுடைய ஊர் அழிந்து கொண்டி ருந்தது. பதுங்குகுழியின் வாசலில் பப்பி மருண்டபடி நின்றது.

அன்று பகல் எறிகணைகளை எதிர்கொள்ளத் தொடங்கி, இரவு முழு வதும் உறக்கத்தை மறந்திருந்தோம்.

காலை அமைதியாக விடிந்தது.

பசியுடன் உறங்கிப்போன மகனுக்காக வீட்டிலிருந்து ஏதாவது எடுத்துவர எண்ணினேன். சமையலறைக்குள் ஒரு போத்தலில் பிஸ்கற்றுக்கள் இருப்பது நினைவுக்கு வந்தது.

"சுமதி. வெளியிலை சத்தம் ஒண்டையும் காணேல்லை. போய் பிஸ்கற் எடுத்துக்கொண்டு வாறன்."

"கவனம்!"

புற்றுக்குள்ளிருந்து எலியொன்று தலையை நீட்டுவதைப்போல எட்டிப்பார்த்தேன். நொறுங்கிப்போன எங்கள் இதயங்களைப் போலவே, எங்களுடைய வீட்டின் கூரையும் உடைந்து விழுந்தி ருந்தது. எங்களுடைய தலைமுறையின் சுவடுகள் ஆழப்பதிக்கப்பட்ட கூடு ஒரு நொடியில் குலைந்துவிட்டது.

சுப்பிரமணியம் மாஸ்டரின் வீட்டுப்பக்கமிருந்து அழுகுரல்கள் கிளம்பி வந்து என்னுடைய முகத்திலே பட்டுத்தெறித்தன. நான் என்னுடைய நோக்கத்தை மறந்து ஓடிப்போய் பிரிந்திருந்த வேலிக்கூடாக எட்டிப்பார்த்தேன். வீட்டுமுற்றத்திலே சுப்பிரமணியம் மாஸ்டரும், மனைவி கமலாக்காவும் ஆளுக்கொருபக்கம் சிதறியிருந்தார்கள்.

கீழே புரண்டு கதறும் பிள்ளைகள் இருவரையும் பார்க்க வேதனை மிகுந்தது. பக்கத்தில் நின்ற இரு இளைஞர்கள் சிதைந்த உடல்களை ஒன்றாகச் சேர்த்துக்கொண்டிருந்தார்கள்.

பதுங்குகுழியினூடாக எட்டிப் பார்த்த சுமதிக்குச் சைகை செய்துவிட்டு வேலியைத் தாண்டினேன். சுப்பிரமணியம் மாஸ்ரரையும், கமலாக்கா வையும் கூட்டிக் குவித்து, வளவின் பின்னே நின்ற தென்னம் பிள்ளை யொன்றின்கீழ் குழிவெட்டி அதனுள்ளே போட்டு மூடினோம். பெற்றோ ரின் புதைகுழியருகில் துவண்டுபோய் நின்ற பிள்ளைகளை அவர்கள் ஆதரவுடன் அழைத்துப்போனார்கள்.

வெறுமையாகக் கிடந்த வளவையும், இறுமாப்பிழந்து சரிந்துகிடக்கும் எல்லைவேலியையும் வேதனையுடன் வெறித்துப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்தேன்.

வேட்டுச்சத்தங்கள் எம்மைத்தாண்டி மட்டுவில் பக்கம் நகர்ந்தி ருந்தன.

பதுங்குகுழியின் வாசலில் மூன்று கற்களை அடுக்கி அடுப்பு மூட்டிக் கொண்டிருந்தாள் சுமதி. மகன் மணல்மூட்டையில் உட்கார்ந்து பிஸ்கற்றைக் கொறிக்க, அவனுடைய காலடியில் பப்பி சுருண்டு படுத்திருந்தது.

சுமதி என்னைக் கண்டதும் வரட்சியாகப் புன்னகைத்தாள். இருபத் தேழுவயது மலர்ச்சியை மீறித் துயரத்தின் சாயலே முகமெங்கும் விரவிக்கிடந்தது. பானையிலே கொதிக்கின்ற கஞ்சியைப்போலவே அவளுடைய மனமும் இருந்ததுபோலும். அருகில் அமர்ந்தேன்.

"சுமதி! சுப்பிரமணியம் மாஸ்ரரும், கமலாக்காவும் செல்பட்டுச் செத்துப்போச்சினம்"

"பார்த்தனான்" சுமதியின் விழிகள் கலங்கின.

"மூதேசிகள்! எழும்பப்படாது எண்டு சொல்லிப்போட்டு எங்களுக்கு மேலேயே செல்லடிக்கிறாங்கள். பாவம் அந்தப் பிள்ளைகள் கத்திக் குளறுதுகள்"

மகனைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டேன்.

பதுங்குகுழியின் வாசலில் கஞ்சி காய்ச்சுவதும், எறிகணைகள் கூவும் போது உள்ளே ஒடுங்குவதுமாக ஐந்துநாள்களைக் கடத்தினோம். சுற்றுப்புறங்களில் என்ன நடக்கின்றதென்றே எமக்குத் தெரிய வில்லை.

பிரச்சினையானது வெளியிலிருந்து பார்க்கும்போதுதான் வடிவத் திலே பெரிதாக எம்மைப் பயமுறுத்தும். ஆனால், பிரச்சினைக்கு முகங்கொடுக்கும்போது அது மிகவும் அற்பமானதாகத் தென்படும். என்றாலும், ஒரேயடியாகக் கொட்டுகின்ற எறிகணைமழைக்குள் உயிரைப் பணயம் வைத்து நனையும் உத்தேசம் எமக்கில்லை. ஐந்து நாள்களாகப் பதுங்குகுழியைவிட்டு வெளியே வராமைக்கு அதுதான் காரணம்.

அன்று மாலை ஐந்துமணியிருக்கும். வெளியே அழிகின்ற ஊரை எட்டிப் பார்க்கத் துணிவில்லாமல், பனைவட்டுக்குப் பின்னால் மறையும் சூரியனைப்போல உள்ளே குறுகியிருந்தோம்.

என் மகன் சிணுங்கினான்.

"அப்பா! கக்கா வருகுது"

"சும்மா இரு. இந்த செல்லடியுக்க வெளியிலை போகேலாது" சுமதி இலேசாகச் சினந்தாள்.

"போகாதையுங்கோ. வெளியிலை சரியான சத்தமாகக் கிடக்கு. வேணு மெண்டா அவன் இதுக்குள்ள இருக்கட்டும்"

நான் தலையசைத்து மறுத்துவிட்டு மகனை அழைத்துக்கொண்டு படியேறினேன்.

"தயவுசெய்து நில்லுங்கோ. போகாதையுங்கோ"

சுமதியின் குரல் பதுங்குகுழியினுள்ளே தேய்ந்து ஒலித்தது.

வெளியே எட்டிப்பார்த்தேன். அநேகமாக அந்தப் பிரதேசத்தின் மரங்களெல்லாம் முறிந்து விழுந்திருந்தன. எங்கள் வீட்டின் எஞ்சிய பகுதிகளையும் காணவில்லை. முற்புறமதில் வீதிப்பக்கம் படுத்தி ருக்க, அதனூடாகக் கண்டிவீதி தெரிந்தது. அக்கம்பக்க வீடுக ளெல்லாம் அப்பளம்போல உடைந்து கிடந்தன. இடையிடையே கரிய புகையை உமிழ்ந்த நெருப்பு தன்னுடைய இருப்பைச் சொன்னது. குண்டுகளின் அதிர்வுகள் இன்னமும் ஓயவில்லை.

மகனை அழைத்துக்கொண்டு வேலியோரம் போனேன். நாயுண்ணிப் பற்றையொன்றுக்கு அருகில் அவன் போய்க் குந்தவும், கும்மென்ற

பேரொலி கேட்கவும் சரியாக இருந்தது. நாலாபக்கமும் சிதறிய மண்ணுடன் சேர்த்துத் தூக்கியெறியப்பட்டேன். காதுகளில் இரைச்சலாக ஏதோ வந்து அடைத்தது.

புழுதிப்படலம் அடங்கியபோது ஏற்பட்ட தெளிவில், காற்சட்டையில்லாமல் சரிந்துகிடந்த மகனை இழுத்துக்கொண்டு பதுங்குகுழியை நோக்கிப் பாய்ந்தேன்.

"பதுங்குகுழி இருந்த இடம் எங்கே?"

மேலே அடுக்கப்பட்டிருந்த மண்மூட்டைகள் சரிந்துகிடக்க, அதையும் மீறிக் கொண்டு சுமதியின் கைமட்டும் தெரிந்தது.

"சுமதி!" குளறிக்கொண்டு ஓடினேன்.

என் சுமதியை விழுங்கியிருந்த மண்ணை வெறிபிடித்தவனைப்போல விறாண்டினேன். அள்ள அள்ள மண் மேலும் சொரிந்து கொண்டேயிருந்தது. என்னுடைய முயற்சியைப் பார்த்து ஏளனம் செய்வதுபோல அந்தக் கை எதுவித சலனமுமில்லாமல் அமைதியாகக் கிடந்தது.

*****

கையைப்பற்றி யாரோ உலுப்பிய உணர்வில் நினைவுச்சுழியிலிருந்து தப்பினேன். என்னுடைய மகன் முகம் மலர நின்றிருந்தான். அவனுடைய சின்னவிழிகள் வியப்பால் விரிந்திருந்தன.

"அது என்னப்பா?"

நீட்டப்பட்ட அவனுடைய விரலின் வழியே பார்வையை நகர்த்தினேன். என் உள்ளம் பொங்கிச் சிலிர்த்தது.

அங்கே சாம்பல்மேட்டில் முளைத்திருந்த தூபியொன்று வடக்காகச் சரிந்துகிடந்தது. ஏதோவொரு உந்துதலில் என்னையுமறியாமல் அதைநோக்கி நடந்தேன்.

நுழைவாயிலருகில் பல சிலைகள் உடைக்கப்பட்டிருந்தன. தயக்கத்துடன் சுற்றும்முற்றும் பார்த்துவிட்டு உள்ளே காலடி எடுத்து வைத்தேன்.

நினைவுத்தூபியைச் சூழ வட்டமாக நின்ற கல்லறைகளில் ஒன்றி ரண்டு புரண்டுகிடந்தன. அது அமைந்திருந்த மைதானத்துக்குத் தெற்காக ஒடுங்கிவந்து விரிந்த வாய்க்காலில் கருவேலமரங்கள் மஞ்சளாகச் சிலிர்த்திருந்தன. மேற்குப்புறம் சிறிய குளமொன்று பரவியிருந்தது. தூபியின் கிழக்கு மதிலோரம் ஏழெட்டுச் சவுக்கு மரங்கள் வரிசையாக நின்று ஊளையிட்டுக்கொண்டிருந்தன.

நினைவுத்தூபியைச் சுற்றிவந்தேன். அது அமைந்திருந்த மேடையில் மூன்று எருக்கலைச்செடிகள் பீறிட்டுக் கிளம்பிச் செழித்திருந்தன. சாம்பல் படிந்த பசுமையான இலைகளுடன்கூடிய செடியின் உச்சியில் ஊதாநீலப்பூக்கள் சிரித்தன. அவற்றின் உருவ அமைப்பு அந்த மேடையையும், கல்லறைத்தூணையும் முழுமையாக ஒத்திருந்தது.

"இது என்னப்பா?" என் மகன் மீண்டும் கேட்டான்.

ஆவலுடன் பளபளக்கும் அவனுடைய விழிகளை ஏறிட்டுப் பார்த் தேன்.

'எதைச் சொல்வது? எப்படிச் சொல்வது? அவனுக்குப் புரியுமா? அந்தச் சம்பவத்தின் அழுத்தமான பதிவுக்கு அப்பாற்பட்ட காலத்தி லல்லவா இவன் பிறந்தான்!'

இன்று எவராலும் கவனிக்கப்படாமல் ஒருமூலையில் அநாதையாகக் கிடக்கும் இந்தத் தூபிக்கு அழியாத ஒரு வரலாறு உண்டு என்பதை யாரால் மறக்கமுடியும்? இரு தேசங்களின் அப்பட்டமான துரோகத்தை வெளிக்காட்டும் சான்றாக விளங்குகின்ற இந்தத் தூபியைப்பற்றி நேற்றுப் பிறந்தவர்களுக்கு நிச்சயம் தெரியாது.

அருகிலிருந்த படியில் அமர்ந்தவாறு சொன்னேன்.

"இது பன்னிரண்டு மாமாக்களை எரிச்ச இடம். அவையின்ரை ஞாபகமாகக் கட்டினது"

சற்றுநேரம் ஆழமாக யோசிப்பதைப்போல நின்றவன், திடீரெனக் கேட்டான்.

"அவையை ஏன் எரிச்சது? அம்மா மாதிரி அவையும் குண்டுபட்டுச் செத்துப் போச்சினமே அப்பா?"

எனக்குத் திக்கென்றது.

கடைசிநேரத்தில்கூட அடுப்புமூட்டிக் கஞ்சிவார்த்த என் சுமதியை, காய்ந்த தென்னோலைகளைப் போட்டு அரைகுறையாக எரித்துவிட்டு நீர்வேலித் தரவைக்கூடாக ஓடிவந்தது மனத்திரையில் விரிந்தது. என் உள்ளம் ஊமையாக அழுதது.

நீண்டநேரம் நான் காட்டிய மௌனமும், கலங்கிய என் விழிகளும் மகனை உறுத்தியிருக்க வேண்டும். நெருங்கிவந்து என்னுடைய கழுத்தை வளைத்துக்கொண்டான்.

அமைதியாக நின்ற கருவேலமரங்கள் அளவற்ற துயரத்துடன் எம்மைப் பார்த்துக் கொண்டிருப்பனபோலத் தோன்றின.

சாம்பல்மேட்டிலிருந்து வெடித்துக் கிளம்பிய எருக்கலைப்பூக்களின் வாசமாக அவர்களின் பெருமூச்சுக்கள் உப்புக்காற்றுடன் கலந்து வியாபிப்பது போலிருந்தது. கண்களைமூடி அந்த உணர்வை அனுபவித்தேன்.

அந்த உணர்வினைச் சிதைப்பதுபோலத் தெற்குப்பக்கமாகக் குண்டுச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. மேடையில் நின்ற மகனை இழுத்துக் கொண்டு மோட்டார்சைக்கிளை நோக்கி விரைந்தேன். வேகமாகச் செல்லும் மோட்டார்சைக்கிளை முந்திக்கொண்டு பறந்தது என் மனம்.

வல்லைச்சந்தியில் தென்மராட்சியை நோக்கியபடி "ஆட்டிலறிகள்" வாயைப் பிளந்திருந்தன. வல்லைவெளியை இருகூறாகப் பிரித்த பிரதானவீதி ஆள்நடமாட்டமற்றுக் கறுக்கத்தொடங்கியது. எறிகணை கள் மூன்று மூன்றாக வீதியைக் கடந்துகொண்டிருந்தன.

சந்தியை அண்மித்தபோது அவர்கள் மோட்டார்சைக்கிளை நிறுத்தி னார்கள். இறங்கி உருட்டிக்கொண்டு நெருங்கினேன். அவர்களின் பார்வையில் தோழமையுணர்வு இருப்பதுபோலத் தெரியவில்லை. என்னுடைய மனைவியை எறிகணை தின்றபிறகு அவர்களுடன் நேசவுணர்வு பாராட்ட என் மனம் ஒப்பவில்லை.

"கோகெத யன்னே?" குரல் சொரசொரத்தது.

"அச்சுவேலி"

"அச்சுவேலி....?"

என்னை அணைத்தவன் முரட்டுத்தனமாகத் தடவினான். பிறகு அருகில் நின்ற மகனைத் தட்டிப் பார்த்தான். என் மகன் கையை இறுகப் பொத்தியபடி எனக்குப் பின்னே மருண்டவாறு ஒதுங்கினான். என்னை விலக்கிவிட்டு மகனுடைய கையைப் பிடிவாதமாகப் பிரித் தான். நான் திக்கித்துப்போனேன்.

சின்ன விரல்களின் இறுக்கமான பற்றுதலுடன் ஊதா நீலவண்ண எருக்கலைப்பூக்கள் கசங்கிக் கிடந்தன.

சற்றுநேரத்தின் பின்னர் அவன் எங்களைப் போகவிட்டான். போகும் போது ஒருவிடயம் என்னுடைய நெஞ்சை நெருடிக்கொண்டிருந்தது. என்னுடைய மகனால் பறிக்கப்பட்ட எருக்கலைப்பூக்கள் நினைவில் மின்னின.

அவை என்ன நோக்கத்துக்காகப் பறிக்கப்பட்டிருக்கும்? மலர்களின் அழகிலுள்ள கவர்ச்சியா? அல்லது வேறேதும் வலுவான காரணம் இருக்குமா? ஒன்றும் புரியவில்லை எனக்கு.

சந்தோசமான சூழலோடு ஒன்றிவிடுதல் சிறுவர் மன இயல்பு. அதை மட்டும் வைத்துக்கொண்டு எம்மால் அவர்களை எடைபோட முடியாது. ஏனென்றால், துயரவடுக்கள் அவர்களின் ஆழ்மனங்களில் அமுங்கிப்போயிருக்கும். அவர்கள் அவற்றை இலகுவில் மறப்ப தில்லை.

தாயின் இழப்பு இந்தப் பிஞ்சின் உள்ளத்தில் எவ்வளவு ஆழமாகப் பதிந்திருக்கிறது! என் மகன், சுப்பிரமணியம் மாஸ்ரரின் பிள்ளைகள் போன்று எத்தனையோபேர் தங்கள் பெற்றோரைப் பறிகொடுத்துவிட்டு வலுவிழந்துபோய் நிற்கிறார்கள்.

இத்தகைய ஒடுக்குமுறைகளை மீறவேண்டும் என்ற ஓர்மம் அவர்களு டைய மனங்களில் வேரூன்றுவதற்கு இவ்வாறான சம்பவங்கள் காரணமாக அமையலாம். அது ஒடுக்குமுறைக்கெதிரான போராட்ட மாக மாறலாம். அல்லது அத்தகைய போராட்டங்களுக்கு ஆதரவு மனப்பாங்காக மாறலாம்.

வழிப்பிள்ளையார்கோவிலைத் தாண்டி வல்லைப்பாலத்தில் ஏறும் போது வேதனை மேலிட இடதுபக்கம் திரும்பிப்பார்த்தேன். களப்புநீர் தேங்கிக்கிடந்த வெளியைத்தாண்டி என் பார்வை நீண்டது.

வெகுதொலைவில் புகார்மூடிப் புள்ளியாகத் தெரிந்த தென்மராட்சிப் பனங்கூடல் வழக்கம்போல மௌனம் சாதித்தது. இங்கு வாழும் எங்களைப்போல...!

'ஆதவன்' - ராவய வெளியீடு (2001)

கூடு

வெண்மையான பூக்களினால் போர்க்கப்பட்டிருந்த நித்தியகல்யாணி மரத்தில் எப்போதும்போலவே என் விழிகள் சிக்கிக்கிடக்கின்றன. ஒரு சிறுகுழந்தையின் தொடுகைபோல இதமாக வருடிச் செல்லும் கடலலையின் மெல்லிய சலசலப்புக்கூட என்னுடைய கவனத்துள் நுழையவில்லையென்றால், அந்தப் பூமரத்தில் அப்படி என்னதான் புதுமையிருக்கிறது?

பாரிசவாதம் வந்ததிலிருந்து என் வாழ்க்கையின் வறண்ட ஆறு வருடங்கள் இந்தச் சின்ன அறையினுள்ளே சிறைப்பட்டிருக்கின்றன. என்னைப்போலவே தள்ளாடும் சாய்மனைக் கதிரையும், சுவரோர முள்ள அழுக்கேறிய மரக்கட்டிலுமே அறையிலுள்ள மற்றிரு சடங்கள். இடையிடையே என்னையுமறியாமல் கழிகின்ற சிறுநீரின் மணம் எனக்கு மிகவும் பழகிவிட்டாலும், என்னுள்ளே அமுங்கியிருக்கும் உணர்வுகளைப் போலவே அதுவும் இங்கே உறைந்துகிடக்கிறது.

வெளியுலகச் சலனங்களுக்கும், எனக்குமிடையே வேலிபோல எழுந்து நிற்பது இந்த யன்னல் ஒன்றுதான்.

இந்த யன்னலினூடான என் மனத்தொடர்புகளுள் முக்கிய இடம் வகிப்பது, இப்போது என்னுடைய பார்வைவீச்சினுள் அகப்பட்டிருக்கும் அந்தத் தேன்கூடு மட்டுமே. அது இப்போது மிகத் தெளிவாகத் தெரிகின்றது.

கருமணிகள் பலவற்றை ஒன்றுசேர்த்து இழைத்ததுபோல இலேசான மினுமினுப்புடன் காணப்படுகின்றது. ஆழக்கடலின் அமைதியும்,

சாம்பலிலுள்ள தணலின் அழுத்தமான மௌனமும் அதிலே தெரிகின்றன.

நித்தியகல்யாணிமரம் காலைவெயிலில் குளிப்பதுமுதல், இருட்டின் பனியில் நனைவதுவரை யன்னலினூடாக விழிகளை எறிந்து கொண்டிருக்கும் எனக்கு இந்தத் தேன்கூட்டின் கதை தெரிந்த வொன்றுதான்.

அன்றொருநாள் ஒற்றைத்தேனீயாக அது வந்து அமர்ந்தபோது, அதன் ஒவ்வொரு அசைவையும் நுணுகி அவதானிக்கமுடிந்தது. அது தனது சிறகுகளை வேகமாக அடித்து உலர்த்தி, முன்னங்கால்களால் முகத்தைத் தேய்த்துக்கொண்டது. பின்னர் மெல்லக் கிளம்பி அங்குமிங்கும் பறந்துவிட்டு எங்கோ தொலைந்தது.

சற்றுநேரம் கழித்து இரண்டு தேனீக்கள் அதே கிளையில் வந்து அமர்ந்தன. அவற்றிலொன்று முன்னர் வந்ததாக இருக்கலாம். பார்த்துக்கொண்டிருக்கவே அந்த அதிசயம் என் கண்முன்னே நிகழ்ந்தது.

அடுத்தடுத்து ஒன்றின்பின் ஒன்றாக வந்து சேர்ந்த தேனீக்கள், ஒன்றைப்பற்றி இன்னொன்றாகத் தொங்கின. வர வர அவற்றின் எண்ணிக்கை அதிகரித்தது. பத்து நூறாகி....நூறு ஆயிரமாகி....!

*****

எனக்கு அவனுடைய முகம் நன்றாக நினைவிலிருக்கிறது. அவனைக் கண்டு நீண்டகாலமாகிவிட்டாலுங்கூட அவனைப்பற்றிய நினைவுப்படிவுகள் என்னைவிட்டு அகலவில்லை. சிற்சில சம்பவங் களால் அவை இடையிடையே கிளறப்படும்போது அவ்வுணர்வுகள் அடங்க வெகுநேரமாகும்.

அவனுக்கு ஆறேழு வயதிருக்கும் காலத்தில் அடிக்கடி என் வீட்டிற்கு வருவான். அவனுடைய தந்தை என்னுடன் கடமையாற்றியவர். அத்துடன், அவன் எனக்குத் தூரத்து உறவுங்கூட. வீட்டிற்கு ஓடிவருபவனின் விழிகள் இயல்பாகவே என் மனைவியைத் தேடும். எள்ளுப்பாகு என்றால் அவனுக்கு வெகுபிரியம் என்பது என்னுடைய மனைவிக்குத் தெரியும். அவனுக்காகவே விசேடமாக இடித்துச்

சாடியிலிட்டு வைத்திருப்பாள். கிணற்றடியில் மதாளித்த கப்பல் வாழையின் கனிந்த பழங்களும் அவனுக்காகவே காத்திருக்கும்.

அவனுடைய வளர்ச்சி எனக்குள் ஒருவிதமான பிரமிப்பை ஏற்படுத்தியி ருந்தது. வயதுக்கு மீறிய சிந்தனைகள் அவனை ஆக்கிரமித்திருந் தன. அச்சிந்தனைகளின் வெளிப்பாடுகளாக அவனுடைய செயல்கள் சிலசமயம் தீவிரத்தன்மை கொண்டதாக அமையும்.

தனிமையினுள் அமிழ்ந்துகிடக்கும் கடினப்பொழுதுகளையே அவன் பெரும்பாலும் விரும்பித் தேர்ந்தெடுத்துக்கொண்டான். சிறிதுகாலம் கழிய அவனுடன் இன்னொரு இளைஞனையும் காணமுடிந்தது. பின்னர் வேறொருவனும் இணைந்துகொண்டான். இப்படி அவர்கள் ஒரு சிறு குழுவாகவே வீதிகளில் திரிந்தார்கள்.

பிந்திய காலங்களில் அவன் என் வீட்டுக்கு வருவதேயில்லை. வெகு அபூர்வமாக வீதியில் காணும்போது உரமேறிய உடலும், பரபரப்புத் தொற்றிய கூர்மையான விழிகளும் கொண்டவனாக ஒரு சிறு தலைய சைப்பை மட்டுமே உதிர்த்துவிட்டுச் செல்வான்.

பிறிதொருநாள் முழுநிலாக்கால முன்னிரவில் அவன் கரைந்தே போனான். அவன் தேடப்படுகிறான் என்பதை அப்போதுதான் அறிந்துகொண்டேன்.

அதற்குப் பின்னர் அவன் என் விழிகளில் ஒருநாளும் தட்டுப்பட வேயில்லை.

*****

தேனீக்கள் தாக்குந்திறன் கொண்டவை. தாங்கள் கட்டிய கூட்டுக்கு எதனாலாவது அபாயம் ஏற்படும்போது அவை விரைந்து சென்று கொட்டிவிடும். குறித்த எல்லைவரை துரத்தித் தாக்கும். சிலவேளை களில் தங்கள் உயிரைக்கூட இழக்கும்.

இத்தகைய ஆபத்துக்கள்பற்றிய அறிவையும், அவற்றை எதிர்க்கும் உத்வேக உணர்வையும் தேனீக்கள் ஒன்றிலிருந்தே மற்றொன்று கற்றுக்கொள்ளும். இப்போது பெரியனவாகவுள்ள தேனீக்களெல் லாம் ஆரம்பத்தில் அந்த ஒற்றைத் தேனீயிடமிருந்தே அவ்வுணர் வைப் பெற்றிருக்கலாம்.

தேனீக்களின் முக்கியமான இலக்கு பூக்களிலும், பழங்களிலும் பொறுக்கியெடுக்கும் தேன் ஒன்றுதான். ஆனாலும் அவை பாடும். பறந்து ஆடும். ஒன்றாகிக் குதூகலிக்கும்.

தேன் சேகரித்தல் என்பது பல்கிப் பெருகிய அவற்றுக்கான தேவை என்பதற்கு அப்பால், தேன் சேகரிப்பதற்காகவே எண்ணிக்கையில் விருத்தி ஏற்படுகின்றதோ எனவும் நான் நினைப்பதுண்டு.

கொஞ்ச நாள்களாகவே இந்தத் தேன்கூடு அமைதியாகக் கிடக்கிறது. அசையுங் காற்றுக்கூட ஏதோவொரு சிந்தனையில் ஆரவாரமிழந் திருக்கின்றது. ஆர்ப்பரிக்கும் அலைகளும் அடக்கி வாசிக்கின்றன.

இவ்வாறான புறநெருக்கீடுகள் இல்லாததால் தேனீக்கள் இப்போது உக்கிரங் கொள்ளுவதில்லை. ஆனாலும், அவை தங்களுடைய வழமையான பணிகளில் ஈடுபட்டுக்கொண்டுதானிருக்கின்றன.

நீண்ட தொடர்ச்சியான அவதானிப்பின் இடைநிலைகளில் ஒன்றிற் கூட அந்த ஒற்றைத்தேனீயின் உருவத்தை என்னால் வேறுபிரித்து இனங்காண முடியவில்லை. ஆனாலும், அங்குள்ள ஒவ்வொரு தேனீயிலும் அது ஒளிந்திருக்கின்றது. அவை ஒவ்வொன்றையும் ஆத்மார்த்தமாக இயக்குகின்றது.

*****

"டொக்" என்ற ஓசை காட்சிப்புலத்திலிருந்து விடுபட்டுக் கட்டற்றுப் பாய்ந்த என் எண்ணக் குதிரையை இழுத்துப் பிடிக்கின்றது. திரும்பிப் பார்க்கிறேன்.

என்னுடைய மகள் தேநீரை வைத்துவிட்டுப் போகிறாள். பெருமூச்சு விட்டுக்கொண்டே அதை எடுக்கிறேன்.

தேநீர் அளித்த உற்சாகத்துடன் பக்கத்திலே கிடந்த தடியை எடுத்து ஊன்றிக்கொண்டு எழுகின்றேன். யன்னலோரமுள்ள மரக்கட்டிலில் சற்றுநேரம் சரியும் உத்தேசம் எனக்கு. கட்டிலில் அமர்ந்த என்னை வெளியே கேட்ட கூச்சல் திரும்பவைக்கிறது.

எட்டிப் பார்க்கிறேன்.

என்னுடைய பேரனும், அவனையொத்த நாலைந்து 'வட்டுக்களும்' ஆரவாரமாக ஓடித்திரிகிறார்கள். அவர்கள் அவனுடைய வகுப்புத் தோழர்கள்போலும். கட்டிலில் அமர்ந்தபடி அவர்களின் விளையாட்டை இரசிக்கிறேன்.

கண்ணுக்கெட்டிய தூரத்தில் முறிந்த தென்னைகளுக்கூடாக நீலக்கடல் நழுவுகின்றது. கரையோரம் இடிந்துகிடக்கும் வீடுகளின் நடுவே, முருகைக்கற்களில் முளைத்த காவலரண்களில் ஓரிரு உருவங்கள் அசைவது மங்கலாகத் தெரிகின்றது. வெகுதொலைவில் கடலின் விளிம்பில் டோறாப் படகொன்று கிழக்காக விரைகிறது.

புகையிலைக் காரத்துடன் தொண்டைக்குள்ளே கரகரத்த சளியை வெறுப்புடன் காறித் துப்புகின்றேன்.

அந்தச் சிறுவர்களில் ஒருவன் திடீரெனக் கத்தியபடி துள்ளிக் குதிக்கிறான்.

"டேய்! அங்க பாரடா!"

அவனுடைய சின்ன விரலின்வழியே திரும்பிய எனக்குப் பகீரென்றது. அந்தத் தேன்கூட்டிலேயே அவர்கள் அத்தனைபேருடைய விழிகளும் ஆவலாக மொய்த்துக் கிடக்கின்றன.

மறுகணம் விர்ரென்று கற்கள் பறக்கின்றன.

"வேண்டாம்! வேண்டாம்!"

என்னுடைய குரல் குழறலாகத் தேய்கின்றது.

கற்கள் படுகின்ற ஒவ்வொரு தடவையும் தேனீக்கள் கலைந்து மறுபடியும் அடங்குகின்றன. அவர்கள் திரும்பத் திரும்ப எறிகிறார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் கூட்டிலிருந்து ஒரு சிறுதுண்டு பெயர்ந்து கீழே விழுகின்றது.

தொடர்ந்து நிகழ்ந்ததைக் காணச் சகிக்காமல் கண்களை இறுக மூடிக்கொள்கிறேன். அந்தச் சிறுவர்கள் ஓடி மறைந்த பின்னருங்கூட அவர்களுடைய அவலக்குரல்கள் ஒலித்துக்கொண்டிருப்பது போன்ற பிரமை எனக்கு.

கண்களை மெல்லத் திறந்து பார்க்கிறேன்.

தேனீக்கள் இன்னமும் ஓயவில்லை. அங்குமிங்கும் பறந்தபடியிருக் கின்றன. அவற்றுட்பல நித்தியகல்யாணி மரத்தின் இலைகளிலும், அருகிலுள்ள தென்னோலைகளிலும், வேலிப்பூவரசின் பசிய இலை களிலும் அமர்ந்திருந்து தங்களுடைய அமைதியைக் குலைத்த வர்களை ஆத்திரத்துடன் தேடுகின்றன.

எல்லாவற்றையும் இருள் விழுங்கிக்கொண்ட பின்னரும், என்னுள்ளே அலைபோலப் புரண்டெழும் உணர்வுகளிலிருந்து மீளமுடியாமல் தவிக்கிறேன்.

காற்றுடன் போரிடும் கடலின் பேரிரைச்சல் இருட்திரையைக் கிழித்துக் கொண்டு வந்து என் செவிப்பறையைச் சிதறடிக்கின்றது. தேனீக்களின் சிறகடிப்பும், உக்கிரமான ரீங்காரமும் இப்போதும் கேட்கின்றன.

இயற்கையின் ஒவ்வொரு அசைவையும் நுணுக்கமாக அறியக்கூடிய நீண்ட அனுபவமுள்ள எனக்கு எல்லாம் புரியத்தொடங்குகின்றது.

வெளிச்சம் (2003)

சுடலைக்குருவி

அகாலமரணங்களுக்கும், சுடலைக்குருவி எனப்படும் பறவைக்கு மான தொடர்புகுறித்து இப்போதெல்லாம் சிந்திக்கவேண்டியுள்ளது. இதுபற்றிய எனது மயக்கங்களெல்லாம் அவனுடைய மரணத்துக்குப் பிறகு முற்றிலுமாக மாறிவிட்டன. ஊதுபத்தியின் குமட்டுகின்ற மணத்தினுள் அமிழ்ந்தபடி சவப்பெட்டியில் கிடக்கும் அவனைப் பார்க்கும்போது எனக்குள் இந்த எண்ணம்தான் எழுந்தது.

இடதுகண்ணின்கீழ் கோரமாகச் சிதைந்துபோன அவனுடைய முகம் முழுவதுமாக மறைக்கப்பட்டிருக்கிறது. மூடப்பட்ட துணியினூடாக அவனுடைய முகம்பற்றிய அதிர்வுகள் வெளிக்கிளம்பி, என் மனப் பரப்பில் பல்வேறு அலைவுகளை ஏற்படுத்துகின்றன.

தொடரான அழுகையின் களைப்பில் துவண்டுபோயிருக்கும் மனைவி. வீட்டின் ஏதோவொரு மூலையில் கவலைகளற்று உறங்கும் அவனுடைய மகள்.

அறுந்துபோன அந்த உறவின் எச்சங்களான இவர்களைத்தவிர, நெருங்கியவர்கள் நாலைந்துபேரே இங்கு தென்படுகின்றனர். அவர்களிடமும் இறுக்கமான மௌனம் மொய்த்திருக்கிறது.

வழக்கத்தைவிடவும் மாறுபட்டதான இந்தச் சூழ்நிலையே அவனுடைய மரணத்தின் இயல்பையும், காரணத்தையும் கூறப்போதுமானது.

எனது நீண்டகால நண்பன் அவன். ஆரம்பகாலந்தொட்டே இருவருடைய சிந்தனைகளும் ஒரே திசையிலேயே நகர்ந்து வந்துள்ளன.

இறுக்கங்கள் நிலவிய காலப்பகுதியில், அவற்றுக் கெதிரான பல்வேறு செயலெடுப்புக்கள் எம்மால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவற் றுள் பெரும்பாலானவை மற்றவர்களுக்குத் தெரியாமலேயே நடந் தேறியவை.

எத்தகைய சூழலுக்கும் தம்மை இசைவுபடுத்திக்கொள்ளும் இயல்பின ரென்பதாலேயே தப்பிப்பிழைத்து வாழுதல் பலருக்குச் சாத்திய மாகின்றது. கடுங்கோடையில் மண்ணுட் புதைந்து, மழையைக் கண்டதும் தலையைக் காட்டும் தாமரையைப்போல இருப்பது வாழ்வைத் தக்க வைத்துக்கொள்வதற்கான வழி என்பதில் அவனுக்கு எரிச்சலே கிளம்பும்.

அவன் இதுதொடர்பாகக் கடின விவாதங்களை என்னுடன் நிகழ்த்தியி ருக்கிறான். இவ்வாறான விவாதங்களின் நடுவே சுடலைக்குருவியும் ஓரிருமுறை வந்துபோனதுண்டு. இறுகிப்போயிருக்கும் அவனுடைய முகம் அவ்வேளைகளில் அதிக தீவிரம்பெறும்.

சுடலைக்குருவிகள் மயானங்களில் கூடுகட்டி வாழ்வதாகவும், மரணம் நெருங்குவதை அவை உணர்ந்துகொண்டு குறித்த வீட்டின்மேல் ஓலமிட்டு எச்சரிப்பதாகவும் அவன் கூறிக்கொள்வான்.

பல்வேறு தளங்களிலும் சிந்தனைத் தெளிவுகொண்ட அவனுடைய கற்பிதங்கள் எனக்கு நகைப்பூட்டும். சிறுவயதுமுதலே சுடலைக்குருவி பற்றிய மனப்பதிவுகள் என்னுள்ளே வித்தியாசமானதாக இருக்க வில்லை. சுடலை என்ற சொல் பயமுறுத்தக்கூடியதான வயதுகளில் அக்குருவியின் ஓலம் முதுகுத்தண்டைச் சில்லிடவைத்ததுண்டு. ஓரளவு வளர்ந்தபின் மயானங்களுக்குச் செல்லத்தொடங்கியதும், அதுதொடர்பான அச்சவுணர்வுகள் முற்றிலுமாக அற்றுப்போயின.

பூவோடை மயானத்தின் மரங்களிலும், பற்றைகளிலும் அதன் கூட்டைத் தேடிப்பார்த்திருக்கிறேன். ஏமாற்றமே கிட்டியது.

கண்ணில் தென்படாத தன்மையே அக்குருவிபற்றிய அதீத புனைவுக ளுக்குக் காரணமாக இருந்திருக்கக்கூடும். இதன்பின்னர் அதன் இராக்குரல் மரணத்தின் முன்னெச்சரிப்பாக இல்லாது, இணையைத் தேடிப்பறக்கும் ஒரு பறவையின் உணர்ச்சிமிகு பாடலாகவே எனக்குக்

கேட்கத்தொடங்கியது. இதன்காரணமாக நான் அவனுடைய கருத்தை இலகுவில் நிராகரித்தேன்.

இரண்டுநாள்களுக்கு முன்னர்கூட சுடலைக்குருவிபற்றி என்னிடம் கூறினான். நள்ளிரவில் அது தன் வீட்டின்மேல் வட்டமிடுவதாகவும், அதன் குரல் தன்னை வெகுவாக எச்சரிப்பதாகவும் புலம்பினான்.

நான் சிரித்தது அவனைப் பாதித்திருக்கவேண்டும். ஒன்றும் கூறாது போய்விட்டான்.

அன்று இரவு அவன் கொல்லப்பட்டபோது சுடலைக்குருவிகுறித்து நான் கொண்டிருந்த எண்ணக் கட்டமைவுகள் யாவும் உடைந்து சிதறின. சுடலைக்குருவியின் ஓலத்துக்கும், அவனுடைய மரணத்துக்குமான தொடர்புகளை அறுத்தெறிய முயன்று தோற்றேன்.

அசாத்தியமான கனவுகள் வந்து என்னை மிரட்டத்தொடங்கின. மரணதேவன் பாசிநிறக் காவலர்கள் புடைசூழ வெள்ளைநிறமான எருமையில் ஏறி நள்ளிரவில் வருவதுபோலவும், அவனுடைய வருகையினைச் சுடலைக்குருவிகள் நாலாதிக்கும் பறந்து எச்சரிப்பது போலவும் உணர்ந்தேன்.

மரணதேவனுடைய வலதுகையில் வித்தியாசமாக வடிவமைக்கப்பட்ட சூலம்போன்ற அமைப்புக் காணப்பட்டது. அதிலிருந்து நெருப்பும், புகையும் மாறிமாறிச் சீறின. பிடரி நிறைந்த பழுப்பு மயிர்களுடன் ஒரு விசித்திரவடிவம் அவனுடைய ஆடையில் அடையாளப்படுத்தப் பட்டிருந்தது. இரத்தத்தில் ஊறிய வெள்ளைநிறச் சால்வையை அவன் அழகாக மடித்து அணிந்திருந்தான்.

சிலர் மரணதேவன்முன் மண்டியிட்டு வணங்குவதையும், அவன் அவர்களை ஆசீர்வதிப்பதுபோலத் தங்கப்பற்களையும், வைரங்கள் பதித்த எலும்புகளையும் வீசியெறிவதையும் கண்டேன்.

அவனுடைய மரணத்தையடுத்த இருநாள்களும் இவ்வாறான துர்க்கனவுகள் கண்டு திடுக்குற்று விழிப்பதாகவே என் இரவுகள் கழிந்தன. அவ்வேளைகளில் என்னுடைய மனைவியும், பிள்ளைகளும் மிரட்சியுடன் பார்ப்பதைச் சகிக்கமுடியவில்லை.

அவனுடைய மரணச்சடங்கில் கலந்துகொள்வதுகுறித்து எழுந்த கடும் மனப்போராட்டத்தின் பின்பே இங்கு வந்திருக்கிறேன்.

சம்பிரதாயப்படி இறுதிக்கிரியைகள் சுருக்கமாக முடிவடைந்து அவனைச் சவஊர்தியில் ஏற்றியாகிவிட்டது. ஏழுபேர் மட்டுமே கடைசி வரை பயணித்தோம்.

சுடலைக்குள்ளே நுழைந்ததும் என் விழிகள் அடர்ந்த மரங்களுக்குத் தாவி எதையோ ஆவலுடன் தேடின. கரகரத்துக்கொண்டிருந்த காகங்களையும், ஓரிரு மைனாக்களையும் தவிர வேறெந்தப் பறவையையும் காணமுடியவில்லை. உயர்ந்த மரக்கிளைகளில் காகக்கூடுகளே தென்பட்டன.

பற்றைகள் ஏதுமற்றுப் பெருமரங்களுடன் மட்டுமே வாழ்ந்து கொண்டிருந்த அந்த மயானத்தை ஏமாற்றத்துடன் பார்த்தேன்.

அங்கு வீசும் குளிர்ந்த காற்றும், ஒளிதழுவாத பசுந்தரையும் முன்பு போல என்னைக் கவரவில்லை. அவனைப் புதைக்கத் தோண்டப்பட்ட குழிக்கருகே புதிதாகக் கிடந்த மண்மேடுகள் என்னைப் பார்த்து முறைத்தன.

அவனை மண் விழுங்கிக்கொள்வதை மௌனமாகப் பார்த்தபடி நின்றேன். அவனுடைய சிந்தனைத் தெறிப்புகள், துணிச்சலான செயற்பிரவாகங்கள் எல்லாமே இந்த மண்ணுள் மறைவதுபோன்ற உணர்வில் அமிழ்ந்தேன்.

எல்லோரும் அகன்றபின்னர் நீளத்தொடங்கிய தனிமையின் உசுப்புதலில் மயானத்தைவிட்டு விரைவாக வெளியேறினேன்.

நள்ளிரவு.

ஊரடங்கின் கொடூர அமைதியில் எங்கள் ஊர் குளித்துக் கொண்டிருக் கிறது. அவனுடைய மரணத்தின் நெருடலால் கலைந்த உறக்கத்துள் நுழையும் உத்தேசத்துடன் என் இமைகளை ஒட்டவைக்க முயல்கி றேன்.

இவ்வாறான கடின முயற்சியின் எல்லையில் உணர்வுகள் மெல்ல மெல்ல அமிழும்வேளை, ஏதோவொரு சிறு அதிர்வு என்னை

எழவைக்கின்றது. கேள்திறனை இன்னும் கூர்மையாக்குகின்றேன்.

இப்போது சுடலைக்குருவியின் குரலை என்னால் கேட்கமுடிகின்றது.

இன்று எப்படியாவது அதைப் பார்த்துவிடவேண்டும் என்ற உந்துதலில் எழுந்து வெளியே வருகின்றேன். என் விழிகள் அடங்காத ஆவலுடன் வானத்தைத் துளாவுகின்றன.

வெகுதூரத்தில் நிலவின் ஒளிப்பரப்பைக் கீறியபடி ஓர் உருவம் பக்கவாட்டாகப் பறந்து முன்னேறி வருவது தெளிவாகத் தெரிகிறது.

இரவின் அத்தனை அழகுகளையும் பின்னோக்கித் தள்ளியபடி, மெதுவாக அசையும் சிறகுகளுடன் அது நெருங்கிவந்துவிட்டது.

பின்னர், என் வீட்டின்மேல் வட்டமிட்டு அவலமாக ஓலமிடுகின்றது.

சுடரொளி (2008)

நிலா

'நிலாவைக் காணவேண்டும்'

கிளிநொச்சிக்கு நியமனம் கிடைத்த நாளிலிருந்து இந்த எண்ணம் இடைக்கிடை எனக்குள்ளே தோன்றுகின்றது. ஐந்துவருடங்கள் வெளி மாவட்டத்தில் வேலைசெய்யவேண்டும் என்பது பெரும்பாலான அரசாங்க உத்தியோகத்தர்களுக்குக் கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய சட்டதிட்டங்கள் ஒருபுறமிருந்தாலும், வன்னிப்பிரதேசம் ஏற்கனவே அறிமுகமானது என்பதால் என்னால் மனத்திருப்தியுடன் வேலைசெய்யமுடிகின்றது.

ஒவ்வொருநாளும் பஸ் பிரயாணங்களிலேயே என்னுடைய பெரும் பாலான பொழுதுகள் கடந்துவிடுகின்றன. வட்டுக்கோட்டையிலிருந்து காலை ஆறுமணிக்குப் புறப்பட்டால் திரும்பி வீடுசெல்லும்போது இரவாகிவிடுகின்றது. கிளிநொச்சியில் பாதுகாப்பாகத் தங்கிநிற்ப தற்கு ஏற்ற இடமும் எனக்குக் கிடைக்கவில்லை.

இத்தனை நெருக்குவாரங்களுக்கு மத்தியில் நிலாவின் வீட்டைத் தேடிச்செல்வதற்கு நேரம் ஒதுக்குவதென்பது மிகவும் சிரமமானது. போரின் சுமைகளுக்குள் மூழ்கிப்போன என்னுடைய மனதுக்கு அவளுடன் பழகிய சிலநாள்கள் இதமான ஒற்றடமாக இருந்ததை மறக்கமுடியவில்லை. ஆழ்மனதின் நுண்ணிய இடுக்குகளில் அடைந்துபோயிருக்கும் பசுமையான பதிவுகளை இலகுவில் அழித்து விடமுடியாது.

இன்று எப்படியாவது நிலாவைச் சந்தித்துவிடவேண்டும் என்று காலையிலிருந்தே திட்டமிட்டிருந்தேன். அதற்காக மதிய உணவுக்குப் பின்னர் குறுகியநேர விடுப்புப் பெற்றுக்கொண்டேன். நிலாவைப் பார்த்துவிட்டு நான்குமணிக்குள் அலுவலகம் திரும்பிவிடவேண்டும் என்பதே எனது நோக்கமாகவிருந்தது.

நண்பனின் மோட்டார்சைக்கிளை இரவலாகப் பெற்றுக்கொண்டு பிரதானவீதியில் ஏறியபோது உச்சிவெயில் நெருப்பாக எரித்துக் கொண்டிருந்தது. கிளிநொச்சிநகரிலிருந்து உருத்திரபுரம் செல்லும் வழியில் ஒரு கலவன் பாடசாலைக்கு அருகில் வீடு இருப்பதாக அவளுடைய தாய் சுமதி முன்பு எனக்குச் சொல்லியிருந்தாள். அந்தக் குறிப்பை மனதில் வைத்துக்கொண்டு மோட்டார்சைக்கிளைச் செலுத்தினேன். கடையொன்றில் நிலாவுக்குப் பிரியமான சில பொருள்களை வாங்கிக்கொண்டேன்.

போரின் எச்சங்களை மிகவிரைவாக அகற்றவேண்டும் என்ற தீவிர முனைப்புடன் கிளிநொச்சிநகரம் பிரமாண்டமாகப் புனரமைக்கப்பட்டுள்ளதாக எனக்குத் தோன்றியது. நகர்ப்புறங்களையும், பிரதான தெருக்களையும் பிரகாசமாக்கி, ஏனைய இடங்களை அப்படியே கைவிடுகின்ற அரசியல் சித்துவிளையாட்டுக்கள் முடிவின்றி நீண்டு செல்கின்றன. இத்தகைய பாரம்பரிய நடனங்களுக்குப் பக்கவாத்தியம் வாசிப்பதற்கு இங்கு கடுமையான போட்டி நிலவுவது எமது தலைவிதியென்றுதான் சொல்லவேண்டும்.

கருமையாகப் பளபளக்கின்ற வீதியில் கனரகவாகனங்களின் அழுத்தமான தடங்கள் இடையிடையே காடுகளை நோக்கி முறிந்தன. விழுங்குவதற்காகக் காத்திருக்கும் மலைப்பாம்புகளின் திறந்த வாய்களைப் போலவே எனக்கு அவை தென்பட்டன.

உருத்திரபுரத்திலுள்ள அந்தப் பாடசாலைக்கு முன்னால் மோட்டார் சைக்கிளை நிறுத்தினேன். பாடசாலைகளுக்குரிய பிரத்தியேகமான ஆரவாரம் மெல்லிதாகக் கேட்டது. மழையைக் காணாது வறண்டு போன வயல்வெளி எதிரே புழுதியாக விரிந்தது. நாலைந்து கௌதாரிப்பறவைகள் வயற்புதர்களுக்குள் ஓடித்திரிந்தன. தூரத்து அணைக்கட்டுக்கு அருகில் வெண்ணிறமான தூபியொன்று முளைத்திருந்தது.

அருகிலிருந்த சிறியகடையில் நிலாவின் மாமாவின் பெயரைச் சொல்லி விசாரித்தேன்.

"அண்ணை. இதிலை கார்வண்ணன் வீட்டுக்கு எப்பிடிப் போறது?"

கடைக்காரர் என்னை ஒருமாதிரிப் பார்த்தார். பிறகு பக்கத்திலுள்ள ஒற்றையடிப் பாதையைக் காட்டினார்.

"இந்த வழியால் கொஞ்சத்தூரம் போனால் அந்த வீட்டிலைதான் முடியும்"

அவருடைய பேச்சில் ஒருவித தயக்கம் ஒட்டியிருப்பதை உணர்ந்து கொண்டேன். நன்றிகூறிவிட்டு மோட்டார்சைக்கிளைத் திருப்பினேன்.

இரண்டுபக்கமும் பற்றைகள் அடர்ந்த பாதை நீண்டுசென்றது. வழியில் வீடுகள் எவையும் தென்படவில்லை. பாதையின் முடிவிடத் தில் மோட்டார்சைக்கிளை நிறுத்திவிட்டு, தகரப்படலையை நகர்த்தி உள்ளே நுழைந்தேன்.

வளவு முழுவதும் தலைகளற்ற தென்னைமரங்கள் நடுகற்களைப் போல வரிசையாக நின்றன. தரைமட்டமாகிப்போன கல்வீட்டுக் கருகில் மண்ணால் கட்டப்பட்ட சிறுகுடிசையொன்று தென்பட்டது. அதன் வெளித்திண்ணையில் நிலாவின் தாய் சுமதி அமர்ந்திருப்பது தெரிந்தது. என்னைக் கண்டதும் அவள் எழுந்துநின்றாள்.

குரூரமான யுத்தம் விழுங்கிய சாதாரண மனிதர்களின் நிகழ்காலச் சாட்சியமாக அவள் உருக்குலைந்துபோயிருந்தாள். என்னை அடையாளம் கண்டதற்கான அறிகுறிகள் எதுவும் அவளுடைய முகத்தில் தென்படவில்லை.

"அக்கா! நான் முகுந்தன். தேவிபுரத்திலை சந்திச்சிருக்கிறம். எப்பிடி இருக்கிறீங்கள்?"

சம்பிரதாயமான கேள்வி அந்தச் சூழலுக்குப் பொருத்தமற்றதாகவே எனக்குத் தோன்றியது. தற்காலிகத் தங்குமிடங்களில் அறிமுகமாகும் எவரையும் நினைவில் நிறுத்திவைத்திருக்கக்கூடிய அவகாசமற்ற காலப்பகுதியில் நாம் சந்தித்திருந்தோம்.

அவள் என்னைச் சலனமற்றுப் பார்த்தாள்.

"நிலா எங்கை அக்கா?" ஆவலுடன் வினாவினேன்.

சுமதி என்னைக் கூர்ந்து பார்த்தாள். அவளுக்கருகில் நிலாவின் கரடிப் பொம்மை அழுக்கேறிக் கிழிந்துகிடந்தது.

"அவள் பள்ளிக்கூடத்துக்குப் போட்டாள்"

நான் என்னையே நொந்துகொண்டேன். நிலா பாடசாலைக்குப் போயிருப்பாள் என்ற விடயத்தைத் துப்புரவாக மறந்துவிட்டேன்.

'நிலா இப்போது ஆறாம் வகுப்பு படித்துக்கொண்டிருப்பாள். பழைய சுட்டித்தனங்களெல்லாம் குறைந்துபோயிருக்கும். என்னை நினைவில் வைத்திருப்பாளா?'

"நிலா வளர்ந்திருப்பாள் என்னக்கா? நல்லாப் படிக்கிறாளோ?"

என்னுடைய கேள்வி சுமதியைச் சற்று மலர்ச்சியடையவைத்தது.

"வகுப்பிலை எப்பவும் அவள்தான் முதலாம்பிள்ளை. மேடையில நிறையப் பரிசுகள் எல்லாம் வாங்குகிறவள்"

மிகுந்த பூரிப்புடன் சொன்னாள். வாழ்வில் அவளுக்குக் கிடைத்த துயரங்களையெல்லாம் நிலாவின் ஒளிர்வு ஒன்றே துடைந்தெறிந்து விடும் என்ற நம்பிக்கை அதில் தெரிந்தது.

"உதிலை கொஞ்சநேரம் இருங்கோ. அவள் பள்ளிக்கூடத்தாலை இப்ப வந்திடுவாள்" என்றவாறு கரடிப்பொம்மையையும் தூக்கிக்கொண்டு சுமதி உள்ளே போய்விட்டாள்.

நான் வெளித்திண்ணையில் அமர்ந்து நிலாவுக்காகக் காத்திருக்கத் தொடங்கினேன்.

எனக்கு நிலாவின் முகம் நன்றாக நினைவிலிருக்கிறது. ஆழ்ந்த உறக்கங்களில் ஏற்படுகின்ற கனவுகளின் சலனமாக அவள் என்னுள்ளே அவ்வப்போது உருப்பெறுவாள்.

*****

கிட்டத்தட்ட ஆறு வருடங்களுக்கு முன்னரான பெயர்வுக்காலம். வன்னிப்பெருநிலத்தில் விடாமல் துரத்துகின்ற எறிகணைகளிட மிருந்து தப்புவதற்காக மக்கள் ஒவ்வொரு ஊராக ஓடிக்கொண்டிருந்

தார்கள். அவ்வாறான அவதிமிக்க நாள்களில் ஒரு பின்மாலைப் பொழுதில் அவளைக் கண்டேன்.

அன்று காலையிலேதான் முரசுமோட்டையிலிருந்து என்னை தேவிபுரத்துக்குக் கொண்டுவந்து சேர்த்திருந்தார்கள். வலதுகாலைத் துளைத்திருந்த எறிகணைச்சிதறல் என்னை இயல்பாக நடமாட விடாமல் முடக்கிப்போட்டிருந்தது. தென்னந்தோப்புக்கு நடுவில் அமைக்கப்பட்டிருந்த சின்னஞ்சிறு கூடாரவீடுகளில் ஒன்றில் காயப்பட்ட சிலருடன் தங்கவைக்கப்பட்டிருந்த எனக்குப் பொழுதைக் கழிப்பது நரகவேதனையாக இருந்தது. வெகுதூரத்தில் விட்டுவிட்டுக் கேட்கின்ற வேட்டுச் சத்தங்கள் என்னை அலைக்கழித்தன.

எனது கூடாரத்திலிருந்து பார்க்கும்போது சற்றுத் தொலைவில் நாலைந்து சிறுவர்கள் ஒன்றாகக் குழுமியிருப்பது தெரிந்தது. தூரத்தில் கேட்கின்ற குண்டுச்சத்தங்களைப்பற்றிய அருட்டுணர் வுகள் எதுவுமற்று அந்தச் சிறுவர்கள் தமக்கென்று உருவாக்கிய தனியுலகில் அமிழ்ந்திருந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் அந்தச் சிறுமி துடிதுடிப்புடன் மின்னினாள்.

எழுச்சிபெற்ற பேரரசொன்றின் வனப்புமிக்க குட்டிஇளவரசியைப் போல அந்தச் சிறுமியின் பாவனை அமைந்திருப்பதாக எனக்குத் தோன்றியது. அவள் நடுவில் அமர்ந்திருக்க ஏனையோர் மகாமந்திரி களைப்போலவும், போர்த்தளபதிகளைப்போலவும் சுற்றிவர நின்றி ருந்தார்கள்.

கைத்தடியை ஊன்றியவாறு மெதுவாக வெளியே வந்தேன். புதிதாக வெட்டப்பட்ட பதுங்குகுழியை மூடியிருந்த தென்னங்குற்றியில் அமர்ந்து காலை நன்றாக நீட்டிக்கொண்டேன். கால்வலி என்னைக் குடையத்தொடங்கியது. என்னுடைய அசாதாரணமான சலனம் அந்தச் சிறுவர்களைப் பெரிதாகப் பாதிக்காவிட்டாலும் அந்தச் சிறுமி மட்டும் அடிக்கடி திரும்பிப் பார்த்தாள்.

சற்றுநேரத்தின் பின்னர் அவள் எழுந்து என்னைநோக்கித் தயங்கிய படி வந்தாள். அழகான வண்ணத்துப்பூச்சியொன்று மெதுவான சிறகடிப்புடன் அசைவதுபோல எனக்குத் தோன்றியது. அவள் எல்லையற்ற வசீகரத்துடன் என்முன்னே புன்னகையைச் சிந்தி

னாள்.

அவளுக்கு ஆறு வயதிருக்கலாம். மண்ணிறமான பெரிய கரடிப் பொம்மையொன்றை நெஞ்சோடு அணைத்துப் பிடித்திருந்தாள். பொம்மைகளுக்கும், குழந்தைகளுக்குமான உறவு கடவுளால் விதிக்கப்பட்டது. அவர்களுடைய உணர்வுகளைப் பரிமாறிக்கொள்ளக் கூடிய உருவங்களாகவே பொம்மைகள் விளங்குகின்றன. பொம்மை களுடனான உரையாடல்மொழி குழந்தைகளுக்கு மட்டுமே சாத்திய மானது.

வெள்ளைத்துணியால் சுற்றப்பட்டிருந்த என்னுடைய வலதுகாலில் அவளுடைய பார்வை சிக்கியிருந்தது. படபடக்கின்ற அவளுடைய பெரியவிழிகளில் ஏதோவொரு கேள்வி தொக்கிநின்றது.

"உங்கட பேரென்ன?"

முன்னறிமுகமற்ற சூழ்நிலையைச் சமாளிக்கும் நோக்கில் உரையாடலைத் தொடங்கினேன்.

"இளநிலா மாமா. என்னை நிலா எண்டு கூப்பிடுவினம்"

'மாமா'

சின்னஞ்சிறு பூவைப்போன்ற ஒரு குழந்தையின் மழலையாக வழிந்த அந்த உறவுச்சொல், இணையற்ற உள்ளக்கிளர்ச்சியை எனக்குள் ஏற்படுத்தியது.

தூய தமிழ்ப்பெயர்களின் இடுகைகள் வலியுறுத்தப்பட்ட எழுச்சிக் காலத்திலே பிறந்த குழந்தைகள் நிகரற்ற வரலாற்றின் முக்கியமான சாட்சிகளாக விளங்கப்போகிறார்கள் என்பதை உணர்ந்தேன். ஓர் இனத்தின் அடையாளமாகப் பாரம்பரியக் கலைகளையும், பண்பாட்டு அம்சங்களையும் எடுத்துக்காட்டினாலும் ஒருவருடைய பெயர் வெளிப்படுத்துகின்ற படிமம் ஏனைய சகல விடயங்களுக்குமான திறவுகோலாக அமைவதைக் காணலாம்.

"உங்கட அப்பா அம்மா எங்க இருக்கினம்?"

நெருக்கமான பிணைப்பு எனக்குள் ஏற்படுத்திய ஆனந்தமலர்ச்சியு

டன் அவளிடம் கேட்டேன்.

"அந்த வீட்டிலைதான் மாமா. அம்மாவும், அம்மம்மாவும் மட்டும்தான் இருக்கினம். அப்பா எங்கையோ தூர இடத்துக்குப் போட்டார்"

அவள் நீட்டிய விரலின் வழித்தடத்தில் என்னுடைய பார்வை பயணித்தது. சற்றுத் தொலைவில் முதிராத தென்னைகளின் நடுவே முளைத்திருந்த அவசரக்கூடாரங்கள் தென்பட்டன. அவற்றில் ஒன்றின் வாசலில் ஓர் இளம்பெண் அமர்ந்திருந்தாள். நிலாவின் தாயாக இருக்கலாம். அவள் எங்களையே பார்த்துக்கொண்டிருந் தாள்.

நிலாவின் பார்வை என்னுடைய காலையே வட்டமிட்டுக்கொண்டி ருந்தது.

"நீங்களும் சண்டை பிடிச்சனீங்களோ மாமா?"

"நான் சண்டைபிடிக்கேல்லை நிலா" இலேசாகப் புன்னகைத்தேன்.

"அப்ப இந்தப் புண் எப்பிடி வந்தது?"

அசாதாரணமான சூழல்கள் ஒருவரை எவ்வளவு முதிர்ச்சியடையச் செய்கின்றன! ஆறேழு வயதின் குழந்தைத்தனத்துக்கு அப்பாலான அவளுடைய தேடல் என்னை ஆச்சரியப்படவைத்தது.

"நான் வேலைசெய்த இடத்திலை குண்டு விழுந்து வெடிச்சது. அதுதான் காயம்பட்டது"

காலைத் தடவியபடி சொன்னேன். நான் சொன்னதை அவள் நம்பியதாகவே தோன்றியது. பாட்டி வடைசுட்ட தொன்மக் கதைகளைக் குழந்தைகள் ஆவலுடன் கேட்ட காலம் கடந்து போய்விட்டதாக நினைத்துக்கொண்டேன்.

வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இறந்துபோன நெருங்கிய நண்பர்க ளின் நீண்ட அனுபவக்கதைகள் என்னிடம் இருந்தன. என்னுடைய வாழ்க்கை திசைதிரும்பிய கணப்பொழுதுகள் குறித்த பதிவுகள் யாருக்குமே சொல்லப்படாத மூடிய பக்கங்களாகவே இருந்தன.

உயிர்வாழ்தல்குறித்த நிச்சயமின்மை யாழ்ப்பாணத்தில் நிலவிய சமாதானகாலத்தின் பிற்கூறுகளில் முகமாலையைத் தாண்டி

ஒருவாறு வன்னிக்கு வந்துசேர்ந்திருந்தேன். இரவுவேளைகளில் கரும்பச்சைநிறமான உருவங்கள் தந்தியாலான வாத்தியங்களை முழக்கிக்கொண்டு சவப்பெட்டிகளைக் காவியபடி ஊர்வலம் போவதைப்போலத் துர்க்கனவுகள்கண்டு திடுக்கிட்டு விழித்துக் கொள்வேன். வீதிகளெல்லாம் முற்றாக அடங்கிப்போன கடினமான ஒரு நாளுடன் பல்கலைக்கழகக்கல்வியைக் கைவிட்டேன். அதற்குப் பின்னரான என் வாழ்வு எவ்விதமான சமரசங்களுமற்றுப் பயணித்தது.

இனிவருகின்ற நாள்களில் நிலாவுடன் எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்று எண்ணிக்கொண்டேன்.

மேற்குப்பக்க அடிவானில் யுத்தவிமானங்களின் பேரிரைச்சல் கேட்டது. விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகள் தங்களுடைய இருப்பிடங்களை நோக்கிச் சிதறினார்கள்.

"கிபிர் வருகுது. அம்மா தேடுவா. நான் போறன் மாமா"

நிலா தன்னுடைய தாயை நோக்கி வேகமாக ஓடினாள். நடப்பவற்றைச் சலனமற்றுப் பார்த்துக்கொண்டிருந்தேன். விமானக் குண்டுவீச்சுக்களும், துப்பாக்கிவேட்டுக்களும், எறிகணைகளும் என்னோடு ஒன்றிப் போனவை. குருதிபீறிடும் காயங்களையும், சாவுகளையும் அடிக்கடி பார்த்துப் பழகியதால் சலனமற்று அமர்ந்திருந்தேன்.

இரண்டு விமானங்கள் அதீத ஒலியுடன் மேகத்திரையின் பின்னால் மறைந்தபடி விரைந்தன. சில வினாடிகளில் நிலம் அதிர்ந்து குலுங்கியது. புதுக்குடியிருப்புப் பக்கம் புழுதிப்புகார் மேலெழுந்தது. சரியான இலக்குகள் குறித்த நியாயமான கவலைகள் அவற்றுக்கு எப்போதுமே இருந்ததில்லை. புராணக்கதைகளில் வருகின்ற கொடூரமான அசுரர்களின் மாயப்பொறிகள் உண்மையிலேயே இருந்திருக்கக்கூடும் என்று நான் சிலவேளைகளில் நினைப்பதுண்டு.

ஓரிரு நாள்களில் அந்தச் சிறுபெண் என்னுடன் நன்றாக ஒட்டிக் கொண்டுவிட்டாள். உணவுக்கான அலைதல் மிகுந்த வேளைகளில் எதையாவது மிச்சம்பிடித்து நிலாவுக்காக வைத்திருப்பேன். அவளுடன் இணைபிரியாது காணப்படும் கரடிப்பொம்மையைப்

பற்றிக் கேட்டால் மீசைமாமா தந்தது என்று சொல்வாள். எந்த மீசைமாமா என்பதற்கு அவளிடம் தெளிவான பதில் இருக்காது. அந்த மீசைமாமா அவளுடைய தந்தையின் நண்பர்களில் ஒருவனாக இருந்திருக்கக்கூடும்.

அவளுடைய சின்ன உலகத்திலே மீசைமாமாக்கள் மிகுந்த நேசத்துக் குரியவர்களாக வைக்கப் பட்டிருந்தார்கள்.

நிலாவின் தாய் சுமதியுடன் இரண்டொரு தடவைகளே உரையாட முடிந்தது. உருத்திரபுரத்திலுள்ள வீட்டில் பொருள்கள் எடுத்துவரு வதற்காகச் சென்று திரும்பிவராத தன்னுடைய கணவனைப் பற்றியும், மூன்றுவருடங்களுக்கு முன்னர் முல்லைத்தீவுக் கடலில் சாவடைந்த தன்னுடைய தம்பி கார்வண்ணன் குறித்தும் அவள் புலம்புவாள். அவளுடைய ஒரேயொரு பிடிமானம் நிலா மட்டுமே என்பதாக ஆறுதல் சொல்லிக்கொள்வாள்.

தொடர்ந்துவந்த யுத்தநெருக்கடிகளுக்குள் சிக்கி நாங்கள் மீண்டும் மீண்டும் தொலைந்துபோனோம். முன்னறிவிப்புடன் வருகின்ற மரணங்களே எமது வாழ்வானது.

அதற்குப்பிறகு நான் நிலாவைச் சந்திக்கவேயில்லை. ஆனாலும், அந்தச் சிறுகுழந்தை ஏற்படுத்திய அதிர்வுகள் அவ்வப்போது என்னுள்ளே எழுவதைத் தவிர்க்கமுடியவில்லை.

போர் முடிவடைந்தபின்னர் தடுப்புமுகாமின் நெருக்கடிக்குள்ளால் ஒருவாறு மீண்டுகொண்டேன். தடைப்பட்டிருந்த என்னுடைய பல்கலைக்கழகக் கல்வியைச் சிரமப்பட்டுப் பூர்த்திசெய்தேன். உடனடியாகவே கிளிநொச்சியிலுள்ள விவசாயத் திணைக்கள அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக வேலை கிடைத்தது.

*****

என்னுடைய பார்வை மீண்டும் வாசலை நோக்கி விழுந்து மீண்டது.

'நிலா ஏன் இன்னும் வரவில்லை? பாடசாலை இரண்டுமணிக்கு முடிவடைந்திருக்குமே?'

நேரம் செல்லச் செல்ல என்னுடைய மனம் அவளுடைய வருகையை

எதிர்பார்த்துத் தவிக்கத் தொடங்கியது.

அந்தக் குடிசையின் இடப்பக்கமுள்ள பற்றைகளினூடாக வயதான ஒரு பெண் வருவது தெரிந்தது. அவளுடைய தலையிலே விறகுக்கட்டு இருந்தது. அவள் காவிவந்த சுமையை ஓரமாகப் போட்டுவிட்டுப் பெருமூச்சுவிட்டபடி என்னை ஏறிட்டுப் பார்த்தாள்.

"தம்பி ஆரைத் தேடுகிறீங்கள்?"

நெற்றியில் வழிகின்ற வியர்வையைத் துடைத்தவாறு கேட்டாள். இந்தப் பெண்ணை ஏற்கனவே பார்த்த நினைவு. நிலாவின் அம்மம்மாவாக இருக்கவேண்டும்.

"நான் தேவிபுரத்திலை உங்கட கொட்டிலுக்குப் பக்கத்திலை இருந்தனான்...." தயங்கியபடி இழுத்தேன்.

"எனக்கு ஒண்டும் ஞாபகமில்லை. சுமதியோடை கதைச்சனீங்களோ? குடிக்க ஏதாவது தரட்டோ? "

"எனக்கு ஒண்டும் வேண்டாம் அம்மா. நிலாவைப் பாத்துக்கொண்டு நிற்கிறன். இன்னும் பள்ளிக்கூடத்தாலை வரேல்லை எண்டு சொன்னவ"

அவள் சில கணங்கள் மௌனமாக இருந்தாள். பின்னர் குடிசையைப் பார்த்தபடி மெல்லச் சொன்னாள்.

"நிலா... செத்துப்போச்சுது தம்பி"

நான் அதிர்ந்துபோனேன்.

"புதுமாத்தளனிலை இருக்கேக்கை குண்டுவிழுந்து சிதறிப்போச்சுது. உடம்புகூடக் கிடைக்கேல்லை. அதிலையிருந்து சுமதிக்கு மாறாட்டம். நிலாவின்ர பொம்மையைத் தூக்கிக்கொண்டு றோட்டு றோட்டாய்ப் புலம்பித் திரியுது"

அந்த முதியபெண் துவண்டுபோய் நிலத்தில் அமர்ந்துகொண்டாள்.

நான் பேச்சற்றுப்போய்த் தளர்ந்தநிலையில் திரும்பி நடந்தேன். நிலாவுக்காக வாங்கிவந்த பொருள்கள் திண்ணையில் சரிந்து

கிடந்தன. குடிசையினுள்ளே விசும்பல்கள் தேய்ந்து ஒலித்தன.

நான் மெதுவான வேகத்தில் அலுவலகம் திரும்புகிறேன். என்னுடைய மனம் இறுகிக் கிடக்கிறது.

வீதியோரத்துச் சுவர்களில் தேர்தல்கால வண்ணச் சுவரொட்டிகள் ஒப்பனையேறிய முகங்களுடன் மின்னுகின்றன.

வழியெங்கும் பற்றைகளின் நடுவே வெண்ணிறமான கூடாரங்கள் நிரந்தரமான வறுமையையும், ஆற்றமுடியாத சோகங்களையும் சுமந்தபடி தமக்கான மீட்பர்களை நோக்கித் தவமிருக்கின்றன. அந்தக் கூடாரங்களின் முன்னே அழுக்கேறிய ஆடைகள் அணிந்த சிறுவர்கள் கண்களில் வழியும் ஏக்கங்களுடன் வீதியில் விரைகின்ற வாகனங்களைப் பார்த்தபடி நிற்கிறார்கள்.

எதிர்காலம்பற்றிய நம்பிக்கைகள் தொலைந்துபோன புராதனமான கிராமங்களின் புழுதித்தெருக்களில், பெருநகர வணிகர்கள் விதவிதமான பொம்மைகளைக் கூவி விற்கிறார்கள்.

வெளியுலகுக்குத் தெரியாத பல்லாயிரம் கதைகளைத் தம்முள்ளே வைத்திருக்கும் தூரத்துப் பெருங்காடுகள் மௌனமாக அழுகின்றன.

புதுவிதி (2016)
மீள்பிரசுரம் - தமிழ்நாதம், ஜேர்மனி (2016)

பயணம்

கிளிநொச்சிநிலையத்தில் தரித்திருக்கும் புகையிரதம் இன்னும் புறப்படவில்லை. கொழும்பிலிருந்து வருகின்ற நகர்சேர் கடுகதி தாமதமாவதால் அது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

புகையிரதத்தின் இரண்டாம்வகுப்புப்பெட்டி பயணிகளால் நிறைந் திருக்கிறது. பெரும்பாலான இருக்கைகளில் இளவயது ஆண்களே அமர்ந்திருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கும்போது விடுமுறையில் ஊருக்குப் போகும் படையினரைப்போலவே எனக்குத் தோன்று கின்றது. ஏறக்குறைய இருபத்தைந்து வயதுகள் மதிக்கத்தக்க அவர்கள் அண்மைக்காலத்திலேயே வேலையில் இணைந்திருக்கக் கூடும். மலர்ச்சியற்ற அவர்களின் முகங்களில் பல்வேறு சிந்தனைகள் தேங்கிக்கிடக்கின்றன. அவர்கள் தங்களுடைய கைத்தொலை பேசிகளை நோண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

எனக்கு மறுபக்கத்திலுள்ள இருக்கைகளில் இரண்டு சிறுவர்கள் விளையாட்டுக்கணனியில் மூழ்கிப்போயிருக்கிறார்கள். எதிரே அவர்களின் பெற்றோர் மௌனமாக அமர்ந்திருக்கிறார்கள். அந்தக் குடும்பத்தின் உடைகளையும், அசாதாரணமான பாவனைகளையும் பார்க்கும்போது வெளிநாட்டிலிருந்து ஊருக்கு வந்து திரும்புப வர்களைப்போலத் தெரிகிறது.

பகட்டான ஆடையணிந்த இரண்டு இளைஞர்கள் எனக்கு முன்னால் அமர்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய கைகளில் நவீனரகமான தொலைபேசிகள் மின்னுகின்றன. சமீபத்தில் வெளியான திரைப்

படத்தில் நடித்த அறுபதுவயதுக் கதாநாயகனின் அதிமானுட வீரசாக சங்கள் குறித்து அவர்கள் தீவிரமாக விவாதிக்கிறார்கள்.

பெட்டியின் ஒரு மூலையில் குழந்தையொன்று சிணுங்கி அழுவது மெல்லிதாகக் கேட்கிறது. அந்தக் குழந்தையின் தாய் மெதுவான குரலில் தாலாட்டித் தேற்றுகின்றாள். யாரோ திறந்துமூடிய மலசல கூடத்தின் துர்நாற்றம் பெட்டி முழுவதும் வியாபிக்கின்றது.

இவற்றுக்கு மத்தியில் அந்தக் குரல் மிகவும் பலவீனமாக ஒலிக்கின்றது.

"கச்சான்! முறிகண்டிக் கச்சான்!"

மெல்ல நிமிர்ந்து பார்க்கிறேன்.

பெட்டிகளின் இணைப்புக் கடவையினூடாக அவன் மெதுவாக நடந்துவருகிறான். இடதுகால் இலேசாகச் சாய்ந்து இழுபடுகின்றது. அவனுடைய ஒருபக்கக் கன்னம் நெருப்பிலே தீய்ந்ததுபோலக் கருகிக் காணப்படுகின்றது. வலதுகை மணிக்கட்டுடன் துண்டாடப்பட்டு மழுங்கிக் கிடக்கிறது. அந்தக் கையின் எஞ்சிய பாகத்தில் கொழுவப்பட்ட பையில் சிறிய அளவிலான கச்சான்பொதிகள் நிரம்பியிருக்கின்றன.

இருக்கைகளில் அமர்ந்திருக்கும் ஒவ்வொருவருடைய முகங்களை யும் வாசிப்பதுபோன்ற தீவிரம் அவனில் தெரிகிறது. புகையிரதம் புறப்படுவதற்கு முன்னர் இயன்றளவு கச்சான்களை விற்று விடவேண்டும் என்ற பரிதவிப்புடன் அவன் மீண்டும் குரலெழுப்பு கிறான்.

"கச்சான்! முறிகண்டிக் கச்சான்!"

இடதுகையில் இரண்டு கச்சான் பொதிகளை உயர்த்திப் பிடித்தவாறு அவன் முன்னோக்கி வருகின்றான்.

அவனுடைய முகம் நன்கு பரிச்சயமானது போன்றதொரு அலைக் கழிப்பில் திணறுகின்றேன். ஏதோவொரு சந்தர்ப்பத்தில் அவனுடன் உரையாடியிருக்கிறேன் என்பதை என்னால் உணரமுடிகிறது.

அவனைப்பற்றிய அழுத்தமான பதிவுகளை என்னுள்ளே தேடிச் சலித்துப்போகிறேன்.

அந்த இரண்டு சிறுவர்களும் கச்சான் வாங்கித் தரும்படி தாயிடம் நச்சரிக்கிறார்கள். அதற்கு அந்தப்பெண் நாகரிகமான ஆங்கிலத்தில் மறுப்புத் தெரிவித்தபடியிருக்கிறாள். அவளுடைய கணவன் இதற்குச் சம்பந்தமில்லாதவனைப்போல யன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருக்கிறான். கடைசியில் அவள் தன்னுடைய பையிலிருந்து நொறுக்குத்தீன் பொதிகளை எடுத்துத் தருகிறாள். சிறுவர்கள் இருவரும் சமாதானமாகிறார்கள்.

ஆவலுடன் காத்திருந்த கச்சான்காரன் மிகுந்த ஏமாற்றமடைகிறான். அவனுடைய கண்கள் அந்தச் சிறுவர்களின் கைகளிலிருந்த காற்ற டைத்த உணவுப்பொதிகளை வெறுப்புடன் பார்க்கின்றன.

"முறிகண்டிக் கச்சான்!"

அவனுடைய குரல் சற்று உரத்து ஒலிக்கின்றது.

"பக்கட் கீயத?"

காதோரம் தலைமுடியை வழித்திருந்த, மீசையற்ற இளைஞன் ஒருவன் விலையை விசாரிக்கிறான்.

"பணகாய் மாத்தயா"

கச்சான்காரன் அரைகுறையான உச்சரிப்புடன் பதிலளிக்கின்றான். அந்த இளைஞன் நீட்டிய ஐம்பது ரூபாய்த்தாளைப் பெற்றுக்கொண்டு கச்சான் பொதியொன்றைக் கொடுக்கிறான். இப்போது அவனுடைய முகத்தில் சிறுமலர்ச்சி தெரிகின்றது. குரலில் உற்சாகம் தொற்றிக் கொள்கின்றது.

"ரட்ட கஜ்! ரட்ட கஜ்!"

கச்சான் வாங்கியவனிடம் யாரோ ஏதோ சொல்ல, அவர்கள் கொல் லென்று சிரிக்கிறார்கள். கச்சான்காரனின் முகம் சற்று இறுகுகின்றது.

அவன் எதுவும் பேசாமல் நான் அமர்ந்திருந்த இருக்கைக்கு அருகில் வருகிறான். இரண்டு கச்சான் பொதிகளை எடுத்து எனக்கு முன்னிருந்த இளைஞர்களிடம் நீட்டுகின்றான்.

"கச்சான் வேணுமோ அண்ணை ? நல்ல முறிகண்டிக் கச்சான். ஐம்பது ரூபா"

எனக்கு எதிரேயுள்ள இளைஞர்களில் ஒருவன் பொதியை வாங்கிக் குலுக்கிப் பார்க்கிறான்.

"நேற்று வறுத்த கச்சான் மாதிரிக்கிடக்கு" என்றவாறு கச்சானைத் திருப்பிக் கொடுக்கிறான்.

"இல்லை அண்ணை. புதுசு. விடிய வெள்ளெண அம்மாதான் வறுத்தவ"

அவனுடைய குரல் இலேசாக இடறுகின்றது.

அந்த இளைஞன் அவனைப் பொருட்படுத்தவில்லை. மீண்டும் தன்னுடைய நண்பனுடன் திரைப்படத்தைப்பற்றி உரையாடத் தொடங்குகிறான்.

கச்சான்காரன் தயங்கி நிற்கிறான். நான் ஐம்பது ரூபாவைக் கொடுத்துக் கச்சான்பொதியொன்றை வாங்குகின்றேன். அந்தக் கணத்தில் அவனுடைய நெருக்கமான முகத்தோற்றம் என்னுடைய சந்தேகத்தை மீண்டும் கிளறிவிடுகின்றது. அவன் நன்கு அறிமுகமானவன் என்ற உணர்வு எனக்குள் மெல்லமெல்ல உருப்பெறுகின்றது.

'நிச்சயமாக இவனை எங்கேயோ சந்தித்திருக்கிறேன்'

அவனிடம் நேரடியாகக் கேட்க நினைத்துத் தடுமாறுகின்றேன்.

"சக்குப் பிடிச்ச பிஞ்சுக்கச்சானை முறிகண்டி எண்டு சொல்லித் தள்ளிப்போடுவாங்கள். மோட்டுச்சனம் தெரியாமல் வாங்கி ஏமாறுதுகள்"

எனக்கு முன்னிருந்த இளைஞன் முணுமுணுக்கிறான். காதில் எதுவும் விழாததுபோலக் கச்சான்காரன் எங்களைக் கடந்து அடுத்த பெட்டிக்குப் போகிறான். நான் கச்சான்களை உடைக்கத்தொடங்குகிறேன்.

'இவனை எங்கே சந்தித்திருக்கிறேன்? ஒருவேளை... செழியனாக இருக்குமோ? முகம் முழுவதும் குரூரமான வடுக்களைச் சுமந்தபடி

ஊனமுற்றுப் போயிருக்கும் இவனிடம் செழியனின் சாயல் இல்லையே. இவனுடைய குரலும் வித்தியாசமாக இருக்கிறதே! செழியன் இப்போது உயிருடன் இருப்பானா?'

ஆழ்ந்த யோசனையுடன் வெளியே பார்க்கிறேன்.

பயணிகள் சிலர் கீழே இறங்கி நிற்கிறார்கள். நடைமேடையின் ஓரத்தில் நாலைந்து காகங்கள் உணவுத்துணுக்குகளைத் தேடித் தத்தித் திரிகின்றன. நீர்த்தொட்டிக்கு அருகில் இரண்டு நாய்கள் சுருண்டு படுத்திருக்கின்றன.

கிளிநொச்சிப் புகையிரதநிலையம் பிரமாண்டமாகக் அமைக்கப் பட்டிருக்கிறது. கட்டடத்தில் பூசப்பட்ட செம்மஞ்சள் வண்ணம் எடுப்பாக மின்னுகின்றது. வீழ்ச்சியடையாத பேரரசின் குறியீடாகக் கருதப்பட்ட கிளிநொச்சி நகரம், இப்போது அழிவுகளின் சுவடுகள் எதுவுமற்று, மாயப்பேருலகாக நிமிர்ந்து நிற்பதாக எனக்குத் தோன்றுகின்றது.

பத்து வருடங்களுக்குமுன்னர் சமாதானப் போர்வைமூடிய ஆசுவாசக் காலம் அது. சமூகசேவை நிறுவனங்களை ஒன்றிணைத்த கருத்தரங் கொன்று கிளிநொச்சியில் நடைபெற்றபோது, எனது ஊர் அமைப்பின் சார்பாக வந்திருந்தேன். நீதிமன்றக் கட்டடத்துக்கு அண்மையிலுள்ள பல்நோக்கு மண்டபத்தில் அந்தக் கூட்டம் நடைபெற்றது நினைவிருக் கின்றது.

சமூகமேம்பாட்டை நோக்கிய பல்வேறு முன்மொழிவுகள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. ஏதோவொரு விடயத்தில் எனக்கும், இன்னொரு வருக்கும் ஏற்பட்ட கடுமையான வாக்குவாதத்தை, அந்தக் கூட்டத்தை ஒழுங்குபடுத்திய இளைஞனின் கருத்துக்கள் வெகு இலகுவாகத் தீர்த்துவைத்தன. மாற்றுக்கருத்துள்ளவர்களையும் வசப்படுத்தும் சக்தி அந்த இளைஞனின் குரலுக்கு இருந்தது. அரசியல் சார்ந்தும், சமூகவியல் குறித்தும் அவன் ஆழமான அறிவைக் கொண்டி ருந்தான்.

மிகவும் எடுப்பான தோற்றமுடைய அவன், தன்னுடைய பெயர் செழியன் என்று அறிமுகப்படுத்திக்கொண்டான். அன்றைய கூட்டத்துக்கு அவன் சாதாரண உடையிலே வந்திருந்தான். தன்னு டைய பதவிநிலையை அவன் வெளிப்படுத்தவேயில்லை.

மதியஉணவின்போது அவன் என்னுடன் சிநேகமாக உரையாடினான். சொந்தக் கிராமமான பாவற்குளத்தைவிட்டுப் பன்னிரண்டு வயதில் இடம்பெயர்ந்ததாகச் சொன்னான். தன்னுடைய தந்தை அந்தக் கலவரத்தில் வெட்டிக் கொல்லப்பட்டதாகவும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்த மூத்தசகோதரி காணாமல் போனதாகவும் துயரப்பட்டான். தன்னுடைய தாய் மாங்குளத்தில் தனியாக இருப்பதாகவும் கூறினான். அவற்றைச் சொல்லும்போது அவனுடைய கண்கள் கசிந்தது இப்போதும் எனக்கு ஞாபகத்திலிருக்கிறது.

அதற்குப் பிறகு செழியனை ஒரேயொருமுறை மட்டுமே காண முடிந்தது. சமாதானக் கதவுகள் மூடியும் மூடாமலும் போக்குக் காட்டிய தளம்பல்நிலையில், முகமாலையை அண்மித்த இரண்டாவது பாதுகாப்பு மண் அணைக்கருகில் அவனைக் கண்டேன். கரும்பச்சை நிறமான உடையணிந்தவாறு தன்னுடைய மெய்ப்பாதுகாவலர்களுடன் ஒரு வாகனத்தின் அருகில் நின்றிருந்தான்.

பேருந்திலிருந்து கையசைத்த என்னை அவன் கவனிக்கவில்லை.

'அவனாக இருக்குமோ?'

மனச்சலனங்களின் தள்ளாட்டத்தினால் வெகுவாகக் குழம்புகிறேன். பக்கத்துப் பெட்டியில் அவனுடைய குரல் மெல்லிதாகக் கேட்கின்றது. அவன் திரும்பி வருகிறான்.

"கச்சான்! ஐம்பது ரூபா"

நான் திரும்பிப் பார்ப்பதை அவன் ஓரக்கண்ணால் அவதானிக்கிறான். அந்தச் சிறுவர்களுக்கு அருகில் வந்ததும் அவனுடைய கால்கள் மீண்டும் தடைப்படுகின்றன. அவர்கள் கச்சானை மறந்து போய்த் தம்பாட்டில் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். நான் மிகுந்த தயக்கத்துடன் மெதுவாகக் கேட்கிறேன்.

"நீங்கள் செழியன்தானே?"

அவனுடைய முகம் சட்டென்று மாறுகின்றது. சற்றுத் தடுமாறியபடி எனக்கு எதிரே அமர்ந்திருக்கும் இளைஞர்களைப் பார்க்கிறான். இலக்கின்றி அலைகின்ற அவனுடைய கண்கள் என்னைச் சந்திப்பதைத் தவிர்ப்பது நன்றாகத் தெரிகிறது.

"நாங்கள் இங்க நடந்த அபிவிருத்திக் கூட்டத்திலை சந்திச்சிருக்கிறம்"

மிகுந்த ஆர்வத்துடன் நினைவூட்டுகிறேன்.

ஒருகணம் என்னைக் கூர்ந்து பார்த்தவன், 'இல்லை' என்பதுபோலத் தலையசைக்கிறான்.

அவனுடைய உதடுகளில் ஒருவித இறுக்கம் ஒட்டியிருந்ததை அவதானிக்கமுடிகிறது. அதற்கு மேலும் உரையாடலைத் தொடர்வதற்கு அவன் விரும்பவில்லை என்பதைப் புரிந்துகொள்கிறேன். அடுத்துவந்த கணங்களை மௌனப்பறவை விழுங்குகின்றது.

அதேவேளை கொழும்பிலிருந்து வருகின்ற கடுகதிப் புகையிரதத்தின் ஓசை சற்றுத்தொலைவில் கேட்கிறது. எதிர்ப்பக்கமுள்ள நடைமேடையில் அது நிறுத்தப்படுகின்றது. அதைக் கவனித்த அவன் ஒரு காலை இழுத்தபடி விரைவாகச் சென்று இறங்குகிறான்.

எங்களுடைய புகையிரதம் புறப்படப்போவதற்கு அறிகுறியாக விசில் சத்தம் உரத்துக்கேட்கிறது. நான் யன்னலினூடாக வெளியே எட்டிப் பார்க்கிறேன்.

கீழே நின்ற பயணிகள் பரபரவென்று ஏறுகிறார்கள். அவன் ஒருவாறு அவர்களை விலத்திச் சென்று புகையிரதநிலையத்தின் வெறுமையான இருக்கையொன்றில் அமர்ந்துகொள்கிறான். அவனுடைய தலை கவிழ்ந்துகிடக்கிறது. விலைப்படாமல் எஞ்சிய கச்சான் பொதிகளை இடதுகை அளைந்துகொண்டிருக்கிறது.

துயரப்பெருவெளியில் எல்லோராலும் கைவிடப்பட்டுச் சிதைந்து போன ஒருவனைப்போலவே எனக்கு அவன் தென்படுகிறான்.

புகையிரதம் இலேசான குலுக்கத்துடன் அசையத்தொடங்குகின்றது. கடக்கும்போது அவன் நிமிர்ந்து என்னைப் பார்க்கிறான்.

அந்தப் பார்வையில் உறைந்திருந்த ஆற்றமுடியாத சோகம் என்னைத் தொடர்கின்றது.

கலைமுகம் (2016)

பாழ்வெளி

காற்றுக்கூட இலகுவில் புகமுடியாத இந்த இடத்தில் நான் நீண்டகாலமாக அடைபட்டுக் கிடக்கிறேன். இங்கு ஆரம்பத்தில் எனக்குத் தொந்தரவுகள் அதிகமாகவேயிருந்தன. கரியநிறமான வண்டுகளும், துர்நாற்றமுடைய வெள்ளைப்புழுக்களும் மேலும் கீழும் ஊர்ந்துதிரியும். சீழ்போன்ற மஞ்சள்நிறமான திரவம் என்னுடைய காயங்களிலிருந்து எப்போதும் வடிந்துகொண்டிருக்கும். அந்தத் திரவத்தை உப்புமண் உறிஞ்சிக் குடிக்கின்ற ஒலியைக்கூட நான் உணர்ந்திருக்கிறேன்.

ஒரு கணநேரச் சுவாசத்துக்காக நான் திணறித் துடித்த கடினமான பொழுதுகள் அவை. அவ்வேளைகளில் அவற்றையெல்லாம் சகித்துக்கொள்வதைத் தவிர வேறுவழிகள் இருந்ததில்லை.

இப்போது எனக்கு எல்லாமே பழகிவிட்டது. புற உணர்ச்சிகள் முற்றாக அற்றுப்போனதால் என்னால் வலிகளை உணரமுடிவதில்லை. என்னுடைய அம்மா நேர்ந்து கட்டிவிட்ட செப்புத் தகடு மட்டும் மினுக்கம் குறையாமல் அப்படியே இருக்கிறது. எனக்கு மட்டுமே சொந்தமான எல்லாவற்றோடும், என்னுடைய கொலுசுகளையும் சேர்த்துக் களவாடியவர்கள் இந்தத் தகட்டைமட்டும் எடுக்கவில்லை.

இந்தச் செப்புத்தகட்டைப் பார்க்கும்போது அம்மாவின் நினைவுகள் பொங்கியெழுவதைக் கட்டுப்படுத்தமுடியாமல் தவிக்கிறேன். அவளுக்காக ஒருதுளி கண்ணீரைக்கூட வெளிப்படுத்த இயலாது வெறுங்கோதாகவே துவண்டு கிடக்கிறேன்.

எனக்கு ஏன் அவ்வாறு நிகழ்ந்தது? கடந்தகாலக் கொடூரங்களின் அழுத்தமான பதிவுகளை நான் நன்கு அறிந்தவள். அந்த அனுப வங்களின் அருட்டுணர்வுடன் என்னால் இலகுவாகத் தப்பித்திருக்க முடியும். ஆனாலும், நானாகவே இங்கு சிக்கிக் கொண்டேன்.

அந்த அவலநிகழ்வின் சலனங்கள் என்னுடைய மனத்திரையில் தாறுமாறாக உலாவுவதைப்போன்ற காய்வில் அமிழ்கிறேன்.

*****

புராதனமான இந்தப் பெருவெளியின் சர்வவல்லமை பொருந்திய காவலர்களாக அவர்கள் தங்களைக் காட்டிக்கொண்டார்கள். இங்கு ள்ள மயானத்தின் கரிய புகை சுருளாக அலைந்து உறைகின்ற சதுப்பு நிலங்களில் கூடாரங்களை அமைத்துக் குடியேறினார்கள். அந்தக் கூடாரங்களுக்கு நடுவே தங்களுடைய கடவுளைப் பெருங்கல்லாக இருத்தினார்கள். சுத்திகரித்தல் என்ற வடிவத்தில் தமக்குத் தேவை யான எல்லாவற்றையும் அவர்களால் பெற்றுக் கொள்ள முடிந்தது.

அவர்கள் புன்னகை சிந்துகின்ற அழகான முகமூடிகளைப் பகலில் அணிந்து கொள்வார்கள். இருட்டத்தொடங்கியதும் பேய்களைப் போலக் கொடூர வடிவங்கொள்வதாகவும், வீதியில் எவராவது தனி யாகச் சென்றால் உருவேறிக் கூத்தாடுவதாகவும், அவர்களுடைய கூக் குரல்கள் முள்ளந்தண்டைச் சில்லிடவைப்பதாகவும் தூரத்துக் கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் கூறிக்கொள்வார்கள். இந்தப் பரந்த வெளி சாதாரணமானவர்கள் இரவுவேளைகளில் செல்வதற்கு அஞ்சு கின்ற நிலப்பரப்பாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டது.

அகாலவேளைகளில் வீதியைக் கடக்கின்ற பேயோட்டிகள் அவர்களை அடித்துவிரட்டுவார்கள். பேயோட்டிகள் தாக்கும்போது தப்பிச் செல் கின்ற அவர்கள், பின்னர் திரும்பி வந்து வழிப்போக்கர்களை மிதித்துச் சிதைப்பார்கள். பேயோட்டிகள் அவர்களைக் கனவிலும்கூடத் துரத்திக் கொண்டிருந்தார்கள். அதனால் பேயோட்டிகளை அழிப்பது மட்டுமே தங்களுடைய பிரதான நோக்கம் என்று எல்லோருக்கும் சொல்லிக் கொண்டார்கள். ஆனாலும், பேயோட்டிகளை அவர்களால் இனங் காண முடிந்ததில்லை.

பாடசாலைக் கல்விக்காகவும், தனியார் வகுப்புக்களுக்காகவும் நான் ஒவ்வொருநாளும் நகருக்குச் சென்றுவருவேன். பேருந்துகள் ஒழுங்காக ஓடத்தொடங்காத இறுக்கமான காலப்பகுதியில் துவிச்சக்கர வண்டியொன்றே எனக்குத் துணையானது. சில வேளைகளில் ஓரிரு நண்பிகள் என்னுடன் கூடவருவார்கள்.

என்னுடைய அம்மா நயினாதீவு அம்பாளிடம் வேண்டிக்கொண்டு செப்புத்தகடொன்றைக் கட்டிவிட்டாள். உயர்தரப் பரீட்சையில் சிறப் பாகச் சித்தியடைவதற்கான பிரார்த்தனை என்று நண்பிகள் என்னைக் கேலிசெய்தார்கள். ஆனால், அதைக் கட்டியிருக்கும் காரணம் எனக்கும், அம்மாவுக்கும் மட்டுமே தெரியும்.

நகரை நோக்கிய பயணங்களின்போதுதான் அவர்களுடைய முகங்கள் எனக்கு அறிமுகமாயின. அந்தச் சந்தியில் அவர்கள் ஐந்து பேரை எப்போதும் காணக்கூடியதாக இருந்தது.

வீதியில் படபடக்கும் வெண்ணிறமான வண்ணத்துப்பூச்சிகளைக் கூட அவர்கள் துரத்தித் திரிவதை நான் கண்டிருக்கிறேன். அந்தப் பூச்சிகளின் வெவ்வேறான பருவங்களையெல்லாம் அவர்கள் பொருட் டாகக் கருதவேயில்லை. வண்ணத்துப்பூச்சிகளைப் பிடிப்பதன்மூலம் பேயோட்டிகள் பெருகுவதைக் குறைக்கலாம் என்றும் சொல்லிக் கொண்டார்கள்.

அவர்கள் பேசுகின்ற அந்நியமொழி என்னைப் பின்தொடர்ந்து வதைக்கும். அந்தமொழி என்னை ஒருபோதுமே வசீகரித்ததில்லை. அவர்களைப்போலவே அதுவும் கரடுமுரடாக இருப்பதாக எனக்குத் தோன்றும். அவர்கள் என்னைப் போகவிடாது தடுத்துநிறுத்தி, வித்தாரக் கதைகள் பேசி நேரத்தை கடத்துவார்கள். தமது விசாரிப்புக் களுக்கிடையே உணர்வுபூர்வமான கோரிக்கைகளையும் முன்வைப் பார்கள்.

அவர்களில் உயரமான ஒருவன் என்னுடைய மொழியைக் கொச்சை யாகப் பேசப்பழகிக்கொண்டான். தான் மலைகள் நிரம்பிய நகரத்தின் பிரபலமான குடும்பத்தைச் சேர்ந்தவனென்றும், தனக்கு மூன்று சகோதரிகள் இருப்பதாகவும் சொல்லிக்கொண்டான். பேயோட்டி களை அழிப்பதற்காகத் தானாகவே விரும்பி இந்த இடத்துக்கு வந்ததாகக்

கூறினான். நான் அவனிடம் எதுவுமே பேசுவதில்லை. துவிச்சக்கர வண்டியை உருட்டிச் செல்லவேண்டிய தூரம்வரைக்கும் அவனுடைய வேண்டுதல்கள் தொடர்ந்த படியிருக்கும்.

சிலவேளைகளில் விலையுயர்ந்த பரிசுப்பொருள்களுடன் அவன் எனக்காகக் காத்திருப்பான். நான் அவனிடம் எதையும் பெற்றுக் கொள்வதில்லை. அப்போதெல்லாம் அவனுடைய முகம் வாடிச் சுருண்டுவிடும். அவனைப்பற்றிய மென்மையான உணர்வுகள் எனக்குள் ஒருபோதும் பிரவாகிப்பதேயில்லை.

இப்படிப்பட்டவன் திடீரென்று ஒருநாள் முகத்தைக் கடுகடுவென்று வைத்திருந்தான். தன்னுடைய நெருங்கிய நண்பர்கள் இருவர் பேயோட்டிகளால் கொல்லப்பட்டதாகச் சொன்னான். தனக்கும் அதைப்போன்ற துர்மரணம் காத்திருப்பதாகவும், வேலையை விட்டு விலகி அவளை ஊருக்கு அழைத்துச்சென்று வாழவிரும்புவதாகவும் கூறிப் புலம்பினான்.

அப்போது நான் எதையுமே காதில் போட்டுக்கொள்ளாமல் நடந்தேன். இரண்டு மாதங்களில் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சையுடன் இந்தத் தொல்லைகளிலிருந்து விடுபடலாம் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது.

இப்படியான ஒருநாளின் பின்மாலைப்பொழுதில், இருளானது நிலமெங்கும் மழைக்கம்பிகளை ஊன்றிக்கொண்டிருந்தது. நான் மிகுந்த அவதானத்துடன் வீடுநோக்கி வந்துகொண்டிருந்தேன். திடீரென்று இந்தவெளி அந்நியமாகிப் போனதுபோல உணர்ந்தேன். உயிர்ச்சுவடுகள் எதுவுமற்ற சூனியப் பிரதேசமாகவே இது தென் பட்டது. என்னுடைய மனம் அம்பாளைப் பிரார்த்திக்கத் தொடங்கியது.

அந்தச் சந்தியை நெருங்கியபோது எனக்குள் நடுக்கம் தொற்றிக் கொண்டது. அங்கு ஐந்து உருவங்கள் வித்தியாசமான அசைவுக ளுடன் நின்றிருந்தன. கரும்பச்சை நிறமான அந்த உருவங்களின் கண்கள் தீக்கங்குகளைப்போல மின்னின. கோரமாக வளைந்த பற்களிலிருந்து இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. நான் முன்னர் அறிந்திராத அழுகல் வாடை அவற்றின் உடல்களிலிருந்து வீசியது.

சந்தியை விரைவாகக் கடக்கமுற்பட்ட என்னால் எதுவுமே செய்யமுடியவில்லை. அந்த ஐந்து பேய்களும் என்மேல் இருளாகக் கவிந்தன. வானப்பரப்பில் கருமேகங்கள் மோதிச் சிதறின. கடைசியில் அம்பாளும் என்னைக் கைவிட்டுவிட்டாள்.

உயிரின் கடைசித்துளி என்னுடன் ஒட்டிக்கொண்டிருந்த இறுதிக் கணப்பொழுது. நீர்தேங்கிய நிலத்தில் குழியொன்றை வெட்டுகின்ற சத்தம் எனக்கு அருகாகக் கேட்டது. இரத்தம் கசிந்த விழிகளைத் திருப்பிப் பார்த்தேன். அவனைப் போன்ற உருவமொன்று மண்வெட்டி யுடன் நிற்பது மின்னல் ஒளியில் மங்கலாகத் தெரிந்தது. என்னுடன் வாழவிரும்புவதாக அவன் இரந்துநின்ற பரிதாபத் தோற்றம் அந்த நேரத்தில் எனக்குள் ஓடிமறைந்தது.

இந்தப் பிரதேசத்தில் அதற்குப் பின்னரான நாள்களிலும் குழி வெட்டுகின்ற சத்தங்கள் அடிக்கடி கேட்கும். கொடூரமான பேய்களின் ஊளைகளும், சாமானியர்களின் நீண்ட அலறல்களுமாக ஒவ்வொரு இராப்பொழுதுகளும் கழிந்தன.

*****

இப்போது இந்தப் பெருவெளி அமைதியாகக் கிடக்கிறது. இங்கு நடைபெறுகின்ற எல்லாவற்றையும் என்னால் உணர்ந்து அறிய முடிகின்றது.

வெள்ளைக் கோடிழுத்த நீண்ட வீதிகளில் பலரக வாகனங்கள் மறிப்பாரின்றி விரைந்துசெல்கின்றன. வெண்ணிறமான வண்ணத் துப்பூச்சிகள் நிலவுசுமந்த நள்ளிரவுகளில் உவர்நிலமெங்கும் பறந்து அலைகின்றன.

பேயோட்டிகள் உருவமற்றநிலையில் பெருங்காடுகளில் உறைந் திருப்பதாகப் பேசிக்கொள்கிறார்கள். பேயோட்டிகள் இல்லாதபடியால் பேய்கள் எங்கும் உலாவுகின்றன. தங்களுடைய கடவுளின் தூலவடி வத்தை எல்லா இடங்களிலும் இருத்திவைத்து அகோர வழிபாடுகளை நிகழ்த்துகின்றன. பேய்களின் பூசாரிகள் கடவுளுக்குக் காணிக்கை யாகத் தங்களுடைய தலைமுடிகளைப் பிய்த்துப் போடுகிறார்கள். ஐந்துவண்ணங்கள் பூசிய பட்டங்கள் வான மெங்கும் மிதக்கின்றன.

இங்குள்ள அரசியல் நாடகமேடைகள் மேய்ப்பர்களில்லாத மந்தைக ளால் நிரம்புகின்றன. முதிர்ந்த நடிகர்கள் காணாமல் போனோர் குறித்த ஒப்பாரிப் பாடல்களைத் தளர்ந்தகுரலில் உரத்துப் பாடுகிறார்கள். அந்தப் பாடல்கள் பருவகாலங்களில் மட்டுமே ஓங்கி ஒலிக்கின்றன. எங்களுடைய துயரக்கதைகள் எழுதப்படாது, காலம் வெறுமனே கடந்துசெல்கிறது.

பாவம் அம்மா! தள்ளாத வயதிலும் அவள் என்னைத் தேடி ஒவ்வொரு இடமாக அலைந்துகொண்டிருப்பாள். நான் தொலைந்து போனவ ளாகவே இறுதி வரை கருதப்படக்கூடும்.

இந்தப் பாவக்குழியிலிருந்து என்னை மீட்கக்கூடியவர்களுக்காகக் காத்திருக்கிறேன்.

புதுவிதி (2016)
மீள்பிரசுரம் - தமிழ்நாதம்,ஜேர்மனி (2016)

பேய்வளவு

புராதனமான வீடுகளைப்பற்றிய பிரமிப்பு அவனுக்குள் எப்போதும் இருப்பதுண்டு. அவ்வாறான வீடுகள் மகிழ்ச்சி, சோகம், காதல், கோபம், எழுச்சி, வீழ்ச்சி போன்ற பல அத்தியாயங்களைக் கொண்டு கட்டமைக்கப்பட்ட நாவல்களாகவே அவனுக்குத் தோன்றும். தலைமுறைகளாக வாழ்ந்த மனிதர்களின் உணர்வுகள் அங்கு ஒட்டிக்கொண்டிருப்பதாக அவன் நினைத்துக்கொள்வான்.

மற்றவர்களால் அறியப்படாத தொன்மங்களைத் தேடியலைவது அவனுக்கு மிகவும் பிடித்தமானது. அவ்வாறான ஒரு நெடும் பயணத்திலேதான் அந்தப் பாழடைந்தவீடு அவனிடம் சிக்கிக் கொண்டது. ஏறக்குறையக் கைவிடப்பட்ட கிராமமொன்றின் விளிம்பில் அந்த வீடு அமைந்திருந்தது. காணாமற்போன பிள்ளைகளைத்தேடித் தூரத்துக் காட்டை ஏக்கத்துடன் பார்க்கின்ற ஒரு வயோதிபப் பெண்ணைப்போலவே அது தென்பட்டது.

வீட்டின் பின்னே விரிகின்ற புல்வெளியும், அதற்கும் அப்பால் நீர்ததும்பும் பாசிக்குளமும், இலகுவில் நுழையமுடியாத பெருங்காடும் தனிமையின் துயரைச் சுமந்தபடி மோனநிலையிலே கிடந்தன.

திராவிடக் கட்டடக்கலையின் சாயல் அந்த வீட்டில் முழுமையாகப் படிந்திருப்பதை அவன் வியப்புடன் பார்த்தான். மேற்கூரை சேத மடைந்திருந்தாலும், முகப்புப்பகுதி அடங்காத்திமிருடன் எழுந்து நிற்பதாக அவனுக்குத் தோன்றியது. வீட்டின் பக்கவாட்டுச் சுவரிலி ருந்து கால்களைக் கீழே இறக்கிய அரசமரமொன்று கிளைகளைப் பரப்பியவாறு நிழலைச் சிந்தியிருந்தது.

அந்தப் பழையவீட்டின் முழுமையான அமைப்பைச் சேகரிக்கும் எண்ணத்துடன் ஒளிப்படக்கருவியை எடுத்துக்கொண்டான். தலை வாசலைத் தாண்டி உள்ளே நுழையும்போது அந்தக் குரல் உரத்துக் கேட்டது.

"போகாதே!"

திடுக்குற்றுப் பின்னால் நகர்ந்தவன், திரும்பிப் பார்த்தான்.

ஒரு முதியவர் நின்றிருந்தார். அவருக்குச் சுமார் எண்பதுவயது இருக்கக்கூடும். தன்னுடைய கூனல்முதுகைத் தடியின் உதவியால் நிமிர்த்தியிருந்தார். ஒழுங்கில்லாமல் கட்டப்பட்ட வேட்டி அழுக்கேறிக் கிடந்தது. பழுப்புநிறமான தாடியில் வெற்றிலைச்சாயம் ஊறிக் காய்ந்திருந்தது.

"ஆர் தம்பி? புது ஆளாகக்கிடக்கு"

கரகரத்த குரலில் இருமல் தெறித்தது. அவரை நெருங்கிச் சென்றான்.

"நான் நெடுங்கேணியில் படிப்பிக்கிறன் ஐயா. இந்தக் கிராமத்தில இப்பிடியொரு வீடு இருக்குதென்று கேள்விப்பட்டு...." அவன் மிகுந்த தயக்கத்துடன் வார்த்தைகளை வெளிவிட்டான்.

"எல்லாரும் உப்பிடிச் சொல்லிக்கொண்டுதான் வெளிக்கிட்டு வாறாங்கள்" கிழவர் மெதுவாக முணுமுணுத்துக்கொண்டார்.

"இந்த வீட்டைப்பற்றி ஏதாவது தெரியுமோ ஐயா?"

கிழவரின் இடுங்கிய கண்களில் பல்வேறு உணர்ச்சிகள் விரிந்தன. கனவுகளைக் குழைத்ததுபோல அவருடைய முகம் சிவந்து விம்மியது.

"உது வெள்ளைக்காரங்களுக்கு எதிராகப் போராடின தளபதியின்ரை மாளிகையென்று ஒரு கதையிருக்கு. காணி உரித்துக்காரர் கனகாலத் துக்கு முந்தியே வெளிநாட்டுக்குப் போய்ட்டார்கள். அமைதிப்படைக் காலத்திலே போராளிகள் இருந்தவங்கள். அதுக்குப் பிறகு யாரும் இருக்கயில்லை. கவனிக்காமல் விட்டதால சீரழிஞ்சுபோச்சு" ஒருகணம் யோசித்தவர் மெதுவாகச் சொன்னார்.

"காணிக்குள்ளே எங்கேயோ புதையல் கிடக்கென்று என்னுடைய அப்பு அடிக்கடி சொல்லுவார். ஆனால் ஒருத்தரும் எடுக்கத் துணியேல்லை"

"இதைப் பாதுகாக்க ஒருத்தரும் முயற்சிக்கேல்லையோ?" அவன் சற்றுக் கவலையுடன் கேட்டான்.

"ஆர் செய்யிறது? நானறிய ஏழெட்டுப்பேர் இந்த மரத்திலை தூக்குப்போட்டுச் செத்தவர்கள்..... நிச்சயமாய்ச் சொல்லுறன்..... உந்தக் காணியில பேய் இருக்கு. இல்லாட்டி இவ்வளவு பலி எடுத்திருக்காது" கிழவரின் குரலில் நடுக்கம் தெரிந்தது.

அவன் மறுபடியும் அந்த வீட்டைப் பார்த்தான். அரசமரம் ஒரு காட்டுச்சிலந்தியைப்போல வீட்டைக் கௌவிப் பிடித்திருந்தது.

அவனுக்குப் பேய்கள்குறித்த நம்பிக்கைகள் எப்போதுமே இருந்த தில்லை. பொதுமயானங்களிலும், ஏகாந்தவெளிகளிலும் அவன் சுற்றியலைந்திருக்கிறான். 'சிவநாதனின் இளையமகன் சாமிப் போக்கிலே திரிகிறான்' என்று ஊரிலே தன்னைப்பற்றிக் கதைப்பதும் அவனுக்குத் தெரியும். அவன் அவற்றைப் பொருட்படுத்துவதில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே படித்தகாலத்தில் பேராசிரியர். செல்வரட்னம் கற்பித்த வரலாற்றுப்பாடம் அவனைத் தேடல் நிறைந்த வனாக மாற்றியிருந்தது.

அவன் மெதுவாகச் சிரித்துக்கொண்டான்.

"பேய் பிசாசு என்று ஒன்றுமில்லை ஐயா. எல்லாமே கற்பனைதான். நான் உள்ளுக்குப் போய்ப் பார்க்கப்போறன்"

"வேண்டாம்...!" கிழவரின் குரல் பலவீனமாக ஒலித்தது.

படிகளில் ஏறும்போது திரும்பிப் பார்த்தான். கிழவர் அவனையே பார்த்துக்கொண்டிருந்தார். அவரை அலட்சியம் செய்தபடி உள்ளே நுழைந்தான்

வீட்டின் முன்வாசலைத் தொடர்ந்த பெருமண்டபம் அவனை முழுமையாகச் சூழ்ந்துகொண்டது. அரைவட்டவடிவமான சிறிய மேடையும், நீண்ட மண்டபமும் குறுநிலமன்னன் ஒருவனுடைய

அரசவையைப்போல விரிந்திருந்தன. மண்டபத்தின் உயரமான தூண்களில் நுணுக்கமான சிற்பவேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஒருபக்கச் சுவரிலே பழைய புகைப்படங்கள் மாட்டப்பட்டிருந்தன. அவற்றின் மரச்சட்டங்கள் உக்கிச் சிதைந்திருந்தன. தூசுபடிந்த புகைப்படங்களில் குடும்ப உறுப்பினர்கள் புன்னகையற்ற முகங்களுடன் நின்றிருந்தார்கள்.

அவன் ஆர்வத்துடன் ஒளிப்படக்கருவியை எடுத்து இயக்கத் தொடங்கினான்.

மண்டபத்தின் வடமேற்குமூலையிலே அறையொன்று இருப்பது தெரிந்தது. அதன் உடைந்தகதவு கிறீச்சென்ற ஒலியுடன் ஆடிக் கொண்டிருந்தது. கதவின் சுயாதீனமான அசைவும், அந்த ஒலியும் அவனை மிரளவைத்தன. இலேசான எச்சரிக்கையுடன் அறையினுள் நுழைந்தான்.

கூரையின் இருளில் இரகசியமாக உறங்கிக்கொண்டிருந்த வௌவால்கள் சிறகடித்தபடி திசைமாறின. இனம்புரியாத அழுகல் மணம் அறை முழுவதும் நிரம்பியிருந்தது. வௌவால்களின் எச்சங்கள் நிலமெங்கும் சிந்திக்கிடந்தன. பாசிபிடித்த சுவரில் சில எழுத்துகள் மங்கலாகத் தெரிந்தன. அவன் அவற்றைச் சிரமப்பட்டு வாசித்தான்.

'இளங்கோ... ராஜன்... மதி... 12.05.1988'

அந்தப் பெயர்களைப் பார்த்ததும் அவனுக்குள்ளே பல்வேறு உணர்வுகள் பெருகத்தொடங்கின. இந்தவீட்டின் ஒவ்வொரு பகுதியிலும் அவர்கள் நடமாடித் திரிந்திருக்கிறார்கள் என்ற நினைப்பு ஒருவித சிலிர்ப்பினை ஏற்படுத்தியது. எழுச்சிமிக்க அந்தப் பொற்காலம் அவனுடைய கண்களில் ஒளியாக வழிந்தது.

இந்தவீடு பரம்பரையாக வாழ்ந்தவர்களின் கதைகளை மட்டுமல்லாது, மீண்டும் திரும்பமுடியாத உன்னதமான வரலாற்றின் ஒருபகுதியையும் எழுதிவைத்திருக்கின்றது. இந்தச்சுவடுகள் எவராலுமே அறியப்படாமல் அழிந்துபோகக்கூடும்.

மனதைப் பிழிகின்ற துயரின் நெருக்குதலுடன் அறையைவிட்டு வெளியேறியவன், மண்டபத்தைத்தாண்டி உள்முற்றத்தினுள்

நுழைந்தான். தரையெங்கும் காய்ந்த இலைகள் குவிந்திருந்தன. மரத்திலிருந்து பழுப்புநிறமான இலைகள் தொடர்ச்சியாக உதிர்ந்த படியிருந்தன. அவை ஒரு தாளலயத்துடன் விழுவதைப்போல அவனுக்குத் தோன்றியது. இனம்புரியாத அருட்டுணர்வுடன் நிமிர்ந்து மேலே பார்த்தான்.

அரசமரம், ஒரு அசுரனைப்போலக் கைகளை விரித்தபடி காற்றிலே பறந்துகொண்டிருந்தது. காற்றின் வலுவான அசைவில் மரத்தின் இலைகள் படபடத்தன. அவற்றின் நுண்ணிய அதிர்வுகள் ஒன்றிணைந்து வித்தியாசமான குரல்களாகக் கேட்கத்தொடங்கின. அந்த இலைகள் பல்லாயிரம் ஈட்டிகளாக உருமாறி அவனைநோக்கிப் பாய்வதைப்போல உணர்ந்தான்.

அவனுக்குக் கண்களை இருட்டுவதுபோலிருந்தது. தடுமாறியபடி அருகிலிருந்த தூணைப் பிடித்தவன், அப்படியே சரிந்து விழுந்தான்.

*****

கிழவருக்குப் பேரனைப்பற்றிய கவலை அதிகரித்திருந்தது. விடிந்து நீண்டநேரமாகியும் அவன் பாயிலேயே சுருண்டுகிடந்தான். அவனுக்கு இலேசாகக் காய்ச்சல் அடித்துக்கொண்டிருந்தது. நேற்று மாலை மாடுகளுடன் குளக்கட்டுப்பக்கம் போனவன், நன்றாக இருட்டியபின்னரே வந்துசேர்ந்திருந்தான். வந்தவன் அவருடன் எதுவும் பேசாமல் அப்படியே படுத்துக்கொண்டான். அவன் தூக்கத் திலே ஏதேதோ சொல்லிப் புலம்புவதை அவர் கேட்டுக்கொண்டி ருந்தார்.

'இரவுவேளையில் காட்டுக்குத் தனியாகப் போனதைக் கண்டிப்பதா? அல்லது அவனுடைய நிலையைப் பார்த்துப் பரிதாபப்படுவதா?' என்ற தடுமாற்றத்தில் அவர் தவித்தார்.

அவன் மகள் வயிற்றுப்பேரன். மிகவும் துடிப்பானவன். பதினைந்து வயதுக்குரிய சுறுசுறுப்புடன் ஓடித்திரிவான். இப்போது பாடசாலைக்குச் செல்வதில்லை. தொடர்ந்து படிப்பதற்குரிய மனநிலையும் அவனிட மில்லை. மாடுகளை மேய்க்கவும், முயல்வேட்டைக்கும் அவருடன் கிளம்பிவிடுவான்.

அவருடைய மருமகன் யுத்தத்தின் இறுதியில் காணாமல் போயிருந்தான். ஒரேமகள் தடுப்புமுகாமிலிருந்து இன்னமும் விடுபடவில்லை. பெற்றோரின் அரவணைப்புக் கிடைக்காத பிள்ளை என்பதால் அவர் முழுச் சுதந்திரம் கொடுத்திருந்தார்.

சிந்தனையில் மூழ்கியிருந்தவரை வாகனங்களின் இரைச்சல் நிமிரவைத்தது. பேரன் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தான். மெதுவாக வெளியேவந்து வேலிக்கு மேலால் எட்டிப்பார்த்தார். நாலைந்து வாகனங்கள் காட்டுப்பாதையின் புழுதியைக் கிளப்பியபடி விரைந்து செல்வது தெரிந்தது. ஊர்மக்கள் சிலர் துவிச்சக்கரவண்டிகளில் அவற்றைத் துரத்திக்கொண்டு போனார்கள்.

அதைப் பார்த்ததும் அவருக்கு இருப்புக்கொள்ளவில்லை.

'ஒருவேளை... குளத்துக்கு அருகில் காணிகளை அளக்கப் போகிறார்களோ?' அவருடைய மனம் பரபரத்தது.

குளத்தை அண்டிய வெளியிலும், பின்னாலுள்ள காட்டுப்பகுதியிலும் விவசாயம் செய்வதற்கு அந்த ஊர்மக்கள் நீண்டகாலமாக முயற்சி செய்திருக்கிறார்கள். வனத்துறை அதிகாரிகளின் கெடுபிடிகளால் இப்போதும் அது நிறைவேறாத கனவாகவே இருக்கிறது.

வெளிவாசலின் கடப்பை இழுத்துக்கட்டியவர், வேகமாக நடக்கத் தொடங்கினார். அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தபோது சனக்கூட்டம் ஓரளவு நிறைந்திருப்பது தெரிந்தது. பழையவீட்டின் வளவுக்குள் வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. வாகனங்களில் வந்தவர்கள் அரசமரத்தின் கீழே குழுமியிருந்தார்கள். அவர்களுக்கு நடுவில் இரண்டு காவியுடைகள் அசைந்தன. காவல்துறை அதிகாரிகள் சிலர் பவ்யமாக நின்றிருந்தார்கள்.

வீட்டைப் பார்த்ததும் அவருக்கு அந்த இளைஞனின் நினைவு எழுந்தது.

'அவன்தான் தற்கொலை செய்திட்டானோ?' அவனை நினைத்துப் பரிதாபப்படத் தொடங்கினார். வெளியே நின்ற சனக்கூட்டத்தில் திடீரெனப் பரபரப்புத் தொற்றிக்கொண்டது.

"புதையல் எடுக்கப்போறாங்களாம்" உரத்தகுரலில் யாரோ சொல்வது அவருக்குக் கேட்டது.

பலநூறு வருடங்களாகப் புதைந்துகிடந்த இரகசியம் வெளிவரப் போகிறது என்ற அச்சம், அங்கிருந்த ஊர்மக்களிடம் உறைந் திருந்தது. அந்தமரம் எதிலுமே சம்பந்தப்படாததுபோல மௌனமாக நின்றது. இரண்டுபேர் மரத்தின் அடிப்பகுதியைச் சுத்தமாக்கிய பின்னர், கவனமாகத் தோண்டத்தொடங்கினார்கள்.

அவர்கள் தோண்டத்தோண்ட அந்த உருவம் மெதுவாக வெளிப்பட்டது. அதை வெளியே எடுத்து மரத்தடியில் நிறுத்திவைத்தார்கள். அது பிரகாசமான செம்மஞ்சள் நிறத்தில் மின்னியது. நீண்ட காதுகளும், வழுவழுப்பான தலையும் கொண்ட சிலையைப்போலத் தெரிந்தது. அதன் கண்கள் பாதி திறந்திருந்தன. உதடுகள் புன்னகையைச் சுழித்தன.

அதைக் கண்டதும் ஊர்மக்களிடையே சலசலப்புக் கிளப்பியது. காவியுடை அணிந்தவர்கள் அதற்கு முன்னால் அமர்ந்திருந்து பிரார்த்தனை செய்யத்தொடங்கினார்கள். அவர்கள் உச்சரித்த கரடுமுரடான சுலோகங்கள் அந்தப் பெருவெளியெங்கும் அலை யாகப் பரவின. அங்கு குடியிருந்த வௌவால்கள் தடுமாறியபடி வெளியேறிக் காட்டுப்பக்கம் பறந்தன.

கூடியிருந்த சனங்கள் அந்த மொழியின் அதிர்வைத் தாங்கமுடியாமல் கலைந்துசெல்லத் தொடங்கினார்கள். கிழவருக்கு அங்கு நிற்கவே பிடிக்கவில்லை. இறுகிப்போன மனதுடன் தன்னுடைய வீட்டுக்குத் திரும்பிவந்தார்.

பேரன் வாசலில் அமர்ந்திருந்தான். அவனுடைய நெற்றியில் கையை வைத்துப் பார்த்தார். காய்ச்சல் முற்றாகத் தணிந்திருந்தது. வீட்டினுள் நுழைந்தவர், ஒரு கிண்ணத்தில் வெந்தயக்கஞ்சியை ஊற்றிக்கொண்டு திரும்பினார். பேரன் ஆவலுடன் வாங்கிக் குடிக்கத் தொடங்கினான். சற்றுநேரம் அவனையே பார்த்துக்கொண்டிருந்தவர் மெதுவாகக் கேட்டார்,

"நேற்றிரவு என்னடா நடந்தது?"

"அது தாத்தா.... எங்கட சிவப்பிக்கன்று காட்டுப்பக்கம் ஓடினது. துரத்திக்கொண்டு போனன். காட்டுக்குள்ளே வழிமாறிப் போய் விட்டன். நல்லா இருட்டிப்போச்சுது. பிறகு ஒருமாதிரித் திரும்பி வந்தால்..... பழையவீடு இருக்கிற காணிக்குள்ளே வெளிச்சம் தெரிஞ்சது..." சொல்வதை நிறுத்தியவன் பயத்துடன் மிடறு விழுங்கினான்.

"வெளிச்சமோ...?" கிழவர் வியப்பாகக் கேட்டார்.

"ஓம் தாத்தா. நெருப்புமாதிரி ஏதோ விட்டுவிட்டு மினுங்கினது. கறுப்பாக ரெண்டு பேய்கள் அந்த மரத்தடியிலே நின்று ஆடுகிறமாதிரி இருந்தது. நான் ஓடிவந்திட்டன்"

அவருக்கு எல்லாமே புரியத்தொடங்கியது. பேய்களைப்பற்றி அவர் உருவாக்கி வைத்திருந்த பிம்பங்கள் யாவும் நொருங்கிச் சிதறின. வருங்காலத்தில் நடக்கப்போகின்ற சம்பவங்கள் அவருடைய மனத்திரையிலே காட்சிகளாக விரிந்தன.

பழையவீடு இருந்த வளவில் வெண்மையான முகடொன்று விண்ணைநோக்கி எழுவதுபோலவும், அசுரமரத்தின் வித்துக்கள் நாலாபக்கமும் விழுந்து ஆயிரக்கணக்கில் முளைப்பதுபோலவும், அடர்ந்தகாடு பின்னோக்கி நகர்வதுபோலவும்...!

பேரனின் தலையைத் தடவியபடி மௌனமாகப் பெருமூச்செறிந்தார்.

அந்தப் பெருவெளியும், பாசிபடர்ந்த குளமும் அவருடைய கண்களிலிருந்து கசியத்தொடங்கின.

குமுதம் - தீராநதி (2016)

மீளுதல்

கிர்ரென்ற ரீங்காரம் இரவின் அமைதியைக் குலைப்பதுபோல ஒலித்துக்கொண்டிருக்கின்றது. கவனத்தைக் குவித்தால் மட்டுமே கேட்கக்கூடிய கட்புலனாகா உயிரினங்களின் சிறுசிறு முணு முணுப்புக்களும் உடன் போட்டியிடுகின்றன. கனதியான இருட்பின்ன ணியில் நிழலுருவங்களாய்த் தெரிந்த மரங்களில் இடையிடையே ஏற்படும் சலனம்.

இவையெல்லாம் உயிர்ப்பின் மெய்ம்மையை உணர்த்தியபடியிருக் கின்றன. தலைமுதல் கால்வரை இழுத்துமூடிய போர்வைக்குள், நான் செயற்கையாக ஏற்படுத்திய என்னுடைய இரவினுள் அமிழ்ந்து கொண்டிருக்கிறேன்.

மிக மெல்லிய இடைவெளியினூடாகவும் அத்துமீறி உள்நுழைந்து உயிரை உலுப்பக்கூடிய மாசிப்பனி உக்கிரமாக வீசுகின்ற இந்த நள்ளிரவில், அவன் கொழும்பிலுள்ள ஐந்துநட்சத்திர விடுதி யொன்றில் ஆழ்ந்த உறக்கத்திலிருப்பான்.

நிம்மதியை இழந்துபோவதான நினைவுகளுடன் பயணப்பட்ட அவனுள், விதம்விதமான கனவுகள் இப்போது வியாபித்திருக்குமோ?

நீண்டகாலப் பின்நகர்வின் ஒருபுள்ளியில் தற்செயலாகவே அவனைச் சந்தித்தேன். அந்தச் சந்திப்பும், அதனைத் தொடர்ந்த நிகழ்வுகளின் பதிவும் எண்ணப்பரப்பிலே சுமையாக அழுத்த இலேசாகப் புரண்டு படுக்கிறேன்.

சூரியக்கதிர்கள் முறிந்து நொருங்கும் அழகிய மாலைப்பொழுதில் கிட்டுபூங்காவின் வாசலிலுள்ள பஸ்தரிப்பிடத்தில் காத்திருந்தேன். மாநகரசபை நூலகத்தில் இரவலாகப் பெற்ற இரு புத்தகங்களும் கையிலே கனத்தன.

பருத்தித்துறைவீதி இன்னமும் ஓயவில்லை. வீதியோரம் ஏழெட்டு ஓட்டோக்கள் வழமையான எதிர்பார்ப்புடன் காத்திருந்தன. அருகே உயரமான பீடத்தில் குதிரையின்மீது 'சளுக்கென்று' அமர்ந்தபடி எதிர்ப்புறத்திலுள்ள காவலரண்களை உற்றுநோக்கிக்கொண்டி ருந்தான் சங்கிலியன். நல்லைக்கந்தனின் கோபுரத்தைத் தழுவியபடி மிதந்துவந்த ஒளிக்கிரணங்கள் அவனுக்கு மஞ்சள் வண்ணம் தீட்டமுயன்றன.

இராணுவ ஆக்கிரமிப்பில் பழைய சிலையின் தலை உடைக்கப் பட்டதும், உரப்பையினால் மூடப்பட்டுச் சிறிதுகாலம் அநாதரவாகக் கிடந்ததும் நினைவுக்குவந்தது. 'மக்களின் மனங்களை வெல்ல வேண்டும்' என்றநோக்கத்தில் இந்தச்சிலை பின்னர் 'பிடித்து' வைக்கப்பட்டதும் நடந்துமுடிந்த கசப்பான நிகழ்வுகள்.

வீதியால் செல்லும் எவரையும் திரும்பிப் பார்க்கத்தூண்டும் ஈர்ப்பும், வேகமும் முன்னைய சிலைக்கிருந்தது. இப்போது 'கழுதைக்குமேலே கள்ளன் இருப்பதாக' என்னுடைய நண்பனொருவன் கூறியது எவ்வளவு பொருத்தம் என எண்ணிக்கொண்டேன்.

நான் தனியாக நிற்பதால் மினிபஸ்கள் என்னைச் சுமக்கத் தயங்கியபடி விரைந்தன. நீடித்த பெருமூச்சுடன் திரும்பினேன்.

மிக வேகமாக வந்த ஹையேஸ் வாகனம் பக்கத்திலே கிரீச்சிட்டது. உள்ளிருந்து வெளிப்பிதுங்கிய அவனைக் கண்டதும் ஆச்சரியமா னேன்.

சுரேந்திரன்!

கல்லூரியில் என்னுடன் ஒன்றாகப் படித்தவன். இப்போது உடல் ஊதிப்பெருத்து, முன்தலை வழுக்கையாகியிருந்தது. முழங்காலைத் தாண்டி நீண்ட அரைக்காற்சட்டையும், அதன் மேலாக வழிந்த

தொந்தியுமாக அவன் அசைந்தான்.

உருவத்துக்குச் சற்றும் பொருந்தாத ரீசேட்டும், விரிந்து பறக்கும் தலையுமாக உடன் இறங்கியது அவனுடைய மனைவிபோலும். குளுகுளுவென்று இரண்டு பிள்ளைகள் பின்னால் துள்ளிக் குதித் தன. சுரேந்திரன் புகைப்படக்கருவியை எடுத்து ஏதோவொரு வேகத்து டன் காட்சிகளை விழுங்கத்தொடங்கினான்.

அவனை நெருங்கினேன்.

"சுரேந்திரன்!"

விருட்டென்று திரும்பியவனின் விழிகள் ஓரிரு நொடித் தயக்கத்துக்குப் பின்னர் விரிந்தன.

"சிவா!"

இரண்டெட்டில் அண்மித்து என் தோளை வளைத்துக்கொண்டான். அவனுடைய உடலிலிருந்து கிளம்பிய நறுமணம் என் நாசியை அரித்தது.

"நல்லா மாறிப்போனாய் மச்சான்"

சுரேந்திரனின் குரலில் ஒட்டியிருந்த அனுதாபத்தை நான் சிறிதளவும் இரசிக்கவில்லை.

முடிவற்று நீளும் போரின் வடுக்கள் என் தோற்றத்தில் மாறுதல்களை ஏற்படுத்தியிருக்கக்கூடும். காலத்தின் கனதியான ஓட்டத்தில், இடையி டையே வருகின்ற நெகிழ்வான நிலைமைகளில் இம்மாறுதல்கள் பலரில் உள்ளொடுங்கி வெளித்தெரியாமலே போய்விடுவதுண்டு.

அவன் என்னைத் தன் மனைவியிடம் உணர்வுபூர்வமாக அறிமுகப் படுத்தினான். அவளுடைய காதுகளுக்கிடையில் நீண்டிருந்த சிவப்புச்சாயம் இலேசான அலட்சியத்துடன் நெளிந்தது. பிள்ளைகள் இருவரும் வேடிக்கை பார்க்கும் விறுவிறுப்புடன் நின்றிருந்தார்கள்.

"எங்கை இருக்கிறாய் மச்சான்?"நிலைமையைச் சமாளிக்கும் அவசரத்துடன் சுரேந்திரன் குறுக்கிட்டான்

."நீர்வேலியிலை முடிச்சனான். சந்திக்கு எதிர்வீடு"

"என்னுடைய மனுசியும் உன்ரை ஊர்தான். வாழைக்குலைக் கந்த சாமியற்றை கடைசிமகள்"

"ஓ..!"

என்னுடைய குரலில் கேலி இழைந்தது.

வாழைக்குலைக் கந்தசாமி! கறைபடிந்த சேட்டுடன் பெரிய கரியர் பூட்டிய சைக்கிளில் லொடலொடத்தபடி திரிந்தவர். மலையாளத்தான் கடையில் பத்திரிகை படித்தபடி, 'காட்டா' எனப்படும் கடுஞ்சாயம் போட்ட தேநீர் அருந்திக்கொண்டிருப்பார். ஆறு பெண்களில் மூத்தவள் வெளி நாட்டில் முடித்தபின் ஒவ்வொருவராகக் கரை சேர்ந்ததும், எல்லோரை யும் தொடர்ந்து கந்தசாமியரும் மனைவியுடன் கனடா போய் நிரந்தர மாகத் தங்கியதும் தெரிந்த விடயம்.

'கடைசிப்பெண் என்றால் இது தேவகியா? என்னை அவளுக்கு ஞாபகமில்லையா?'

மனிதர்களின் உருவையும் இயல்பையும் சிதைப்பதில் காலமும், சூழலும் எவ்வளவு ஒற்றுமையாக இயங்குகின்றன! மாறுபட்ட உணர்வுகளின் கலவையாய் மனக்கொதிப்புக்கள் என்னுள்ளே தோற்றம் பெற்றன.

நீண்டநேரம் உரையாடுவதற்கு உகந்தநேரம் இதுவல்ல என்பதை மெதுவாகப் பரவுகின்ற இருள் நினைவூட்டியது.

"எல்லாரும் நாளைக்கு மத்தியானம் சாப்பிட வாங்கோ" அழைப்பு விடுத்தேன்.

"கட்டாயம் வாறம் மச்சான்"

தொலைவிலே தெரிந்த மஞ்சள் பஸ் எங்களுக்கிடையிலான வார்த் தையாடல்களை முறித்தது. விடைபெற்று வீதியை விரைவாகக் கடந்தேன்.

மறுநாள் நண்பகல் சுரேந்திரனுடைய வாகனம் என் வீட்டு வாசலில் நின்றது. அவன் மட்டும் இறங்கினான்.

என் முகத்தை எதிர்கொள்ள அவன் சங்கடப்படுவது தெரிந்தது.

"தேவகிக்குச் சரியான தலையிடி. நேற்றுப் படுத்தது இன்னும் எழும்பேல்லை"

வாழைக்குலைக் கந்தசாமியரின் கடைக்குட்டியை நிச்சயமாக நாங்கள் எதிர்பார்க்கவில்லை என்பது அவனுக்குத் தெரியாது.

வந்தவனின் பார்வை பூந்தோட்டத்திலும், அதற்கப்பாலும், வீட்டின் மீதும் மொய்த்தது.

"நல்ல வடிவா வைச்சிருக்கிறாய் மச்சான். வளவு எவ்வளவு குளிர்மையாகக் கிடக்கு!"

இராணுவத்தின் மூர்க்கத்தனமான சூரியக்கதிர் முன்னகர்வில் எங்களுடைய வீடும், நிறைமாதக் கர்ப்பிணிபோலக் குலைசுமந்த தென்னைகளும், அழகான பூமரங்களும் அவலமாகச் சிதறிப் போயின. எல்லாவற்றையும் ஆரம்பத்திலிருந்து மீளக்கட்டியெழுப்ப நாங்கள் பட்ட அவதி இவனுக்கெங்கே புரியப்போகிறது? இன்னமும் செலுத்திமுடிக்கப்படாத கடன்கள் கழுத்தை இறுக்கிக்கொண்டிருந்தாலும், மேலுக்குப் பூசிய புன்னகைகளுடன் என்னைப்போன்ற பலர் இங்கு திரிகிறார்கள்.

இவற்றையெல்லாம் வெளிநாட்டிலிருந்து வருகின்ற இவனைப் போன்றவர்களிடம் கூறுவது தவறான கற்பிதங்களுக்கு இடமளிக்கக் கூடும்.

ஒவ்வொரு பூவாகப் பிடித்து இரசித்துக்கொண்டிருந்தவனை உள்ளே அழைத்துப்போனேன். எதிர்ப்பட்ட என் பிள்ளைகளிடம் கையிலிருந்த பையை நீட்டினான்.

"இரண்டுபேரும் தானோ?"

ஆமென்று தலையசைத்தேன். இன்னொன்றின் படம் விறாந்தையின் மூலையிலே தொங்கிக் கொண்டிருந்ததை நான் கூறவில்லை.

என் மனைவியை அழைத்து அறிமுகப்படுத்தினேன். புறங்கையிலும், முன்னுச்சி மயிரிலும் மலர்ந்த தேங்காய்ப்பூக்களுடன் வந்தவள்,

சுரேந்திரனிடம் தேவகியைப்பற்றி விசாரித்துவிட்டு மறுபடியும் உள்ளே போய்விட்டாள். இன்னமும் சமையல் முடியவில்லைப்போலும்.

வழமையான ஊர்ப்புதினங்களில் நேரம் கழிந்தது.

சமையலறையிலிருந்து வெளிப்பட்ட நண்டுக்குழம்பின் மணம் நாசிக்குள் நுழைந்தது. சாப்பிட அமர்ந்தோம்.

"எந்த வீட்டை போனாலும் ஆட்டையும், கோழியையும் சமைச்சுத் தருகுதுகள். இதுகளைச் சாப்பிட்டு எவ்வளவு காலம் மச்சான்!" எண்ணெய்ப் பளபளப்புடன் திரண்ட நண்டுக்காலை உடைத்து வாயில் வைத்துச் சர்ரென்று இழுத்தபடி சொன்னான்.

காரமான மிளகுரசத்துடன் மதிய உணவை முடித்துக்கொண்டு கைகளைத் துடைத்தபடி வெளியே வந்தோம்.

முற்றத்தின் குளிர்நிழலில் போடப்பட்டிருந்த கதிரையில் நன்றாகச் சாய்ந்து அமர்ந்து தலையை நிமிர்த்தினான் சுரேந்திரன். தென்னோலைகளால் கிழிக்கப்பட்ட நீல வான்பரப்பை அவனுடைய விழிகள் ஊடுருவின. ஆழமான பெருமூச்சொன்று அவனிடமிருந்து வெளிப்பட்டது.

"நிறைய இழந்திட்டம் மச்சான்! உயிருக்குப் பயந்து ஒவ்வொரு நாடாக ஓடி, இயந்திரம்மாதிரி உழைச்சுக்கொட்டி ஒவ்வொருத்தராக் கூப்பிட்டு...! கடைசியிலை கண்டது எதை? இப்படி நிம்மதியாக இருக்கிற சந்தோசம் எதிலையிலும் இல்லை. உன்னைப் பார்க்கப் பொறாமையாகக் கிடக்கடா"

உள்ளொடுங்கிய உணர்வுகளின் வீச்சாக அவனுடைய வார்த்தைகள் வசமிழந்து வெளிப்பட்டன.

"சுரேந்திரன்! அந்த வாழ்க்கைக்குப் பழகிவிட்டாய். நீ விடுபட விரும்பினாலும் அது உன்னை விடாது. உன்ரை பிள்ளைகளும் விடாதுகள்"

"உண்மைதான். அதுகள் ஆறேழு வயதிலையே முத்திப் போகுதுகள். வரவர உச்சரிப்பும் மாறுது. சில இடங்களிலை நடக்கிற இனக்கலப்புத்

திருமணங்களையும், அதுகள் வாழுற வாழ்க்கையையும் நினைச்சா மண்டை வெடிக்குது. நாங்கள் பிழை விடுகிறமோ எண்டு பயமாகக் கிடக்கடா மச்சான்"

எனக்கு சுரேந்திரனின்மீது பரிதாபம் மிகுந்தது. அதில் ஒருவித நெருடலும் தொற்றிக்கொண்டது. அவனைத் தேற்றும்நோக்கில் கூறினேன்.

"சுரேந்திரன்! இங்க நடக்கிற போராட்டத்திலையும், பெரும்பாலான மீள்கட்டுமானங்களிலையும் உங்கட பங்களிப்பு நிறைய இருக்கு. எத்தினைபேரின்ரை வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கு. எவ்வளவு கலியாணங்கள் கைகூடியிருக்கு. ஆனால் என்ன நடந்தாலும் நாங்கள் இங்கதான் இருப்பம்"

சுரேந்திரன் மெல்ல எழுந்தான். நெருங்கிவந்து என்னைத் தழுவிக்கொண்டான்.

"போயிட்டுவாறன் மச்சான். இனி எப்பவோ?"

என் மனைவி, பிள்ளைகளிடமும் விடைபெற்று நடந்தவனை வாசல்வரை சென்று வழியனுப்பினேன். வாகனத்தில் ஏறி அமர்ந்த வனின் விழிகளில் இலேசாக நீரின் பளபளப்புத் தெரிந்தது.

அவன் போய்விட்டான்.

அவனால் என்னுள் உற்பவிக்கப்பட்ட அதிர்வுகள் இன்னமும் அவ்விடத்தில் உலாவுவதுபோன்ற உணர்வுடன் பிரமித்துப்போய் நின்றேன். அப்போதுங்கூட என்னுடைய மனப்பரப்பின் ஒரு மூலை யில் அந்த நெருடல் இருக்கத்தான் செய்தது.

அவனைப்பற்றி நினைவுகளின் சுழலிலிருந்து மெதுவாக விடுபடு கின்றேன்.

நூலிழையான ஒளிக்கீற்றொன்று யன்னலினூடாக அறைக்குள் நுழைந்து இரவின் இரகசியங்களெல்லாம் அற்றுப்போனதைச் சொல்கிறது. எழுந்து வெளியே வருகிறேன்.

மெல்லிய புகார்ப்பின்னணியில் காலையின் ஒளிக்கலவி கண்களைக்

கௌவுகின்றது. வேலியோரம் ஒதுங்குகின்றேன். கறையான் பிடித்த கதிகால்களில் நகர்ந்த என் பார்வை, வேலியின் மூலையிலே போய்ச் சொருகுகின்றது.

அங்கே உடைந்த ஓட்டுக்குவியலின் நடுவே முளைத்துப் படர்ந்து நிற்கின்ற அந்த மல்லிகைச்செடிதான் எவ்வளவு அழகாக இருக் கின்றது!

வெளிச்சம் (2005)

முள்

மதிய உணவுக்குப் பின்னர் கட்டிலில் சரிந்தவனால் கண்களை மூடவே முடியவில்லை. உறக்கம் வருவதற்கு மறுத்து அடம்பிடித்தது. ஒருகளித்துப் படுத்தபடி யன்னலினூடாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய இரண்டு பெண்பிள்ளைகளும் வீட்டுமுற்றத்தில் ஓடிவிளையாடிக்கொண்டிருப்பது தெரிந்தது.

இன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் இருவரும் அறநெறிப் போத னைக்காக ரஜமகாவிகாரைக்குப் போய்வந்திருந்தார்கள். காலையில் அவர்கள் அணிந்துசென்றிருந்த வெள்ளைநிறமான ஆடைகள் கதிரையொன்றில் போடப்பட்டிருந்தன. அவர்களின் பாடப்புத்தகங்கள் மேசையில் பரவிக்கிடந்தன. அவன் நகர்ந்துதிரிகின்ற சக்கரநாற் காலி மரக்கட்டிலுக்கருகில் மௌனமாக நின்றிருந்தது. உள்விறாந் தையையொட்டிய சமையலறையின் வாசலில் ஈரப்பலாக்காயின் வெட்டப்பட்ட கழிவுகளும், வல்லாரையின் தண்டுகளும் ஒதுங்கிக் கிடந்தன.

அவனுடைய மனைவி தினமும் அதிகாலையிலேயே சமைத்து முடித்துவிடுவாள். இந்தக் கிராமத்திலிருந்து இருபதுமைல்களுக்கு அப்பாலுள்ள பெருநகரத்தின் பிரபலமான ஆடைத்தொழிற்சாலை யொன்றில் அவள் வேலைசெய்கிறாள். காலையிலே போனால் அவள் மீண்டும் திரும்புவதற்கு இரவாகிவிடும். அதுவரையில் அவன் அவளுக்கான சொற்களை உருவாக்கிச் சேமித்துவைத்திருப்பான். எவ்வளவுநேரம் காத்திருந்தாலும் அவளுடன் ஆறுதலாக உரையாடுவதற்கான தருணங்கள் அவனுக்கு ஒருபோதுமே வாய்ப்பதில்லை.

விடுமுறை நாள்களிலும் அவள் மேலதிக வேலையென்று கூறிவிட்டுப் போய்விடுவாள். இதற்காக அவளை குறைசொல்வதை அவன் தவிர்த்துவிடுவான். இவ்வாறாக அவர்களுடைய தினசரிப் பொழுது கள் ஒட்டியும் ஒட்டாமலும் கழிந்துகொண்டிருக்கின்றன.

இப்போதெல்லாம் அவனுக்கு இரவுவேளைகளில் உறக்கம் வருவதில்லை. நினைவுகளின் ஒடுக்கமாக எழுகின்ற கனவுகளின் உக்கிரத்தினுள் அமிழ்ந்துபோய்த் திடுக்குற்று விழிப்பதாகவே அவனுடைய இரவுகள் மெதுவாகக் கழியும். கண்களை மூடினால் நெருப்பின் பிரகாசமான வெம்மையுடன் இரண்டு பெரியவிழிகள் அவனை உள்ளிருந்து உறுத்தத் தொடங்கிவிடும். அந்த விழிகளில் தேங்கியிருக்கும் நுண்மையான உணர்வுகளை மொழிபெயர்ப்பதில் அவன் ஒவ்வொரு நாளும் தோற்றுக்கொண்டிருக்கிறான்.

உறக்கம்வராத நள்ளிரவுகளில் ஒளிச்செறிவு மிகவும் குறைவான அந்த விறாந்தையிலிருந்து இருள்பூசிய மலைச்சரிவைப் பார்த்துக் கொண்டிருப்பான். அதிகாலைவேளைகளில் பனியைக் கிழித்தபடி விரைந்துசெல்லும் புகையிரதத்தின் அதிர்கின்ற ஓசை படபடக்கும் துப்பாக்கிச் சன்னங்களாக அவன்மீது பாயும். அதைத் தாங்க முடியாமல் அவன் தன்னுடைய தலையை இருகைகளாலும் அமுத்திப் பிடித்துக்கொள்வான்.

அந்தப் புகையிரதம் சிறுவயதுமுதலே அவனுடைய வாழ்வோடு பின்னிப்பிணைந்தது. அவனுடைய பதின்மவயதுக்காலங்கள் அற்புதமானவை. மிகவும் பின்தங்கிய அந்தக் கிராமத்தில் நாகரிகத்தின் முதல் அடையாளமான அந்தத் தண்டவாளத்தையும், அதில் செல்லும் புகையிரதங்களையும் அவன் மிகவும் நேசித்தான். தண்டவாளத்தில் புகையிரதம் அசைந்து செல்லும்போது தன்னுடைய நண்பர்களுடன் சேர்ந்து துரத்திக்கொண்டு ஓடுவான்.

தண்டவாளத்துக்குப் பக்கத்தில் நீர்தேங்கி நிற்கின்ற சிறிய காணித்துண்டொன்று அவனுடைய தாய்க்குச் சொந்தமாக இருந்தது. அங்கு விளைந்திருக்கும் நெற்பயிர்களோடு எந்நேரமும் ஊடாடிக்கொண்டே திரிவான். பக்கத்தில் ஓடுகின்ற வாய்க்கால் நீரில் குதித்து நீந்தி விளையாடுவான்.

அவனுடைய சகோதரன் படையில் இணைந்திருக்கும்வரை வீட்டில் பொருளாதாரச் சிரமங்கள் பெரிதாக இருக்கவில்லை. அவன் சண்டை யொன்றிலே கொல்லப்பட்டு, ஆணியடிக்கப்பட்ட சவப்பெட்டியில் வந்து இறங்கிய பின்னரே வீட்டுநிலைமை தலைகீழாக மாறியது. அதுவரையில் வேலையில்லாமல் சுற்றித் திரிந்தவனுக்குள் கட்டற்ற சுதந்திரத்தை இழந்துவிட்டதான உணர்வு உருப்பெற்றது.

அந்தக் கிராமத்தின் சந்திகள்தோறும் வைக்கப்பட்ட பிரமாண்டமான ஒளிப்படங்கள் அதிவீரமுள்ள கதாநாயகன் குறித்த வண்ணக் கனவுகளை அவனுக்குள்ளே விதைத்தன. அதிக சம்பளம் பற்றிய கவர்ச்சியான அறிவிப்பும், நிறைந்த சலுகைகளும் அகால மரணங்கள் குறித்து அவனைச் சிந்திக்கவிடவில்லை. மிகவும் குறைந்த உயரத்துடன் ஒரு நோஞ்சானாக இருந்தவன், தயக்கத்து டன் வரிசையிலே போய்நின்றான். நம்பமுடியாத அதிசயமாக அவனுக்கு அந்த வேலை கிடைத்தது. தாயின் மன்றாட்டத்தையும் பொருட்ப டுத்தாமல் வேலையில் இணைந்துகொண்டான்.

மூன்றுவருடங்கள் முடிவதற்குள்ளாகவே முள்ளந்தண்டில் கூடுபட்ட தால் இரண்டு கால்களும் முற்றாகச் செயலிழந்தநிலையில் ஒரு குப்பையாக வீட்டுக்கு வந்தான். இடைப்பட்ட காலத்தில் அவனுக்குத் திருமணமாகி இரண்டு பெண்பிள்ளைகளும் பிறந்திருந்தார்கள்.

இறுதியில் மனச்சோர்வும் மற்றவர்களில் தங்கிநிற்கும் வாழ்க்கை யுமே அவனிடம் எஞ்சியிருந்தன. தன்னுடைய மனைவிக்கும் இரு பெண்குழந்தைகளுக்கும் வெறுமையை மட்டுமே அவனால் பரிசளிக்கமுடிந்தது. அன்றாட வாழ்வின் அகநெருக்கடிகளைப் பொறுக்கமுடியாமல் அவனுடைய மனைவி வேலைக்குப் போய்வருகி றாள்.

காலையில் இரண்டு பிள்ளைகளும் பாடசாலைக்குச் சென்று விடுவார்கள். அவனுடைய தாயும் விகாரையிலே போய் ஒட்டிக் கொண்டுவிடுவாள். அவன் மட்டும் தனியாக இந்தக் கட்டிலிலே முடங்கிக்கொள்வான். வெளியே சென்று மற்றவர்களுடன் உரையாட வேண்டும் என்ற எண்ணமும் அவனுக்குத் தோன்றுவதில்லை. சிறுநீர் வாடைவீசுகின்ற இந்தக் கட்டிலும், அசைந்து திரியும் சக்கரநாற் காலியும் தன்னை உயிர்ப்புடன் வைத்திருப்பதாக அவனுக்குத் தோன்றும்.

இறுகிய மனத்துடன் யன்னலினூடாக மீண்டும் பார்வையைச் செலுத்தினான். பிள்ளைகளின் விளையாட்டு இன்னமும் முடிய வில்லை. கொஞ்சநேரம் அமைதியாக அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான். பின்னர் ஏதோ சிந்தனையுடன் சக்கரநாற்காலிக்கு இடம்மாறி மெதுவாக வெளியே வந்தான்.

அவனைக் கண்டதும் சின்னமகள் ஓடிவந்து கழுத்தைக் கட்டிக் கொண்டாள். அவளுடைய நெருக்கம் ஒரு காட்டுப்பூவின் இனிய நறுமணமாக அவனை நெகிழவைத்தது. மூத்தமகள் சக்கரநாற் காலியைப் பிடித்தபடி அமைதியாக நின்றிருந்தாள்.

"மகள். நான் பன்சலக்குப் போகிறேன். சின்னவளைக் கவனமாகப் பார்த்துக்கொள்"

அவள் தலையசைத்தாள். அவன் சக்கரநாற்காலியை உருட்டத் தொடங்கினான். அவர்கள் இருவரும் பின்னால் தள்ளியபடி வாசல்வரை வந்தார்கள். கொஞ்சத்தூரம் போனபின் ஏதோவொரு உள்ளுணர்வில் திரும்பிப் பார்த்தான். அவர்கள் இருவரும் கையசைத்தபடி நிற்பது தெரிந்தது. மனம் இறுகிக் கனத்தது.

பிரதானவீதியிலிருந்து ரஜமகாவிகாரைக்குச் செல்லும் வழியை நோக்கி அவனுடைய சக்கரநாற்காலி நகரத்தொடங்கியது. தண்ட வாளம் மலைச்சரிவோடு ஒரு வளைகோடாகத் திரும்பி வீதியைக் கடந்தது. தடைகள் ஏதுமற்ற இரும்புப்பாதையில் சற்றுச் சிரமத்துடன் ஏறி மறுபுறம் இறங்கினான். தூரத்தில் விகாரையின் வெண்ணிற மான தூபி பசுமையான மலைப்பின்னணியில் அழகாகத் தோன்றியது.

விகாரையின் வாசலில் தேநீர்க்கடை வைத்திருந்த பியதாசவிடம் இரண்டு இனிப்புப்பொதிகளை வாங்கிக்கொண்டான். பிரமாண்ட மான புத்தர்பெருமான் பிரதானவாயிலைப் நோக்கிவாறு தியான நிலையில் அமர்ந்திருந்தார். கருணைபொழியும் அவருடைய முகத்தில் ஞானச்செருக்கு ஏதுமற்ற அமைதி நிரந்தரமாகத் தவழ்ந்தது.

மெதுவாக உள்ளே நுழைந்தான்.

மதிலோரம் வரிசையாக நின்ற தேமாமரங்களின் வெண்ணிறப் பூக்கள் உதிர்ந்து நிலமெங்கும் நட்சத்திரங்களாகப் பரவியிருந்தன. காலையில் சிறுவர்கள் விளையாடித் திரிந்ததால் மண்ணில் உருவாகிய சுவடுகள் ஆங்காங்கே தென்பட்டன. ஆரவாரங்கள் எதுவுமில்லாத வெறுமை அவ்விடத்தை முழுமையாக வியாபித்திருந்தது.

"எப்படியிருக்கிறாய் சமிந்த?"

பின்னாலிருந்து எழுந்த பழகிய குரலைக் கேட்டு மெதுவாகத் திரும்பினான்.

விகாராதிபதி சுமணதிஸ்ஸதேரர் நின்றிருந்தார். வெற்றிலைச் சாயம் பூசிய உதடுகளில் புன்னகை நெளிந்தது. கைகளைக் குவித்துத் தலையை நன்றாகச் சாய்த்து அவரை வணங்கினான்.

"இருக்கிறேன் சுவாமி"

அவனுடைய குரலிலே தென்பட்ட சலிப்புணர்வை அவதானித்தவர் போல அவர் மேலும் புன்னகைத்தார்.

"எதற்காகவும் வருத்தப்படாதே சமிந்த. எப்போதும் உனக்கு நல்லதே நடக்கும்."

அவருடைய ஆறுதல் வார்த்தைகள் அவனைத் தேற்றியவைபோலத் தோன்றவில்லை. ஆழமாகப் பெருமூச்சு விட்டுக்கொண்டான்.

"நான் முன்பு செய்த பாவமான காரியங்கள் எந்நேரமும் என்னை உறுத்திக்கொண்டிருக்கின்றன சுவாமி. சாவதற்கு முன்னர் அவர்களுடைய கண்களில் தெரிந்த கடைசிநேர உணர்வுகளை என்னால் மறக்க இயலவில்லை. அதன் காரணமாக என்னால் பகலில்கூட உறங்க முடிவதில்லை"

அவனுடைய கண்கள் கசிந்தன.

"எதை நினைத்தும் சோர்ந்துபோகாதே சமிந்த. நீ உனது கடமையைத்தான் செய்திருக்கிறாய்"

"நீங்களே இப்படிக் கூறலாமா சுவாமி? அப்போதிருந்த குரோதத்தில் அந்த உயிர்களைப்பற்றி எனக்கு யோசிக்கத் தெரியவில்லை.

ஆரவாரங்கள் எல்லாம் அடங்கிப்போய் இப்போது எல்லோராலும் கைவிடப்பட்ட தனிமையில் எனக்கு நன்றாகப் புரிகின்றது"

அவன் தலையைக் கவிழ்த்துக் கொண்டான்.

"இதற்குப் பிராயச்சித்தமாக ஏதாவது செய்யமுடியுமா சுவாமி?"

அவனுடைய கண்கள் கலங்கிய நிலையில் அவரைப் பார்த்து இரந்தன.

சுமணதிஸ்ஸதேரர் மெல்லச் சிரித்தவாறு வாயில் நிறைந்திருந்த வெற்றிலைச்சாற்றைத் தேமாமரத்தடியில் துப்பினார். அவருடைய குரல் இலேசாகக் கடினப்பட்டது.

"ஒன்றை நினைவில் வைத்துக்கொள் சமிந்த. விடுமுறைக் காலங்களில் ஊருக்கு வரும்போது எம்மிடம் ஆசிபெறுகின்ற அதிகாரிகள் எவரும் உன்னைப்போன்ற குழப்பமான நிலையில் இருப்பதில்லை. மனதை நன்றாகத் திடப்படுத்திக்கொள். புத்தபிரான் உனக்கு அருள்புரிவாராக"

ஏதோ உச்சரித்தபடி மடியிலிருந்து நூலொன்றை எடுத்து அவனுடைய கையிலே கட்டிவிட்டார்.

"உன்னுடைய தாய் விகாரையின் பின்புறத்தில் இருக்கிறாள். முதலில் அவளைப் போய்ப் பார்" என்றவாறு மடத்துப்பக்கம் நடக்கத் தொடங்கினார்.

அவன் தன்னுடைய கையிலே கட்டப்பட்ட வெள்ளைநிற நூலை வெறித்துப் பார்த்தான். அவனுடைய தாய் முன்னர் இதைப்போல எத்தனையோ நூல்களை வாங்கி அனுப்பியிருக்கிறாள். முறையாக மந்திரிக்கப்பட்ட இவ்வகையான நூல்கள் அவனுடைய நண்பர்கள் பலரைக் காப்பாற்றவேயில்லை.

சக்கரநாற்காலியை மெல்ல நகர்த்தியபடி விகாரையின் ஒருபக்கப் பாதையினூடாகப் பின்புறம் சென்றான். அவனுடைய தாய் அடர்ந்து சடைத்திருந்த மாமரத்தின்கீழே குந்தியிருந்து சருகுகளைக் கூட்டிச் சுத்தமாக்கிக் கொண்டிருந்தாள். அவனைக் கண்டதும் கைத்தடியை ஊன்றிக் கொண்டு எழுந்துநின்றாள். அவளுடைய கோலத்தைப்

பார்த்ததும் அவனுக்குள் இரக்கவுணர்வு பீறிட்டது.

அவள் மிகவும் தளர்ந்து தடுமாறியபடி நெருங்கிவந்தாள்.

"எதற்காக இவ்வளவு தூரம் வருகிறாய் மகனே?"

அவளுடைய வார்த்தைகளில் அன்பு வழிந்தது. நடுங்கும் கையினால் அவனுடைய தலையைத் தடவிக்கொடுத்தாள்.

"உங்களைப் பார்க்கவேண்டும் போலிருந்தது அம்மா"

அவனுடைய குரல் இடறியது. சுருக்கங்கள் நிரம்பிய அவளுடைய அழுக்கான கைகளில் முகத்தைப் புதைத்துக்கொண்டான்.

"தந்தை கைவிட்டுச் சென்றபின்னர் சிறுவயதிலிருந்து தங்களை வளர்ப்பதற்கு அவள் எவ்வளவு சிரமப்பட்டிருப்பாள்" என்பதை நினைக்கும்போது அவனுக்கு நெஞ்சை அடைத்தது. மூத்தமகன் இறந்தபோது பாதி உயிரை விட்டிருந்தாள். இவன் காயப்பட்டு வந்தபோது முழுவதுமாய் உடைந்துபோனாள்.

மனத்துயர் மிகுந்த நாள்களில் மலைச்சரிவின் நீரோடைக்கருகில் அவள் அமர்ந்து ஓலமிட்டுப் புலம்புவது இவனுக்குக் கேட்கும். அந்த அழுகை கைவிட்டுப்போன கணவனுக்காகவோ, போரில் கொல்லப் பட்ட மூத்த மகனுக்காகவோ அல்லது ஒன்றுக்கும் உதவாமல் போன இவனுக்காகவோ என்று வேறுபிரித்தறிய முடியாத உணர்வுகளின் கலவையாகவே இருக்கும்.

அருவியுடன் நழுவிச்செல்லும் அவளுடைய அழுகையைக் கேட்க முடியாமல் அவன் காதுகளை இறுக மூடிக்கொள்வான். அவள் தன்னுடைய துயரங்களை மறப்பதற்காகவே பெரும்பாலான பொழுது களை இந்த விகாரையில் முடக்கிக்கொள்கிறாள் என்பதை அவன் அறிவான்.

சற்றுநேரம் கழித்து மெல்லத் தலைநிமிர்ந்தவன், பக்கத்தில் வைத்திருந்த இனிப்புப்பொதியை எடுத்து அவளிடம் நீட்டினான்.

"இவற்றை மகள்களிடம் கொடுத்துவிடுங்கள் அம்மா. நான் கொஞ்சநேரம் பொறுத்து வருகின்றேன்"

"இரவாகிறது மகனே! நானும் உன்னுடன் வருகின்றேனே?" அவள் சக்கரநாற்காலியைப் பற்றினாள்.

"இல்லை அம்மா நான் சமாளித்துக்கொள்வேன். நீங்கள் விரைவாக வீட்டுக்குச் செல்லுங்கள். பிள்ளைகள் இருவரும் தனியாக இருப் பார்கள்"

அவளிடம் விடைபெற்றுக்கொண்டு விகாரையின் வாசலுக்கு வந் தான். மடத்தின் முன்பாகவுள்ள தாமரைத் தடாகத்தின் ஒதுக்கத்தில் சுமணதிஸ்ஸதேரர் இளம்பிக்கு ஒருவரின் தோளில் கையைப் போட்டபடி நிற்பது தெரிந்தது. அவர் இவனைப் பார்த்துவிட்டு மீண்டும் திரும்பிக்கொண்டார்.

விகாரையின் பிரகாசமான மின்விளக்குகள் ஒளியைச் சிந்த ஆரம்பித் தன. புத்தர்பெருமான் கருணை வழியும் அதே விழிகளுடன் அமைதி யாக அமர்ந்திருந்தார். விகாரையைவிட்டு வெளியேறியவன் வலது புறம் திரும்பினான். சரிவான பாதையென்பதால் சக்கரநாற்காலியை நகர்த்துவது இலகுவாயிருந்தது.

தொலைதூரத்து மலைமுகடுகளில் மெல்லிய புகார்ப்படலம் மூடிப் பிடித்திருந்தது. பாதையின் இருபக்கமும் பசுமையான நெற்பயிர்கள் செழித்திருந்தன. வாய்க்காலில் நீர் சுழித்து ஓடிக்கொண்டிருந்தது. அவனுடைய தாய்க்கு முன்பு சொந்தமாகவிருந்த காணியில் சோமரட்ன நெல் விதைத்திருந்தான்.

அவன் அந்தக் காணியையும், வாய்க்காலில் ஓடுகின்ற கலங்கல் நீரையும் நீண்டநேரமாகப் பார்த்துக்கொண்டிருந்தான்.

விகாரைவீதி ஆள்நடமாட்டமற்று வெறிச்சோடிக்கிடந்தது. பியதாசவும் கடையைப் பூட்டிவிட்டான். பதுளைக்குச் செல்லும் இரவுப்புகையிரதம் இந்த மலையைக் கடப்பதற்குச் சற்றுநேரமிருக்கிறது என்பது அவனுக்குத் தெரியும்.

'மனைவி இன்னும் வந்திருக்கமாட்டாள். ஆனாலும், தன்னுடைய தாய் வயல்வரம்புகளில் நடந்து வீட்டுக்குப் போய்ச் சேர்ந்திருப்பாள்' என்று எண்ணிக்கொண்டான்.

இரவுவேளைகளில் தன்னுடன் சேர்ந்து சாப்பிட அடம்பிடிக்கின்ற சின்னமகளை நினைக்கும்போது அவனுடைய கண்கள் கலங்கின. அவளுடைய பிஞ்சுவிரல்களின் தொடுகை இப்போதும் மனதை அள்ளுவதாய் ஒரு பிரமிப்பில் சிலிர்த்துக்கொண்டான்.

பிள்ளைகளைப்பற்றிய நினைவுகளுக்குள் மூழ்கிக்கொண்டிருந்த அவனுக்கு, மிகவும் பரிச்சயமான புகையிரதத்தின் ஓசை தூரத்தில் கேட்கத்தொடங்கியது. சக்கரநாற்காலியை விரைவாக நகர்த்திப் புகையிரதக்கடவையில் ஏறினான்.

எதிரே கருமைபூசிய வானப்பரப்பு அவன்மீது முழுமையாகக் கவிழ்ந்தது. அதில் பெரியதும், சிறியதுமான நட்சத்திரங்கள் முளைத் திருந்தன. அவை பல்லாயிரக்கணக்கான விழிகளாக உருமாறி அவனிடம் எதையோ யாசிப்பதைப்போல மினுங்கின. அவற்றின் பிரகாசிப்பில் வெளிப்பட்ட உணர்வுகளை இப்போது அவனால் வாசிக்கமுடிந்தது. வானத்தை நிமிர்ந்து பார்க்கவே அவன் அஞ்சி னான். அந்த இடத்தைவிட்டு நகர்வதற்கு அவன் முயற்சிக்கவில்லை.

இருளின் பிடிப்புக்குள் கரும்பாம்பாக நெளிகின்ற தண்டவாளத்தின் முடிவில் ஒளிப்புள்ளியொன்று ஒற்றைவிழியாகத் தெரிந்தது. வானத்திலுள்ள நட்சத்திரங்களெல்லாம் ஒன்றாகியதுபோல அது விரிவடைந்து அவனை நோக்கி மிகுந்த வேகத்துடன் முன்னகர்ந்தது. அதன் அதீத ஒளிப்பிரவாகத்தில் வானம் முற்றாக மறைந்து விட்டதுபோல அவனுக்குத் தோன்றியது. சக்கரநாற்காலிக்குக் கீழே தண்டவாளம் தடதடவென்று அதிர்வதை அவனால் உணரமுடிந்தது.

தன்னை நெருங்கி வருகின்ற ஒளியின் உக்கிரத்தைத் தாங்க முடியாமல் அவன் கண்களை இறுக மூடிக்கொண்டான்.

தினக்குரல் (2016)

மனிதநேயப் படைப்பாளியாகவும், சமூகப்
போராளியாகவும் நன்கு அறியப்பட்ட உடுவில்
அரவிந்தனின் சிறுகதைகள் போரையும்
போருக்குப்பின்னரான வாழ்வையும்
நிலைக்களனாகக் கொண்டவை. கலாசிருஷ்டியும் கலை
நேர்த்தியும் எடுத்துரைப்புச் செம்மையும்
வடிவப்பிரக்ஞையும் புனைவுத் தர்க்கமும் கொண்ட இவரின்
சிறுகதைகள் அனுபவச் செறிவு மிக்கவை.
நலிவுற்றோர்மீது போர் ஏற்படுத்திய
ஆறாக்காயங்களையும் மனித இருப்பு
அலைச்சுழிப்புக்குள்ளான பாடுகளையும் பொய்மையுள்
கட்டவிழ்த்துவிடப்படும் சமூகமுரண்களையும் பேசு
பொருளாகக் கொண்டவை ஆத்மசுருதியோடு உயிர்ப்பான,
உணர்வுமிக்க சகஉயிரிகளின் வாழ்வை ஊன்றிநோக்கி
அங்கு நடந்தேறிய சம்பவங்கள், செயற்பாடுகளை
யதார்த்த இயங்கியலுக்கூடாக அறிகை நிலைப்படுத்திய
அரவிந்தனின் சிறுகதைகள் தமிழிலக்கியத்துக்கு வளம்
சேர்ப்பவை.

– சி.ரமேஸ் –

978-955-38336-0-0

9 789553 833600

ஆகாயம் பதிப்பகம், இமையாணன். 0770898554